Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 158 | வள்ளுவர் ஆண்டு: 2044 | சித்திரை 20, வெள்ளி 03.05.2013



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

34°C 28°C

**உலகம்**



பக். 06

முடிந்தது போர் ஒத்திகை தயார் நிலையில் படைகள்

**இந்தியா**



பக். 07

சப்ரஜித் சிங் சாவு: உடலைக் கொண்டுவர நடவடிக்கை

**உள்ளூர்**



பக். 09

வைத்தியசாலை குறைபாட்டை நிவர்த்தி செய்ய கோரிக்கை

**விளையாட்டு**



பக். 23

அணித் தலைவரே காரணம்: குற்றஞ்சாட்டும் அப்ரிடி

# மஹிந்தவின் கவனத்துக்கு காணி பறிப்பு


## விசேட கலந்துரையாடல் அலரி மாளிகையில் விரைவில்

கொழும்பு, மே 3

படையினரின் தேவைக்கு காணிகள் சுவீகரிக்கப்படுவதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்துள்ள நிலையில், இந்த விவகாரம் இப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

காணி சுவீகரிப்பு விவகாரத்தால் மக்கள் அரசின் மீது கடும் ஆத்திரம் அடைந்துள்ளனர். இதனால் விடயத்தை நேரடியாகக் கையாள்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று விரைவில் ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளதாக நம்பகரமாக அறிய முடிகிறது.



கோப்புப்படம்

வடக்கு–கிழக்கில் தமிழ் மக்களின் சுமார் 10,000 ஏக்கர் நிலம் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் மூலம் படைகளின் தேவைக்காகக் கையகப்படுத்தப்படவுள் ளன என்று அதிகாரிகள் கூறுகின்றனர். இதற்கான அறிவித்தல்களும் அந்தந்த இடங்களில் ஒட்டப்பட்டுவிட்டன.

கடந்த திங்கட்கிழமை வலி. வடக்கிலும் காணி சுவீகரிப்பை எதிர்த்து போராட்டம் நடத்தப்பட்டது. அத்துடன் இந்த நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கு–கிழக்கு மாகாணங்களின் காணி ஆணையாளர்கள், காணி சுவீகரிப்பு அலுவலர்கள், அந்தப் பகுதிகளைச் சேர்ந்த அமைச்சர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரை உள்ளடக்கி விரைவில் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளார் என்று தெரிய வருகிறது. (த-5)

# சர்வதேச நீதிமன்றம் செல்வதற்கும் தயார்

## காணி சுவீகரிப்புக் குறித்து மாவை

யாழ்ப்பாணம்,மே3

எங்கள் மக்கள் அவர்களின் சொந்தக் காணிகளுக்குச் செல்ல வேண்டும் இதற்காக சர்வதேச நீதிமன்றம் வரை செல்வோம். அதற்குரிய நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற காணி சுவீகரிப்பைத் தடுப்பது தொடர்பான கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு பிரதேச சபைக்கும் தமது பிரதேசத்திலுள்ள மக்களை முதலில் தெளிவுபடுத்த வேண்டும். காணி சுவீகரிப்புக்கு எதிரான வாழ்வுரிமைக்கான எமது போராட்டம் தொடர்பில் பிரசாரத்தை முன்னெடுக்க வேண்டும்.

நாங்கள் எங்கள் போராட்டங்களை மேற்கொள்வதற்கு பிரதேச ரீதியாக கட்சிக்கு அப்பால் சிவில் சமூகக் குழுக்களையும் உள்வாங்க வேண்டும்.

இதன் மூலம் நாங்கள் தொடர் போராட்டமாக மாவட்ட செயலகத்தை முடக்கும் போராட்டங்களை முன்னெடுப்போம்-என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவிக்கையில் ஆயுதப் போராட்டம் இடம்பெற்ற காலத்தை விட இப்போதுதான் நாங்கள் அதிக அழுத்தத்தைச் சந்தித்துக்கொண்டிருக்கிறோம்.

நாங்கள் ஒவ்வொருவரும் ஆகக் குறைந்தது ஐந்து பேரையாவது திரட்டிப் போராட வேண்டும். எங்கள் இனம் திட்டமிட்ட முறையில் அழிக்கப்படுகின்றது–என்றார். (த-5)

# சாவகச்சேரி பொலிஸுக்கும் மக்களின் காணிகள் பறிப்பு

## அறிவித்தல் நேற்று ஒட்டப்பட்டது

தென்மராட்சி, மே 3

காணி சுவீகரிப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு தனியார் காணி சுவீகரிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான மும்மொழிகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் நேற்று வியாழக்கிழமை காணியின் முன்னால் ஒட்டப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கோயிற்குடியிருப்புகிராம அலுவலர் பிரிவில் கச்சாய் வீதியில் உள்ள 140பேர்ச் காணியே சுவீகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காணியின் நான்கு பக்க எல்லைகள் பற்றிய விவரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து வெளிநாடொன்றில் தங்கியுள்ள ஒருவரின் பெயரில் உள்ள காணியே இவ்வாறு சுவீகரிக்கப்படவுள்ளது.

இவரது காணிக்கு அருகில் உள்ள அவரது சகோதரியின் வீட்டிலேயே உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# சிறீதரன் எம்.பி. விசாரணைக்கு அழைப்பு

கொழும்பு,மே 3

படையினரின் காணி சுவீகரிப்புக் குறித்து ஊடகங்களுக்குத் தகவல் வழங்கியமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் படையினரால் சுவீகரிக்கப்படும் காணிகள் தொடர்பான விவரங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஊடகங்களுக்கு வழங்கினார்

தொடர்ச்சி: பக்கம் 24

# அஸாத் சாலி கைது

கொழும்பு,மே 3

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அஸாத் சாலி, பயங்கர வாத தடைச் சட்டத்தின்கீழ் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்குக் கிடைத்த சில

தொடர்ச்சி: பக்கம் 24

# காணி சுவீகரிப்பு சட்டவிரோதம்

## முன்னாள் காணி ஆணையாளர்

வலி.வடக்கு, மே 3

வலி.வடக்கில் காணி அபகரிப்பு நடவடிக்கைகள் சட்டத்துக்கு அமைவாகவே மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் இவை அனைத்தும் அடிப்படையிலிருந்து காணி சுவீகரிப்பு சட்டத்துக்கு முரணாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் காணி ஆணையாளர் சி.குருநாதன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணி சுவீகரிப்புச் சட்டத்தில், பொதுமக்களின் பொதுத் தேவை கருதியே காணி அமைச்சர் காணி சுவீகரிக்குமாறு கட்டளையிட முடியும் ஆனால் இங்கு

தொடர்ச்சி: பக்கம் 24

# நாவற்குழியில் மீண்டும் சிங்கள மக்கள் வீடமைப்பு

யாழ்ப்பாணம், மே 3

நாவற்குழியில் அத்துமீறிக் குடியேறியுள்ள சிங்கள மக்கள் சட்ட விரோதமாக வீடமைக்கும் நடவடிக்கைகளைக் கடந்த சில நாள்களாக மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

> “ சட்டவிரோதமாக நிரந்தர வீடமைக்கும் பணிகளை தடுத்து நிறுத்தச் சாவகச்சேரி பிரதேச சபை எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.



தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான, நாவற்குழியில் அமைந்துள்ள காணியில் கடந்த 2010 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 78 சிங்களக் குடும்பங்கள் அத்துமீறிக் குடியமர்ந்தன.

ஆரம்பத்தில் இந்தக் குடும்பங்கள் கொட்டில்கள் அமைத்துச் சட்டவிரோதமாகத் தங்கியிருந்தனர். பின்னர் அந்தக் காணிகளுக்குரிய உறுதிகள் வழங்கப்படாமலும் சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதி பெறாமலும் நிரந்தர வீடுகள் அமைக்கும் நடவடிக்கைகளை அவர்கள் தொடங்கியிருந்தனர்.

இருப்பினும் கடந்த ஜனவரி மாதம் இந்தப் பணிகளை அவர்கள் இடைநிறுத்தியிருந்தனர். எனினும் தற்போது அவர்கள் நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இரண்டு குடும்பங்கள் மாத்திரமே தங்கியிருந்து இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை தொடர்பில் லண்டனில் முக்கிய பேச்சு

## இலங்கை மனித உரிமைக் குழு அதிகாரிகளைச் சந்தித்து விவரம் திரட்டினார் பொதுநலவாய செயலாளர் நாயகம்

லண்டன்,மே.03
சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மற்றும் கனடா உள்ளிட்ட நாடுகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் பொதுநலவாய மாநாட்டை நடத்தும் வாய்ப்பு கொழும்புக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் சம்பந்தமாக பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உயர் மட்ட அதிகாரிகளைச் சந்தித்து முக்கிய பேச்சுகளில் ஈடுபட்டுள்ளார்.
லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பிரதீபா சிறிவர்ண மஹாநாமஹேவா, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ், வவுனியா இணைப்பாளர் எம்.ரோஹித பிரியதர்ஷன, மட்டக்களப்பு இணைப்பாளர் அப்துல் கரீம் அப்துல் அஸீஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.
இலங்கையின் தற்போதைய மனித உரிமை நிலவரங்கள், மீள்குடியேற்றம், மும்மொழிக் கொள்கை, வடக்கு, கிழக்கு நிலைவரங்கள் உட்பட பல விடயங்கள் தொடர்பாக பொதுநலவாய செயலாளர் கமலேஷ் ஷர்மா இலங்கைக் குழுவினரிடம் கேட்டறிந்து கொண்டுள்ளார்.
அத்துடன், இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாக்க மேலும் செயற்பாடுகள் அவசியம் என்றும், இனங்களுக்கிடையிலான ஐக்கியம் கட்டியெழுப்பட வேண்டும் என்றும் இதன்போது கருத்து வெளியிட்டுள்ள கமலேஷ் சர்மா, இதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.
கடந்த பெப்ரவரி மாதம் கமலேஷ் ஷர்மா இலங்கைக்கு மேற்கொண்டிருந்த பயணம் சம்பந்தமாகவும், பொதுநலவாய நாடுகள் அமைப்பு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கவுள்ள உதவித் திட்டங்கள் சம்பந்தமாகவும் இச்சந்திப்பில் கருத்துப் பறிமாற்றல்கள் இடம்பெற்றுள்ளன.
பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அமைச்சர்கள் மட்ட நடவடிக்கைக்குழு கூட்டம் கடந்த 26 ஆம் திகதி லண்டனில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் இலங்கை விவகாரம் குறித்து பேசப்படாவிட்டாலும், குறித்த மாநாடு முடிவடைந்தப் பின்னர், ஊடகவியலாளர்களைச் சந்தித்த கமலேஷ் சர்மா, பொதுநலவாய மாநாடு திட்டமிட்ட அடிப்படையில் இலங்கையில் நடைபெறும் என்ற அறிவிப்பை விடுத்தார்.
இலங்கை அரசு, பொதுநலவாய அமைப்பின் கொள்கைப் பிரகடனங்களை மீறிச்செயற்படுவதால் அங்கு மாநாட்டை நடத்தக்கூடாது என சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தொடர்ச்சியாக கோரிக்கைகளை விடுத்துவந்த நிலையிலேயே கமலேஷ் சர்மா இந்த அறிவிப்பை விடுத்தார்.
பொதுநலவாயத்தின் இந்த முடிவானது, கனேடிய அரசுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. இலங்கை மனித உரிமை நிலைவரங்களை கோடிகாட்டி அங்கு மாநாட்டை நடத்தக்கூடாது என கனேடிய அரசு தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### வரணிக்கு வருகிறார் அமைச்சர் புஸ்பகுமார



தென்மராட்சி,மே.3
தென்மராட்சிப் பிரதேசத்தில் தென்னை அபிவிருத்தி அமைச்சின் விசேட செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பான கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு அருகில் இடம்பெறும். யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் தென்னை வள அபிவிருத்தி அமைச்சர் ஜெகத் புஸ்பகுமார, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-9)

### யாழில் பத்திரிகை ஆணைக்குழு அலுவலகம்

யாழ்ப்பாணம்,மே.03
இலங்கைப் பத்திரிகை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. உலக பத்திரிகை சுதந்திர தினமான இன்று, யாழ்ப்பாணம் ரயில் நிலைய வீதி, 117 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இந்த அலுவலகம் பி.ப. 2.30 மணிக்கு திறக்கப்படும். கடந்த 10 வருடங்களாக கொழும்பில் இயங்கிவரும் மேற்படி குழுவின் தலைமையகத்துக்கு அடுத்ததாக யாழ். அலுவலகம் இயங்கும். (அ)

# காணி சுவீகரிப்புத் தொடர்பில் மனித உரிமைக் குழு கவனம்

யாழ்ப்பாணம், மே 3
வலி.வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
வலி.வடக்கு மற்றும் வலி.கிழக்கில் இராணுவத் தலைமையகம் அமைப்பதற்காகப் பொதுமக்களின் 6 ஆயிரத்து 381 ஏக்கர் உறுதிக் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன என அறிவித்தல்கள் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் ஒட்டப்பட்டுள்ளன. இதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கும் பொதுமக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.
இந்த நிலையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவும் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது. காணிகள் சுவீகரிக்கப்படும் உரிமையாளர்கள் தொடர்பான விவரங்கள் மற்றும் காணி உறுதிகள் தொடர்பான விவரங்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு திரட்டவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை, இராணுவத்தினரால் தமது வீடுகள் கைப்பற்றி வைத்திருப்பதற்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய கிளையில் ஏற்கனவே பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# மஹிந்தவைச் சந்தித்தார் ஜப்பான் உதவிப் பிரதமர்



கொழும்பு,மே 03
இலங்கைக்கு வந்துள்ள ஜப்பான் உதவிப் பிரதமர் டாரோ ஆசோ நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.
நேற்று வியாழக்கிழமை காலை அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.
நேற்றுமுன்தினம் இரவு 10:30 மணிக்குக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய ஜப்பான் உதவிப் பிரதமரையும் அவரது பாரியாரையும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வரவேற்றார்.
இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் உள்ள இராஜதந்திர உறவுகளை மேலும் பலப்படுத்தும் நோக்கிலேயே ஜப்பான் உதவிப் பிரதமர் இலங்கை வந்துள்ளதாக இலங்கைக்கான ஜப்பான் தூதரகம் தெரிவித்துள்ளது. (த)

# இல்லப் பொறுப்பாளருக்கு தொடர்ந்து விளக்கமறியல்

தென்மராட்சி, மே 3
கைதடி இரட்சணியசேனை இல்லப் பொறுப்பாளரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.
இல்லத்தில் தங்கியிருந்த சிறுமிகள் முறைப்பாடு செய்ததையடுத்து இவரை நீதிமன்றில் முற்படுத்தியபோது மே 30ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.



கடந்த 30ஆம் திகதி இல்லப் பொறுப்பாளரை நீதிமன்றில் முற்படுத்தியபோது தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-9)

# ஆஸி.குடிவரவு அமைச்சர் இவ்வாரம் இலங்கை வருகை

கொழும்பு,மே 3
இலங்கையுடனான நல்லுறவுகளை மேலும் பலப்படுத்திக் கொள்ளும் ஆஸ்திரேலிய கில்லார்ட் அரசின் கொள்கைக்கு அமைய அந்த நாட்டின் குடிவரவு மற்றும் குடியுரிமை அமைச்சர் பிரெண்டன் ஓ. கோணர் இந்த வாரம் இலங்கைக்கு வருகிறார்.
குடிவரவு மேலாண்மை விடயங்களை மேன்மைப் படுத்திக் கொள்வதற்காக ஆஸ்திரேலிய அமைச்சர் இலங்கையில் முக்கிய அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசுவார் என்று தெரிகிறது.
'இலங்கை எமது முக்கியமான பிராந்திய பங்காளி நாடு. அதனுடனான குடிவரவு தொடர்பான பல விடயங்கள் இந்தப் பயணத்தின் போது பகிர்ந்து கொள்ளப்படும்' என்றார் ஆஸ்திரேலிய அமைச்சர் பிரெண்டன் ஓ.கோணர். (த-ப)

# மீனவரை விடுவிக்கக் கோரி தங்கச்சிமடத்தில் வீதி மறியல்

சென்னை, மே 3
இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க கோரி இராமேஸ்வரம், தங்கச்சிமடத்தில் நேற்று வீதி மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.
சுமார் 500 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர் சங்கங்களைச் சேர்ந்தோர் நேற்றுக் காலை தங்கச்சி மடம் அருகே மீனவர் சங்க தலைவர் போஸ் தலைமையில் வீதி மறியலில் ஈடுபட்டனர். இதனால் அந்தப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.
இதுகுறித்து தகவல் அறிந்ததும் அதிகாரிகள் விரைந்து சென்று மறியல் நடத்தியவர்களுடன் பேச்சு நடத்தினர். எதிர்வரும் 6 ஆம் திகதிக்குள் மீனவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என அதிகாரிகள் உறுதி அளித்தனர். அதன் பின்னர் மறியல் போராட்டம் கைவிடப்பட்டு அனைவரும் கலைந்து சென்றனர்.
இந்திய - இலங்கை கடற்பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். அவர்களை விடுவிக்க வலியுறுத்தி மீனவர்கள் சங்கம் சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ)

# இரு முக்கியமான உடன்படிக்கைகள்

## இலங்கை - இந்தியா இம் மாத இறுதியில் கைச்சாத்து



இழுபறியாக இருந்து வந்த இந்தத் திட்டத்துக்கான உடன்பாடு செய்து கொள்ளப்படுவது உறுதியாகிவிட்டது.

திருகோணமலை,மே 3
திருகோணமலை சம்பூரில் 500 மெகாவோல்ட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை அமைப்பதற்காக, இலங்கையுடன், இந்திய அரசுத்துறை நிறுவனமான என்.ரி.பி.சி இந்த மாத இறுதியில் இரண்டு முக்கிய உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளவுள்ளது.
அயல்நாடுகளின் உட்கட்டமைப்பு வசதிகளில், பொருளாதார மற்றும் மூலோபாய செல்வாக்கை விரிவாக்கிக் கொள்ளும் இந்தியாவின் நோக்கத்தின் ஒரு பகுதியே இந்தத் திட்டமாகும்.
மின்சார கொள்முதல் மற்றும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பான இரு முக்கியமான உடன்பாடுகளே இந்த மாத இறுதியில் செய்து கொள்ளப்படவுள்ளன.
மின்சாரக் கொள்முதல் இழுபறியாக இருந்து வந்த இந்தத் திட்டத்துக்கான உடன்பாடுகள் செய்து கொள்ளப்படுவது தற்போது உறுதியாகி விட்டன என்பதை இந்திய அரச அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.
அதேவேளை, இந்தியா நிர்ணயித்த கூடுதல் விலைக்கு மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய இலங்கை அரசு இணங்கியுள்ளதும், அதற்கு இலங்கையில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தர்மமே மறுபடியும் வெல்லும்

ஜனநாயக நாட்டில் இயங்கும் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் மக்களுடன் ஊடாடி அவர்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்து அல்லது கண்டறிந்து அவற்றை வெளிப்படுத்த வேண்டியது அவற்றின் மிகத் தலையாய பணிகளில் ஒன்றாகும்.

அதன் ஊடாக மட்டுமே குறித்த ஒரு விவகாரத்தில் பொது மக்கள் கருத்தை உருவாக்க இயலும். அதனூடு தீர்வுகளை இனங்காண்பதும் இலகுவானதாக அமையும்.

மக்கள் அல்லது அவர்கள் சார்பில் ஊடகங்கள் கருத்துருவத்தை உண்டாக்குவது எந்த வகையிலும் அரச விரோதச் செயற்பாடாக அமையாது.

ஆனால் எங்கள் நாட்டில், மக்கள் சார்பில் அவர்களின் நலன்கள் நாடி ஊடகங்கள் பணியாற்றும்போது, அவற்றின் மீது அவதூறு பொழிவதிலேயே அதிகார வர்க்கங்கள் ஈடுபாடு காட்டுகின்றன.

ஜனநாயக நாடு ஒன்றில் ஊடகங்கள் மக்கள் சார்பில் கருத்துத் தெரிவிக்கும் பணியை நசுக்கமுயல்வது, நசுக்குவது மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதற்கும் ஒப்பாகும்; சமனாகும். ஒரு வகையில் அது நாட்டை சர்வாதிகாரம் கொண்டு ஆளும் நிலைக்கு ஒப்பானது.

ஊடக சுதந்திரம் உள்ள நாடுகளே அபிவிருத்தியில் மேம்பாடு கண்டு வருகின்றன என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

இன்று அனைத்துலக பத்திரிகைச் சுதந்திர தினம். கடந்த இருபது வருடங்களாக அது உத்தியோகபூர்வமாக மிகப் பல நாடுகளில் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஊடகவியலாளர்களின், ஊடகத் தொழிலாளர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்பதே இந்த ஆண்டுக்கான [2013] ஊடக சுதந்திரத் தொனிப் பொருளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, சகல ஊடகங்களினதும் கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரத்தை தற்காத்துக் கொள்வது என்ற கருப்பொருளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதும் அனைத்துலக பத்திரிகை சுதந்திர சம்மேளனத்தின் அறிவித்தலாக அமைந்துள்ளது. இது எமது நாட்டைப் பொறுத்தவரை, மிக ஊன்றிக் கவனத்தில் கொள்ளத் தக்கது.

அனைத்துலக மனித உரிமை உடன்படிக்கைகள் மற்றும் பிரகடனங்களின் பிரகாரம், மக்கள் சார்பில் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம், ஜனநாயக நாடுகளில் வழுவின்றிப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

எனினும் உலகளாவிய ரீதியில் கடந்த ஆண்டில் 2012 இல் நூற்றிருபத்தொரு [121] ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள் என்பது யுனெஸ்கோ அறிக்கை தரும் தகவலாகும்.

பத்திரிகைச் சுதந்திரத்தைப் பேணுவதில், முன்னர் அனைத்துலக மட்டத்தில் 187 நாடுகளில் இலங்கை 163 ஆவது இடத்தில் இருந்தது. இப்போது 169 நாடுகளில் 153 ஆவது இடத்துக்கு சற்று முன் தள்ளப்பட்டுள்ளது.

எனினும்–

தங்களுக்குள்ள பிறப்புரிமைகளை இழந்து நிற்கும் தமிழ் மக்கள் சார்பில் குரல் கொடுக்கும் ஊடகங்களை குறிவைக்கும் போக்கு குறைந்து போவதாக இல்லை.

உதயனைப் பொறுத்த வரையில், அது தமிழ் மக்கள் சார்பில் , தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பதனைப் பல சக்திகளால் சீரணித்துக்கொள்ள முடியவில்லை.

அதனால், சுமார் ஒரு தசாப்தத்துக்கு மேலாக அவனை முடக்குவதற்கு ஆண்டுக்கு ஆண்டு வெவ்வேறு வகை சார்ந்த நாசகாரச் செயல்களை கட்டவிழ்த்து விட்டார்கள்; விடுகிறார்கள்.

நோக்கம் ஒன்று, மார்க்கங்கள் வெவ்வேறு என்ற பாணியில், ஆகப் பிந்தி, புத்தாண்டுக்கு முதல் நாள் [13.04.2013 இல்] பத்திரிகை அச்சிடும் பிரதான இயந்திரத்தை நாசமாக்கினர். முன்னர் பல ஊடகப் பணியாளர்களின் உயிர்களைக் குடித்த அதே பாணியில் முகமூடி அணிந்த "இனந்தெரியாதவர்கள்" இம்முறையும் தமது கைவரிசையைக் காட்டிச் சென்றனர்.

எனினும், தர்மத்தின் வழி நின்று தமிழ் மக்களின் சார்பில் குரல் கொடுக்கும் ஊடகம் என்பதால், உதயன் தனக்குரிய பணியைத் தொடர்கின்றான்.

உதயனின் ஊடகப் பணி பல இழப்புக்களையும் சவால்களையும் எதிர்கொள்ள நேர்ந்துள்ள போதிலும், அதன் வாசகர் பெரு மக்களினதும், பணியாளர்களினதும் அர்ப்பணிப்புடன் தொடர்ந்து ஒளி தருகின்றான்.

மக்கள்– வாசகர்கள்–தரும் ஆதரவு அவன் எதிர்கொள்ளும் இன்னல்களை ஆற்றுப்படுத்த பேருதவியாக இருக்கும் என நம்புவோம்.

தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தர்மம் மறுபடி வெல்லும்

[பாரதியார்– பாஞ்சாலி சபதம்]

# படையினரின் நிலப்பறிப்பை எதிர்த்து வலுவான போராட்டங்கள் அவசியம்

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மே தினப் பிரகடனம்

வடமராட்சி,மே 3

தமிழர் தாயகம் முழுவதும் திட்ட மிட்ட வகையில் சட்ட ரீதியான நிலப்பறிப்பு முயற்சிகள் இடம் பெறுகின்றன. சிங்களக் குடியேற்றங்களுக்கு அப்பால் படையினருக்கான நிலப் பறிப்புத்தான் கொடூரமாக உள்ளது. தமிழர் தாயகத்தின் எந்தப் பகுதிகளும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. இந்த நிலப்பறிப்புக்கு எதிராக தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலும், புலம்பெயர் நாடுகளிலும், தமிழகத்திலும் வலுவான போராட்டங்களை முன்னெடுப்போம்.

இதன் முதற்கட்டமாக முறையான ஆவணப்படுத்தல் நடவடிக்கைகளையும் முறையான பிரசார நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம்.

இவ்வாறு கரவெட்டியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தினக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மே தினப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

பிராந்திய மேற்குலக சக்திகள் இலங்கையில் ஓர் ஆட்சி மாற்றத்தை மட்டும் கொண்டு வர வேண்டும் என்பதற்காக ஜெனிவாவில் பலவீனமான தீர்மானங்களை எடுத்திருக்கின்றன. நல்லிணக்கத்துக்கும் பொறுப்புக் கூறலுக்கும் உள்ளகச் செயற்பாடுகளை அவை வற்புறுத்தி இருக்கின்றன. இது இயற்கையின் நியதிக்கு முரணானது என்பதோடு , இனப்படுகொலைக்கு முகம் கொடுத்த தமிழ் மக்களை அவமானப்படுத்துவதாகவும் உள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் நல்லிணக்கத்துக்கு சுயநிர்ணயத்துடன் கூடிய அரசியல் தீர்வையும், பொறுப்புக் கூறலுக்கு சர்வதேச விசாரணையையும் வலியுறுத்துகின்றோம்.

தற்போது பிராந்திய மேற்குலக சக்திகளினாலும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினாலும் நகர்த்தப்படுகின்ற அரசியல் தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் உதவப்போவதில்லை என்பதால் அவற்றை நிராகரித்துச் சுயநிர்ணய பாதையுடன் கூடிய மாற்று அரசியலை முன்னெடுப்போம்.

தமிழ்த் தேசத்தின் நலன்களின் அடிப்படையில் தமிழ்த்தேசத்துக்கான அரசியல், பொருளாதார, சமூக, கலாசார கொள்கைகளை உருவாக்கி முன்னெடுப்போம்.

தமிழ்த் தேசத்துக்கான வலுவான வெளிவிவகாரக் கொள்கையை உருவாக்கி செயற்படுத்துவோம்.

நிலம், புலம், தமிழகம் என்பவற்றை ஒரு நேர்கோட்டில் கொண்டுவந்து ஒருங்கிணைந்த செயற்பாட்டை முன்னெடுப்போம்.

தமிழக மக்களின் எழுச்சியை நன்றியோடு வரவேற்பதுடன் இந்த எழுச்சி தமிழகத்தையும் தாண்டி இந்தியா முழுவதும் முன்னேற முழு ஒத்துழைப்பினையும் வழங்குவோம்.

> இன ஒடுக்குமுறைக்கும், வர்க்க ஒடுக்குமுறைக்கும் ஒருங்கே முகம் கொடுக்கும் தமிழ்த் தொழிலாளர்கள், கூலி விவசாயிகள், மீனவர்கள் என்பவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்போம்.

''உலகத் தமிழர்'' என்ற பொது அடையாளம் வளர்ச்சிபெற நாமும் ஒத்துழைப்பு வழங்குவோம்.

இடைக்கால நிர்வாகம் ஒன்றை உருவாக்க வலுவான அழுத்தங்களை கொடுப்போம்.

இன ஒடுக்குமுறைக்கும், வர்க்க ஒடுக்குமுறைக்கும் ஒருங்கே முகம் கொடுக்கும் தமிழ்த் தொழிலாளர்கள், கூலி விவசாயிகள், மீனவர்கள் என்பவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்போம்.

தமிழ்ப் பெண்கள் தாம் சந்திக்கும் ஒடுக்கு முறைகளிலிருந்தும், சுமைகளிலிருந்தும் விடுபட அனை வரும் ஒத்துழைப்பு வழங்குவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

# கொள்கைகளை ஏற்றுக் கொண்டால் கூட்டமைப்புடன் இணையத் தயார்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவிப்பு

வடமராட்சி, மே 3

எமது கொள்கைகளை ஏற்றுக் கொண்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒன்றாக இணைந்து செயற்பட தயாராக இருக்கின்றோம். கொள்கைகளை ஏற்காவிட்டால் ஒற்றுமைக்கு நாம் தயாரில்லை.இவ்வாறு தமிழ்த் தேசிய முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று முன்தினம் மாலை கரவெட்டி சாமியன் அரசடி வைரவர் கோயிலடியில் நடைபெற்ற முன்னணியின் மே தினக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

சட்டத்தரணி பா.பார்த்தீபன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ், ''நான் ஒரு தூதுவனாக இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளேன். எங்கள் கரங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நீங்கள் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிக்க வேண்டும். எதிர்வரும் இரண்டு வார காலத்துக்குள் இதற்கான முடிவை எடுக்க வேண்டும். சுரேஷ் பிரமேச்சந்திரன் கூட ஒன்று சேருமாறு அழைப்பு விடுத்துள்ளார். தமிழரசுக் கட்சி தனியே நின்றால் நிற்கட்டும். 5 கட்சிகளும் ஒன்றாக இருக்க வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

தனியாக நின்று இயங்குவதை விட ஒற்றுமையாக நின்று போராடுவதுதான் நல்லது. ஒற்றுமையே பலம். ஒற்றுமையாக நின்று எமது பலத்தைக்காட்டுவோம்'' எனக் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக முன்னணியில் அங்கம் வகிக்கும் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆர்.இ.ஆனந்தராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகிய மூவரும் முன்னணியின் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தாம் இணைய முடியும் எனத் தெரிவித்தனர்.

இது குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எம்மை ஒன்றிணையுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுகின்றது. எமக்கு கட்சிச் சின்னம் பதவிகள், கொடிகள் என்பன முக்கியமல்ல. கொள்கை தான் முக்கியம். கடந்த 2009 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வைத்திருந்த கொள்கைதான் எமது கொள்கை. அதில் நாம் மாறவில்லை. கூட்டமைப்பே அந்தக் கொள்கையில் இருந்து மாறியது என்றார்.

தமிழத் தேசிய முன்னணி நேற்று முன்தினம் கரவெட்டி சாமியன் அரசடி வைரவர் கோயிலடியில் மே தினத்தை நடத்தியது.

பிற்பகல் 3.30 மணிக்கு கொடிகாமம்– நெல்லியடி வீதி அரசடிச் சந்தியில் இருந்து மேதினப் பேரணி ஆரம்பமாகி கூட்ட மைதானத்தை வந்தடைந்தது.

பேரணியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செ.கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆர்.இ.ஆனந்தராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த-4-8)

# உதயனை கடுமையாக சாடினார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம்,மே 3

தமது கட்சி ஆர்ப்பாட்டம் செய்வது தொடர்பில் செய்தி எதனையும் பிரசுரிக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆர்ப் பாட்டம் செய்வது பற்றியே 'உதயன்' பத்திரிகை செய்தி வெளி யிட்டுள்ளது என்று சாடிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இது 'கேவலம்' என்றும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது மே தினத்தை கரவெட்டி அரசடியிலுள்ள ஞான வைரவர் ஆலய முன்றலில் நேற்று முன்தினம் பிற்பகல் நடத்தியது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வலி.வடக்கில் காணி சுவீகரிப்புத் தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவித்தல் ஒட்டப்பட்டுவிட்டது. அதனைத்தடுத்து நிறுத்துமாறு மக்கள் கூட்டமைப்பினரிடம் கோரினர். எனினும் கூட்டமைப்பினரோ தாம் அதனைக் கையளிப்பதாகவும் அது தொடர்பில் கடிதம் அனுப்புவதாகவும் மக்களிடம் கூறியுள்ளனர். கூட்டமைப்பினர் அது பற்றிப் போதிய கவனம் செலுத்தாமையால் மக்கள் எம்மிடம் வந்து நடவடிக்கை எடுக்கக் கோரினர்.

அதன் அடிப்படையில் யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகக் கடந்த 24 ஆம் திகதி எமது கட்சி ஆர்ப்பாட்டம் செய்வதாக அறிவித்தது. அது தொடர்பில் 'உதயன்' பத்திரிகை செய்தி பிரசுரிக்கவில்லை. மாறாகக் கூட்டமைப்பினர் 29 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத் துகின்றனர் என, 24 ஆம் திகதி 'உதயன்' செய்தி பிரசுரித்திருந்தது. இது கேவலமானது – என்றார் அவர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**துரைராசா கிரிகரன் (B.A)**

அவர்கள் இன்று (03.05.2013) வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் (லண்டன்) MBA பட்டம் பெறுவதையிட்டு மனதார வாழ்த்துகின்றோம். மேன்மேலும் பட்டங்களைப் பெற்றுப் பதவி உயர்வு பெறப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: **குடும்பத்தினர்.**
உரும்பிராய் கிழக்கு.
(36998)(2.6)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
**அ.மயூரனின்** அன்புத் தந்தை

### தில்லையம்பலம் அம்பலவாணர்

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து துயரடைவதோடு, அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்,
வலி.தெற்கு பிரதேச செயலகம். (C/8823)(23-14)

நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், வலி.தெற்கு.

## மரண அறிவித்தல்



அருட் சகோதரி

**மேரி றீற்றா கிறிசோஸ்ரோம் - தி.கு**

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட் சகோதரி மேரி றீற்றா கிறிசொஸ்ரோம் நேற்று (02.05.2013) வியாழக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரது பூதவுடல் நாளை (04.05.2013) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருட் சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ்
(மாகாணத் தலைவி).

121, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (36988) (45.6.7)

## பவள விழாவும் 75ஆவது அகவை நிறைவும்



உயர் திரு
**K.N.இராஜரட்ணம்**
(Vanikaa Medicals உரிமையாளர்)

இன்று 03.05.2013 வெள்ளிக்கிழமை 75ஆவது அகவை நிறைவு காணும் எமது நிறுவனத்தின் தலைவர் மேன்மேலும் தனது பணியில் சிறப்புற்று விளங்க வாழ்த்தும்

Best Wishes

203, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பு உள்ளங்கள்.
Vanikaa Medicals ஊழியர்கள்.

## New Degree College

மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக

**A/L 2015**

கலை வர்த்தப் பிரிவு II
ஆரம்பம்:- 04.05.2013சனி 8.00 a.m
யாழ்நகரின் தலைசிறந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்

## New Degree College

மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக

G.A.Q 2013. யாழ்., பேராதனை துரித மீட்டல் விரிவுரைகள்
ஆரம்பம்: 04.05.2013சனி 8.00 a.m
G.A.Q யாழ்., பேராதனை புதிய விரிவுரைகள்
ஆரம்பம்: 04.05.2013 சனி 9.00 a.m

## காணி விற்பனை

கோப்பாய் மத்தி, கோப்பாயில் நல்ல சுற்றாடலில் குறைந்த விலையில் 2 பரப்பு 12 குளி காணி விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு:- 0774285777, 0773561322


## வருடாந்த பொதுக்கூட்டம்

வேலணை மேற்கு, பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த பொதுக்கூட்டம் **05.05.2013 ஞாயிற்றுக்கிழமை** மு.ப 10.00 மணிக்கு மேற்படி ஆலய மணி மண்டபத்தில் தலைவர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு ஆலயத்துடன் தொடர்புடைய திருவிழா,விசேட திருவிழா உபயகாரர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பரிபாலன சபை,
பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம், வேலணை மேற்கு.
(36994)(6.7.11)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

## 05.05.2013 ஞாயிற்றுக்கிழமை



நாகரத்தினம் - செல்லச்சரஸ்வதி
அமிர்தலிங்கம் - புஸ்பதேவி
நாகரத்தினம் - சவுந்தரராசா
சவுந்தரராசா - ஜெயபிரதா
இராசகுலசிங்கம் - சசிப்பிரியா
இராசகுலசிங்கம் - அருந்துஸா
இராசகுலசிங்கம் - ஜதுர்சினி

கடந்த 05.05.2009 அன்று அகாலமரணமடைந்த முள்ளிவாய்க்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்களின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் 05.05. 2013 ஞாயிற்றுக்கிழமை முள்ளிவாய்க்கால் மேற்கில் உள்ள அவர்களது இல்லத்தில் நடைபெறும். இந்த ஆத்ம சாந்தி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாகரத்தினம் செல்லச்சரஸ்வதி குடும்பத்தினர்.
முள்ளிவாய்க்கால் மேற்கு.
அழகுமணி - அமிர்தலிங்கம்.
(C/8820)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கொழும்பு பஸ்ஸுக்குக் கல்லெறி இரவில் அந்தரித்தனர் பயணிகள்

## கைதடியில் நேற்றுமுன்தினம் இரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,மே 3
தனியார் அரை சொகுசு பஸ் மீது கல்லெறித் தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து பஸ்ஸில் பயணித்த 42 க்கும் மேற்பட்ட பயணிகள் இரவு நேரம் தொடர்ந்து பயணத்தை மேற்கொள்ள முடியாமல் அந்தரித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் இரவு 8.30 மணியளவில் கைதடிப் பகுதியில் இடம்பெற்றது.
யாழ்ப்பாணம்-கொழும்புக்கு இடையிலான போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் அரை சொகுசு பஸ் கைதடிப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தது.
இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இரு நபர்கள் பஸ்ஸின் முன்பக்கக் கண்ணாடி மீது சரமாரியாகக் கல்லெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.
இந்த அரைச் சொகுசு பஸ் வழி அனுமதிப் பத்திரம் இல்லாமல் யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் சந்தியூடாக மாற்றுப் பாதையில் சேவையில் ஈடுபடுவதை அறிந்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது பஸ்ஸில் பயணித்த 42 க்கும் மேற்பட்ட பயணிகள் பாதுகாப்பின்றி இடைநடுவில் இறக்கிவிடப்பட்டனர்.
அதனைத் தொடர்ந்து இன்னொரு பஸ் ஒழுங்கு செய்யப்பட்டு இரவு 9.30 மணிக்குப் பின்னர் இந்தப் பயணிகள் தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இது தொடர்பாக தனியார் பஸ் சங்கத்தின் உபதலைவர் பொ.கெங்காதரனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, குறித்த பஸ் சங்கத்தில் பதிவு செய்யப்படவில்லை. தாக்குதல் சம்பவம் தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. அதனால் எதுவும் கூறமுடியாது-என்றார். (த-14-4)

**அனுமதிப் பத்திரம் இல்லாமல் யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் சந்தியூடாக மாற்றுப் பாதையில் சேவையில் ஈடுபடுவதை அறிந்தே தாக்குதல் நடத்தப்பட்டது.**

## கனகன்புளியடி- சரசாலை வீதிக்கு மின் விளக்குகள்



தென்மராட்சி,மே 3
சாவகச்சேரி பிரதேச சபை, சரசாலை உப அலுவலக எல்லைக்குட்பட்ட கனகன் புளியடி- சரசாலை வீதிக்குப் பொதுமக்கள் பங்களிப்புடனான மின் விநியோகத் திட்டத்தில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.
சுமார் மூன்று கிலோமீற்றர் நீளமான வீதிக்குப் பிரதேச சபை உறுப்பினர் ச.ஞான லிங்கத்தின் கோரிக்கையின் பிரகாரம் பிரதேச சபை நிதி மூலம் தெருவிளக்குப் பொருத்தும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு நேற்று முன்தினம் விளக்குகள் ஒளிரத் தொடங்கின.
தென்மராட்சி- வடமராட்சி இணைப்பு வீதியாகக் காணப்படும் இந்த வீதிக்கு விளக்குகள் பொருத்தப்பட்டமைக்கு அந்தப் பகுதி மக்கள் பிரதேச சபைக்கு நன்றி தெரிவித்துள்ளனர். (த-9)

## கட்டுவன், தெல்லிப்பழை ஊடாக மீண்டும் மினிபஸ் சேவை ஆரம்பம்


வலி. வடக்கு, மே 3
கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்வரை கட்டுவன், தெல்லிப்பழை ஊடாக இடம்பெற்றுவந்த தனியார் மினிபஸ் சேவை, பாதுகாப்பு இல்லையெனக் கூறி இடைநிறுத்தப்பட்டிருந்தது.
எனினும்தற்போது இந்த மினிபஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



தெல்லிப்பளை பொலிஸாரின் தலையீட்டைத் தொடர்ந்து இந்த சேவையை நடத்த தனியார் மினி பஸ் சங்கத்தினர் இணங்கியதைத் தொடர்ந்து தனியார் மினிபஸ் சேவை மீண்டும், மே தினம் முதல் ஆரம்பமாகியுள்ளதாக காங்கேசன்துறை தனியார் மினிபஸ் சங்கத்தலைவர் ந.இன்பராஜ் தெரிவித்துள்ளார்.
கடந்த மாதம் தெல்லிப்பழை சந்தியில் இரவு தனியார் மினி பஸ் ஒன்று மது போதையில் வந்தவர்களினால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பு இல்லையெனக் கூறி தனியார் மினி பஸ் சங்கத்தினர் கட்டுவன் தெல்லிப்பழை ஊடான மின்பஸ் சேவையை தற்காலிகமாக நிறுத்தி இருந்தார்கள்.
கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடேஸ்வராக் கல்லூரியில் இடம்பெற்ற பொலிஸார், சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் மற்றும் மினி பஸ் சங்க உறுப்பினர்களுக்கு இடையே இடம்பெற்ற கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட முடிவைத் தொடர்ந்து மீண்டும் தனியார் மினிபஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஒ-86)

## இரு வீதிகள் பொதுமக்கள் பாவனைக்கு

தென்மராட்சி, மே 3
சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இரு வீதிகள் நேற்று முன்தினம் பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டன.
'நெல்சிப்' திட்டத்தில் புனரமைக்கப்பட்ட, வரணி அம்மா கடை வீதியும், 'புறநெகும' திட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கரம்பகம்- விடத்தற்பளை வீதியுமே நேற்று முன்தினம் பொதுமக்களது பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டன.
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் வீதிகளை வைபவ ரீதியாக நாடா வெட்டித் திறந்து வைத்தார்.
இந்த நிகழ்வில் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் சூ.அலெக்ஸாண்டர், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ச.ஞானலிங்கம், பிரதேச செயலர், பிரதேச சபை செயலாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.
இரு வீதிளும் ஒவ்வொன்றும் சுமார் மூன்று கிலோ மீற்றர் நீளமானவை என்பது குறிப்பிடத்தக்கது. (த-9)



நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் இராஜ கோபுரக் கட்டுமானப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. (த-7)

## பனை, தென்னை சங்கத்தின் மே தினம்

தென்மராட்சி, மே 3
சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மே தினக் கூட்டம் நேற்று முன்தினம் பி.ப. 2 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெற்றது.
சங்கத் தலைவர். சி.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற தொழிலாளர் தின நிகழ்வில் சாவகச்சேரி கொடிகாமம் ஆகிய சங்கங்களின் அங்கத்தவர்கள் பணியாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.
இந்த விழாவில் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் சூசைமுத்து அலெக்ஸாண்டர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். (த-9)

# கடற்படை முகாம்களில் உள்ள மீனவரின் படகுகளைத் தந்து உதவுங்கள்

## வடமாகாண கட்டளைத் தளபதியிடம் கோரிக்கை

வலி. வடக்கு, மே 3
கடந்த கால போரினால் கைவிடப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத பல படகுகள் பருத்தித்துறை மற்றும் சுண்டிக்குளம் கடற்படை முகாம்களில் காணப்படுகின்றன.
இத்தகைய படகுகளை யாழ் மாவட்ட கடல் தொழிலாளர் சங்கத்திடம் கையளிக்க வேண்டும் என வட மாகாண கடற்படை கட்டளை அதிகாரியிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.
கடந்த காலப் போரால் பாதிக்கப்பட்டு கடல்தொழிலை உரிய முறையில் மேற்கொள்ள முடியாத கஷ்டங்களுடன் காலத்தைக் கழித்து வரும் தொழிலாளர்கள் பலர் உள்ளனர்.
அவர்களின் பல படகுகள் பருத்தித்துறை மற்றும் சுண்டிக்குளம் பகுதிகளில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.
இத்தகைய படகுகளை சங்கத்திடம் கடற்படையினர் கையளிக்கும் சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க முடியும் என யாழ் மாவட்ட கடல்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி மூலம் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.
விரைவில் இதுசம்பந்தமாக உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி குறிப்பிட்ட படகுகளை சங்கத்திடம் கையளிப்பது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-86)

**கடற்றொழிலாளர்கள் கடந்த காலப் போரால் பாதிக்கப்பட்டு கடல்தொழிலை உரிய முறையில் மேற்கொள்ள முடியாத கஷ்டங்களுடன் காலத்தைக் கழிக்கின்றனர்**

## ரூ.15 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,மே 3
அனுமதிப் பத்திரத்தில் அனுமதிக்கப்பட்டதைவிட மேலதிகமாக மணல் ஏற்றிச் சென்றவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.
அரியாலையைச் சேர்ந்த பாக்கியநாதன் சிவரூபன் என்பவரே டிப்பரில் இவ்வாறு மணலை ஏற்றிச் சென்றபோது, ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் பிடிபட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டது.
நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, சந்தேகநபர் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதை அடுத்து அவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதன்முறையாக விண்வெளியில் வெளியிடப்பட்ட பணத்தாள்

ரொறொன்ரோ, மே.3
கனடாவில் முதன் முறையாக பூமியின் மீது ஆயிரக்கணக்கான கி.மீ. உயரத்தில் விண்வெளியில் பறந்து கொண்டிருந்த நிலையில் விண்வெளி வீரர் கிறிஸ் ஹேட் பீல்ட் என்பவர் அங்கிருந்த படியே 10 டொலர் மற்றும் 5 டொலர் மதிப்புள்ள பொலிமர் புதிய தாள்களை வெளியிட்டுள்ளார்.
குறித்த 10 டொலர் தாளில் தொடர்வாகனத்தின் படமும், 5 டொலர் தாளில் இயந்திர மனிதர்களின் படங்களும் அச்சிடப்பட்டிருந்தன. காணொலிக் காட்சி மூலமாக புதிய டொலரை வெளியிடும் நிகழ்ச்சி நடைபெற்றது.(ற)


பலஸ்தீனியர் ஒருவர் இஸ்ரேல் சிறையில் உயிரிழந்ததை அடுத்து வெஸ்ற் பாங் நகரில் இஸ்ரேலிய பொலிஸாருக்கு எதிராகத் தாக்குதலை மேற்கொள்ளும் பலஸ்தீனிய இளைஞர்கள்.

## பங்களாதேஷின் முதற் பெண் சபாநாயகர்

டாக்கா, மே.3
பங்களாதேஷில் முதலாவது பெண் சபாநாயகராக ஷிரின் ஷர்மின் சவுத்ரி பதவி ஏற்றுள்ளார்.
பங்களாதேஷ் பிரதமராக ஷேக் ஹசீனா உள்ளார். அவரது அமைச்சரவையில் பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரத்துறை அமைச்சராக இருந்தவர் ஷிரின் ஷர்மின். அவாமி லீக் கட்சியின் சார்பில் இவரை சபாநாயகராக்க, ஒரு மனதாக முடிவு செய்யப் பட்டது. அதையடுத்து, ஷிரின் ஷர்மின், சபாநாயகராக அறிவிக்கப்பட்டார்.
ஜனாதிபதி அப்துல் ஹமீத், ஷிரின் ஷர்மினுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். 47 வயதான ஷிரின், வங்க தேசத்தின் இளம் சபாநாயகராக கருதப்படுகிறார். பிரிட்டனில் உள்ள எசக்ஸ் பல்கலைக் கழகத்தில், மனித உரிமைகள் தொடர்பான கற்கை நெறியில், ஷிரின், டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். (ற)

## மோடிக்கு வழங்க வேண்டாம் விசா

### அமெ. காங்கிரஸ் பரிந்துரை

நியூயோர்க், மே 3
குஜராத் முதல்வர் நரேந்திர மோடிக்கு விசா வழங்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை தொடர வேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் சபையால் நியமிக்கப்பட்ட குழு ஒன்று அமெரிக்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.
அமெரிக்க காங்கிரஸ் சபையால் நியமிக்கப்பட்ட சர்வதேச மத சுதந்திரத்துக்கான அமெரிக்க ஆணையகம் வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில், குஜராத்தில் நடைபெற்ற கலவரத்தில் சுமார் 2 ஆயிரம் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.
இந்த சம்பவத்தில் நரேந்திர மோடிக்கு தொடர்பு இருப்பதற்கான குறிப்பிடத்தக்க ஆதாரங்கள் உள்ளன. இதனால் மோடிக்கு விசா வழங்குவதில் உள்ள தடையை தொடர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# முடிந்தது போர் ஒத்திகை தயார் நிலையில் படைகள்

## தென்கொரிய இராணுவ அமைச்சகம் அறிவிப்பு

சியோல், மே 3
அமெரிக்காவுடன் இணைந்து நடத்தப்பட்ட போர் ஒத்திகைகள் நிறைவுக்கு வந்துள்ளன என்று அறிவித்துள்ள தென்கொரியா, தமது இராணுவத்தினர் எதையும் எதிர்கொள்ளும் திறனுடன் தயார் நிலையில் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.
போர் ஒத்திகை குறித்துக் கருத்துத்தெரிவித்துள்ள தென்கொரிய இராணுவ அமைச்சகம்,
"அமெரிக்காவுடன் இணைந்து நடத்தப்பட்டுவந்த போர் ஒத்திகைகள் தற்போது நிறைவுக்கு வந்துள்ளன. குறித்த பயிற்சிகளில் 10 ஆயிரம் தென்கொரிய இராணுவத்தினரும், 3 ஆயிரத்து 500 அமெரிக்க இராணுவத்தினரும் பங்கேற்றனர். தொடர்ச்சியாக 2 மாதங்கள் நடைபெற்ற இந்த ஒத்திகைகள் தற்போது நிறைவு பெற்றுள்ளன. இந்த ஒத்திகைகளின் போது தரை, கடல், வான் வெளித் தாக்குதல்கள் குறித்த பயிற்சிகள் இடம்பெற்றன.
போர் ஒத்திகை நிறைவுற்ற போதும் எந்த அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளும் வகையில் தென்கொரிய இராணுவம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிகளின் மூலம் தென்கொரிய இராணுவத்தின் பலத்தை அறிந்துகொள்ள முடிந்தது," என்று தெரிவித்துள்ளது.



அமெரிக்காவுடனான போர்ப் பயிற்சிகள் நிறைவுக்கு வந்த போதும் கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றம் தணியும் சாத்தியங்கள் காணப்படவில்லை என்று சர்வதேச அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர்.(ற)

## குடித்தொகை அதிகரிப்புக்கு சிங்கப்பூரில் எதிர்ப்பு

கோலாலம்பூர், மே 3
சிங்கப்பூரில் மக்கள் தொகையை அதிகரிக்க அரசு வகுத்துள்ள திட்டத்துக்கு எதிராக அசாதாரணமான எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது. இதில் சுமார் மூவாயிரம் பேர் பங்குபெற்றுள்ளனர்.
வெளிநாட்டினரைக் கொண்டு சிங்கப்பூரின் மக்கள் தொகையை உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.
ஒரு நகரத்தை மட்டுமே நாடாகக் கொண்டுள்ள சிங்கப்பூர் ஏற்கனவே சன நெருக்கடி மிகுந்த இடமாக உள்ளது என்று அந்தத் திட்டத்துக்கு எதிரானவர்கள் கூறுகின்றனர்.
தற்போது அங்கிருக்கும் வெளிநாட்டவர்களாலேயே அங்கு வருமானம் அதிகரிக்காமல் ஸ்தம்பித்தும் உள்ளது என்றும், வீட்டின் விலைகள் இரட்டிப்பாகியுள்ளது என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.
அங்கு பிறப்பு வீதம் மிகவும் குறைவாக இருக்கும் காரணத்தால் 2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் மக்கள் தொகையை முப்பது சத வீதம் அதிகரித்து 69 லட்சம் அளவுக்கு கொண்டு வர ஆட்சியில் இருக்கும் மக்கள் செயல் கட்சி திட்டங்களை முன் வைத்துள்ளது.
மக்கள் செயல் கட்சியின் தலைமையிலான அரசே 1965 ஆம் ஆண்டு சிங்கப்பூர் சுதந்திரம் அடைந்ததிலிருந்து ஆட்சி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# கைகலப்பு

## அதிர்ந்தது வெனிசுவேலா நாடாளுமன்று

கராக்கஸ், மே 3
வெனிசுவேலா நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மோதிக் கொண்டதால் அமளி ஏற்பட்டது. ஹியூகோ சாவேஸின் மறைவை அடுத்து வெனிசுவேலா ஜனாதிபதியாக நிகோலாஸ் மதுரோ பொறுப்பேற்றுள்ளார்.
எனினும் அவரது பதவியேற்பை ஏற்க மறுத்துள்ள எதிர்க் கட்சியினர், நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து அரசுக்கு எதிராக நாடாளுமன்றில் கோஷங்களை எழுப்பியமையால் ஒருகட்டத்தில் ஆளுங் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது.
அப்போது, இரு தரப்பினரும் சரமாரியாக தாக்கிக் கொண்டனர். நாற்காலிகளும், கணினிகளும் தூக்கி வீசப்பட்டன. இந்த மோதலில் இரு தரப்பிலும் பல உறுப்பினர்கள் காயமடைந்தனர்.
நாடாளுமன்றத்தில் தங்களுக்கு பேச்சுரிமை மறுக்கப்படுவதாக கூறியுள்ள எதிர்க் கட்சியினர், அரசுக்கு எதிராக தொடர் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர். (ற)



ஜனாதிபதி நிக்கொலஸ் மதுரோவுக்கு எதிராக ஆர்ப்பட்டங்களை மேற்கொள்ளும் எதிர்க்கட்சியினர்.

# சவூதியில் 13 பேர் சாவு

## 25 வருடங்களின் பின் பெய்த மழையால்

சவூதி அரேபியாவில் கடந்த 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பெய்த மழை காரணமாக ஏற்பட்ட கடும் வெள்ளத்தில் சிக்கி 13 பேர் உயிரிழந்தனர். 4 பேர் காணாமற் போயுள்ளனர்.
சவூதியில் திடீரென ஏற்பட்ட வெள்ளத்தால் கார்கள் தத்தளிப்பதையும், மக்கள் மரங்களின் அடியில் ஒதுங்கியிருப்பதையும் அந்த நாட்டு தொலைக்காட்சி காணொலியுடன் செய்திகள் வெளியிட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மக்கள் வெட்ட வெளிகளில் ஒதுங்க வேண்டாம் என்று மக்கள் பாதுகாப்பு ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.
தலைநகர் ரியாத், பாகா, ஹெயில் ஆகிய இடங்களில் பெய்த பலத்த மழையால் மக்கள் உயிரிழந்துள்ளனர். இதனால் சவூதியின் உள்துறை அமைச்சர் இளவரசர் முகமது பின் நயெப், பாதுகாப்புத்துறை அதிகாரிகளிடம் வெள்ளத்தில் சிக்கி அவதிப்படும் மக்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து தருமாறு கூறியுள்ளார்.
மேலும் நிலைமையை அவர் தீவிரமாகக் கண்காணித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.



கடந்த 2009 ஆம் ஆண்டு இது போன்று ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் ஜெட்டாவில் 123 பேர் இறந்தனர். பின்னர் 2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தில் 10 பேர் உயிரிழந்தனர். இது போன்ற அவசர நிலைமைகளுக்கு சவூதி அரசு தயார் நிலையில் இருப்பதில்லை என்ற குற்றச்சாட்டு தற்போது எழுந்துள்ளது.

# பாரம்பரிய இடமாக மாறும் பூஜி எரிமலை

டோக்யோ, மே.3
ஜப்பானின் பூஜி மலையை உலகப் பாரம்பரிய தலங்களில் [illegible] யுனெஸ்கோ நடவடிக்கை எடுத்துள்ளது. எதிர்வரும் ஜூன் மாதத்தில் கம்போடியாவில் கூடவுள்ள யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியங்களுக்கான குழு இது குறித்த அதிகார பூர்வ அறிவிப்பை வெளியிடவுள்ளது.
ஜப்பானிலேயே மிக உயர்ந்த மலையான பூஜியின் உயரம் 12 ஆயிரத்து 460 அடிகள். எரிமலையான பூஜி மலை, இறுதியாக 300 ஆண்டுகளுக்கு முன்னர் வெடித்தது.
ஜப்பானில் உலகப் பாரம்பரிய தலங்களாக ஏற்கனவே 16 இடங்கள் உள்ளன. 12 கலாசாரத் தலங்களும் 4 இயற்கைப் பிரதேசங்களும் இவற்றில் அடங்குகின்றன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சீன ஊடுருவலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து டில்லியில் போராட்டம் நடத்திய சிவசேனா கட்சியினர் பிரதமர் மன்மோகன் சிங், உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனியின் உருவப் பொம்மைகளை எரித்தனர்.

# சி.பி.ஐ. கைக்கு மாறியது நிலக்கரி சுரங்க ஊழல் விவகாரம்




டில்லி, மே.3
நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் இடம் பெற்ற ஊழல் விவகாரம் மத்திய புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு ஊழல் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்தி வருகிறது.
மத்திய புலனாய்வுத் துறைக்கு நிலக்கரி துறை அமைச்சகம் போதிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை என முறைப்பாடு எழுந்தது. இதற்கு உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.
இந்தநிலையில், இந்த விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ. யிடம் 730 கோப்புகள், விண்ணப்பங்கள், ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளாதாக நிலக்கரி துறை அமைச்சகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சி.பி.ஐ.யிடம் கையளிப்பதற்கு எங்களிடம் 10 கோப்புகள், ஆவணங்கள் உள்ளன. அவற்றை வந்து பெற்றுக்கொள்ளுமாறு சி.பி.ஐ.யிடம் கூறி உள்ளோம்.
2004 ஆம் ஆண்டுக்கு முந்தைய, கண்டுபிடிக்க முடியாத 28 கோப்புகளில் 25 கோப்புகளை கண்டுபிடித்து விட்டோம். கோப்புகளை கண்டுபிடிப்பதற்கு முடிந்த அளவுக்கு முயற்சிகள் எடுக்கிறோம் என்று நிலக்கரி துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (வ)

## அதிகாரம் மிக்கோர் பட்டியலில் மன்மோகன், சோனியா, சிதம்பரம்



இந்தியாவில் அதிகார மிக்கவர்கள் பட்டியலில், பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர்.
அமெரிக்காவில் இருந்து வெளியாகும், 'போரீன் பொலிசி' என்ற இதழ் வெளியிட்டுள்ள உலக அளவில் 500 அதிகாரமிக்க நபர்கள் பட்டியலில், இந்தியாவில் இருந்து பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உள்ளிட்ட 16 பேர் இடம் பெற்றுள்ளனர். பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி, வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், மத குருக்கள் பாபா ராம்தேவ், ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர், பா.ஜ. தலைவர் சுஷ்மா சுவராஜ் ஆகியோரும் அந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். (வ)

# சரப்ஜித்சிங் சாவு

## அவரது உடலை இந்தியா கொண்டு வர நடவடிக்கை



லாகூர், மே.3
பாகிஸ்தானில் கைதிகளால் தாக்கப்பட்டு உயிருக்குப் போராடிய சரப்ஜித் சிங் லாகூர் மருத்துவமனையில் நேற்று முன்தினம் நள்ளிவு உயிரிழந்தார். அவரது உடலை இந்தியா கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
பாகிஸ்தானில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சரப்ஜித் சிங் சக கைதிகளால் தாக்கப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் லாகூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததார். அங்கு சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.
1990ஆம் ஆண்டு பாகிஸ்தானில்இடம்பெற்ற குண்டுவெடிப்புடன் தொடர்புடையதாகக் கூறி கைது செய்யப்பட்ட பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த இந்தியர் சரப்ஜித் சிங்குக்கு, அந்த நாட்டு நீதிமன்றம் தூக்குத்தண்டனை விதித்தது. பாகிஸ்தானின் கோட்லாபாட் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சரப்ஜித் சிங்கை கடந்த 26 ஆம் திகதி சக கைதிகள் கடுமையாகத் தாக்கினர்.
இதில், தலையில் பலத்த காயம் அடைந்து கோமா நிலைக்குதள்ளப்பட்ட அவர், லாகூரில் உள்ள ஜின்னா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.
கடந்த 6 தினங்களாக கோமா நிலையில் உயிருக்குப் போராடிய சரப்ஜித் சிங் நேற்று அதிகாலை ஒரு மணி அளவில் உயிரிழந்தார்.
சரப்ஜித் சிங்கை சந்திப்பதற்காக லாகூர் சென்ற சரப்ஜித் சிங்கின் சகோதரி, மனைவி மற்றும் 2 மகள்கள், நேற்று முன்தினம் இந்தியா திரும்பிய நிலையில், அவர் உயிரிழந்தமை அவரது குடும்பத்தினரை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.
இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளுக்கும், சரப்ஜித்சிங் உயிரிழந்த தகவலை ஜின்னா மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

### பிரதமர் இரங்கல்

சரப்ஜித் சிங் மரணச் செய்தியைக் கேட்டதும் தாம் வருத்தம் அடைந்ததாகக் கூறியுள்ள பிரதமர் மன்மோகன் சிங், தனது இரங்கலைத் தெரிவித்துக் கொண்டுள்ளார். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்காக நாடே கவலை அடைந்துள்ளது. சரப்ஜித் சிங் சாவுக்குக் காரணமான குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும். சரப்ஜித் சிங் உடலை இந்தியா கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் உறுதி அளித்துள்ளார். (வ)

# காஷ்மீரில் நிலநடுக்கம் 2 பேர் சாவு

காஷ்மீரில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 2 பேர் உயிரிழந்தனர். 200 கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன.
காஷ்மீர் மாநிலத்தில் இமய மலையை ஒட்டிய பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோலில் 5.8 புள்ளியாக இது பதிவானது.
கிஷ்த்வார், தோடா மாவட்டங்களில் பாடசாலை கள், மருத்துவமனைகள், வீடுகள் உட்பட 400 இற்கும் மேற்பட்ட கட்டடங்களில் விரிசல் ஏற்பட்டது. நிலம் அதிர்ந்ததால் ஏற்பட்ட நிலச்சரிவில் 2 பேர் இறந்தனர்.
பதேர்வாவில் ஆல் இந்தியா ரேடியோ கட்டடம், மாவட்ட வளர்ச்சி ஆணைய கட்டடம், 4 பள்ளிகள் உட்பட 200 கட்டடங்களின் ஒரு பகுதிகள் இடிந்தன.
கிஷ்த்வார், பூஞ்ச், ரஜோரி மாவட்டங்களில் பல கட்டடங்கள் இடிந்து விழுந் தன. இதில் 32 மாணவர்கள் உட்பட 69 பேர் காயமடைந்தனர். (வ)

## காலதாமதமான கருணை மனு காரணமாக

# தூக்கை ரத்து செய்து ஆயுள் தண்டனை தீர்ப்பை வழங்கியது உச்ச நீதிமன்று

கருணை மனு தாமதமாக நிராகரிக்கப்பட்டதைக் காரணம் காட்டி தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவருக்கு ஆயுள்தண்டனை விதித்து உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை தீர்ப்பு வழங்கியுள்ளது.
அஸாம் மாநிலத்தில் இரட்டைக் கொலை வழக்கு ஒன்றில் சரணடைந்த எம்.என். தாஸ் என்பவருக்கு 1997 ஆம் ஆண்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.
1998-ஆம் ஆண்டு குவாஹாட்டி உயர்நீதிமன்றமும் 1999 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றமும் தூக்கு தண்டனையை உறுதி செய்தன.
அதைத் தொடர்ந்து 1999 ஆம் ஆண்டு எம்.என்.தாஸ் தன்னுடைய தண்டனையைக் குறைக்கக் கோரி ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பினார். அந்த மனுவை 2011 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த பிரதீபா பாட்டீல் நிராகரித்தார். தனது கருணை மனுவை 12 ஆண்டு காலம் கழித்து தாமதமாக நிராகரித்ததால் தன்னுடைய தூக்கு தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் எம்.என்.தாஸ் மனு தாக்கல் செய்திருந்தார்.
அந்த வழக்கை ஜி.எஸ். சிங்வி தலைமையிலான அமர்வு நீதிமன்றம் நேற்று முன்தினம் விசாரித்தது. எம்.என்.தாஸின் கருணை மனுவை காலதாமதமாக குடியரசுத் தலைவர் நிராகரித்ததால் தாஸின் தூக்குத் தண்டனையை ரத்து செய்து ஆயுள் தண்டனையாக மாற்றுவதாக தீர்ப்பளித்தது.
அண்மையில் காலிஸ் தான் இயக்கத் தலைவர் தேவேந்தர் சிங் புல்லரின் வழக்கில், தண்டனை குறைப்புக்கு கருணை மனு தாமதமாக நிராகரிக்கப் படுவதை காரணமாக ஏற்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தீர்ப்புக்கு வரவேற்பு

உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை [illegible] வரவேற்றுள்ளது. (வ)

# வயதான தாயைப் பாதுகாக்க வீட்டில் கண்காணிப்புக் கமரா

## முதன்முதலாக இந்திய நீதிமன்று உத்தரவு

வீட்டில் நடக்கும் துஷ்பிரயோகங்களை கண் காணிக்க சி.சி.டி.வி. கமரா பொருத்துமாறு முதன்முதல் இந்தியாவில் நீதிமன்றம் ஒன்று உத்தரவு வழங்கியுள்ளது.
தனது மகனும் மருமகளும் தன்னை மோசமாக நடத்துவதாக வயோதிப தாயொருவர் செய்திருந்த முறைப்பாட்டை விசாரித்த இந்திய நீதிமன்றம் ஒன்று வீட்டுக்குள் நடப்பவற்றை கண்காணிக்க சி.சி.டி.வி. கமராக்களை பொருத்துமாறு உத்தரவிட்டுள்ளது.
மகனும் மருமகளும் நடந்து கொள்ளும் முறையைக் கண் காணிப்பதற்காக பொலிஸார் கமராவில் பதிவாகும் காட்சிகளை அடிக்கடி பரிசோதிக்க வேண்டும் என்றும் ராஜஸ்தானில் உள்ள நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.
72 வயதான விம்லா தாரிவால் என்ற அந்த விதவைத் தாய், தன்னை தனது மகன் அடிக்கடி தாக்குவதுடன் வீட்டை விட்டு வெளியே அனுப்பவும் முயற்சிப்பதாகக் குற்றஞ் சாட்டியுள்ளார்.



இந்தியாவில் பல தலைமுறைகளாக ஒரே வீட்டில் சேர்ந்து வாழ்ந்து வருகின்ற கூட்டுக் குடும்பங்கள் பெருமளவில் உள்ளன. அந்தக் குடும்பங்களில் அடிக்கடி ஏற்படுகின்ற சொத்துத் தகராறுகள் பொலிஸ், நீதிமன்றம் வரை செல்வது வழக்கம்.
எனினும், இவ்வாறான பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு அளிக்கப்படும் தீர்ப்புகளில் புதிய மாறுதலாக முதற்தடவையாக நீதி மன்றம் ஒன்று சி.சி.டி.வி. கண்காணிப்புக் கமராக்களை பொருத்துமாறு உத்தரவிட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை நிலைநாட்டி பாதுகாப்பை உறுதிப்படுத்துக

## கூட்டமைப்பின் மே தினப் பிரகடனத்தில் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,மே.3

சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஜனநாயகத் தத்துவங்களையும, கருத்தியல் சுதந்திரத்தையும் அரசு அங்கீகரிப்பதுடன் ஊடகத் துறைக்கும், ஊடகவியலாளர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள மே தினப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தப் பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எல்லா நாடுகளிலுமே தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டங்கள், புரட்சி நடவடிக்கைகள் மூலம் ஆட்சியே மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அந்த நாளில் ஒரு சதத்தால் பாண்விலை உயர்வடைந்தாலும் போராட்டம் நடத்தும் இடதுசாரித் தலைவர்கள், இன்று அரசுடன் இணைந்து கொண்டு அமைச்சர்களாகி, நூறுரூபாவாகப் பாண் விலை அதிகரித்தாலும் நியாயப்படுத்தும் விதத்தில் செயற்படுகின்றனர்.

தமிழ் மக்களது வாழிடங்களை இராணுவ முகாம் அமைப்பதற்காக அரசு சுவீகரிக்கின்றது. அந்த இடங்களில் இராணுவ முகாம்கள், இராணுவக் குடியிருப்புக்களை நிறுவி, இனப்பரம்பலை மாற்ற நடவடிக்கை எடுக்கிறது.

இவ்வாறான நெருக்கடி நிலையால்தான் இந்த மே தினத்தில் எமது பிரகடனங்களை முன் வைக்கின்றோம்.

★அனைவரது சம்பளங்களும் விலைவாசி ஏற்றத்துக்கு ஏற்ப உயர்த்தப்படவேண்டும். அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் அடித்தட்டு மக்களின் வருமானத்துக்கும், வாங்கும் சக்திக்கும் ஏற்ப குறைக்கப்படவேண்டும்.

★போர் காரணமாகவும், இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாகவும் அகதிகளாய், வாழ்விழந்தோராக இருப்பவர்களுக்கு நட்ட ஈடும் நிவாரணமும் வழங்கப்படவேண்டும், என்பதுடன் தமிழர்களையும் மனிதர்களாக மதிக்கின்ற பண்பு உருவாக்கப்பட்டு, முழு மனித வளர்ச்சிக்குரிய ஊட்டச்சத்து வழங்கப்படவேண்டும்.

★அரசின் ஊழல் ஊதாரித்தனமான செயற்பாடுகளினால் வரிச்சுமை மக்களுக்கு அதிகரித்துள்ளது. இது நிறுத்தப்பட்டு இந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

★வேலையற்ற இளைஞர், யுவதிகள், தொண்டர் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

★இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளான நிலங்களும், கடலும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

★தமிழர் தாயகப் பிரதேசத்தில் தனியார், பொது நிறுவனங்களை - ஆக்கிரமித்து, அவற்றில் ஆதிக்கம் செலுத்தும் அரச படைகள் வெளியேற்றப்பட வேண்டும்.

★இலங்கையில் இனப்பிரச்சினைக்கு, சிறந்த அரசியல் தீர்வு உறுதிப்படுத்தப்பட தமிழ் மக்கள் தமது தாயகத்தில் ஆளும் உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

★போர்க் காலத்தில் கொல்லப்பட்டோர், காணாமற்போனோர் தொடர்பில் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய விசாரணை ஒன்று நடத்தப்பட்டு அதனடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

★கல்வித் துறையில் அரசியல் மற்றும் இராணுவத் தலையீடற்ற நிர்வாகமும், ஒதுக்கீட்டில் 6 சதவீதத்துக்கு சமமான பங்கும் வழங்கப்பட வேண்டும்

★தமிழ், முஸ்லிம் மக்களின் குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

★ஐ•நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவும், பொறுப்புக் கூறும் கடப்பாடு நிறைவேற்றப்படவும் வேண்டும்.

★சாவதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஜனநாயகத் தத்துவங்களையும், கருத்தியல் சுதந்திரத்தையும் அரசு அங்கீகரிப்பதுடன் ஊடகத்துறைக்கும், ஊடகவியலாளர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க வேண்டும் -என்றுள்ளது. (ஐ-5-86)

## ஆடம்பரப் பொருள்கள் அதிகாரிகள் வசமாயின

கொழும்பு,மே 3

கட்டுநாயக்கவிலுள்ள தீர்வை விலக்களிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு மின்சாதனப் பொருள்களை இறக்குமதி செய்வதாகத் தெரிவித்து கொண்டுவரப்பட்ட ஒருதொகை ஆடம்பரப் பொருள்கள் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

அவற்றின் பெறுமதி 25 மில்லியன் ரூபா என்று சுங்கப் பிரிவின் ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி கூறினார்.

பொருள்களைக் கொண்டுவந்த வர்த்தகரிடம் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் தெரிவித்தார்.

மின் விசிறிகளைக் கொண்டு வருவதாகக் கூறி சட்ட விரோதமாக 75 குளிரூட்டிகளும் 15 குளிர்சாதனப் பெட்டிகளும் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதற்காக குறித்த வர்த்தகர் போலி ஆவணங்களைப் பயன்படுத்தியுள்ளார் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பொருள்கள் கொண்டுவரப்பட்டதன் ஊடாக சுங்கத் திணைக்களத்துக்கு 10 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கால்பந்தாட்ட சங்க முன்னாள் தலைவருக்கு 8 வருட தடை



மணிலால் பெர்னாண்டோ மீது சுமத்தப் பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் உறுதி செய் யப்பட்டன.

கொழும்பு,மே 3

இலங்கை கால்பந்தாட்ட சங்கத்தின் முன்னாள் தலைவர் மணிலால் பெர்னாண்டோவுக்கு சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் 8 வருட தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன் பிரகாரம், குறித்த காலப்பகுதியில் கால்பந்தாட்ட விளையாட்டுடன் தொடர்புடைய எவ்வித செயற்பாடுகளிலும் பங்கேற்கும் வாய்ப்பு அவருக்கு வழங்கப்படமாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுக்குழு அதிகாரியாக செயற்பட்ட பெர்னாண்டோ, அந்தச் சம்மேளனத்தின் கொள்கைகளை மீறிச் செயற்பட்டமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் நிதியை தான்தோன்றித்தனமாக செலவு செய்தமை தொடர்பில் இதற்கு முன்னர் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் அவருக்கு 90 நாள்கள் தடை விதித்திருந்தது.

மணிலால் பெர்னாண்டோ மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் உறுதி செய்யப்பட்டமையினால், அவர் மீதான தடையை 8 வருடங்களாக நீடித்துள்ளதாக சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இரண்டு நாள்களாக சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச)

## பொதுநலவாய வர்த்தக மாநாட்டுக்கு இடையூறு நேரலாம் என அரசு அச்சம்

கொழும்பு,மே 3

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்குச் சர்சதேச ரீதியாக எழுந்துள்ள அழுத்தங்களுக்கு இடையில், இந்த மாநாட்டுடன் இணைந்த வகையில் நடத்தப்படுகின்ற பொதுநலவாய நாடுகளின் வர்த்தக மாநாட்டுக்குச் சிக்கல் ஏற்படும் என்று அரசு அஞ்சுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்களின் மாநாட்டுடன் இணைந்ததாக இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இதில் இலங்கையில் முதலீடு செய்யவுள்ள ஆயிரத்துக்கும் அதிகமான பொதுநலவாய மற்றும் பொதுநலவாய நாடுகள் அல்லாத நாடுகளின் வர்த்தகப் பிரதிநிதிகள் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் இலங்கையில் இந்த மாநாட்டை நடத்தக் கூடாது என்ற வலியுறுத்தல்களுக்கு மத்தியில் குறித்த வர்த்தகப் பிரதிநிதிகள் இந்த மாநாட்டைப் புறக்கணிக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்த நிலைமையைச் சமாளிப்பதற்காக பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா தலைமையிலான குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## நித்திரையில் எழுந்து பேசுகிறாராம் சந்திரிகா

### அமைச்சர் ரோஹித்த கூறுகிறார்

கொழும்பு,மே 3

ஜனாதிபதி வீதிகளை புனரமைத்து, விமான நிலையங்கள், துறைமுகங்களை நிர்மாணித்து வருகிறார். அன்று செய்ய முடியாததைத் தற்பொழுது செய்யும் போது, சந்திரிகாவுக்குப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. சந்திரிகா நித்திரையில் இருந்து எழுந்தவர் போன்று சத்தம் போடுகிறார். பொன்சேகா சந்தையில் விற்பனை செய்ய முடியாத அழுகிய பொருளாக மாறியுள்ளார் என அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தற்போது மேடைகளில் ஏறி, "நாட்டில் தற்போது தலைவர் இல்லை.நாடு அழிவை நோக்கி சென்றுள்ளது. நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும்" எனக் கூறுகிறார். 11 வருடங்கள் ஆட்சியில் இருந்த வேளை செய்ய முடியாததைச் செய்யப் போவதாக இன்று பேசுகிறார். இது நித்திரையில் இருந்து எழுந்தது போன்ற வேலையாகும்.

அண்மையில் மத்துகம பிரதேசத்தில் அடிக்கல் நாட்டு விழா ஒன்றுக்கு வந்தார். அர்ஜூன போன்ற மூழ்கும் கப்பலுடன் அவர் அங்கு வந்திருந்தார் எனவும் அபேகுணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

களுத்துறை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

மின்சாரக் கட்டணங்கள் குறித்து மங்கள சமரவீர பெரிதாகச் சத்தம் போடுகிறார். அமைச்சர்கள் எவ்வளவு மின்சாரத்தைப் பயன்படுத்தினாலும், செலுத்த வேண்டிய இரண்டாயிரம் ரூபாவைக் கூட அவர் செலுத்தியிருக்க மாட்டார் எனவும் அமைச்சர் அபேகுணவர்த்தன மேலும் கூறினார். (த)

## 20 இல் சவூதியை சென்றடைவார் புதிய தூதுவர்



கொழும்பு,மே 3

சவூதி அரேபியாவுக்கான இலங்கையின் புதிய தூதராக நியமிக்கப்பட்டுள்ள வடிவேல் கிருஷ்ணமூர்த்தி எதிர்வரும் 20 ஆம் திகதி சவூதியைச் சென்றடைவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வடிவேல் கிருஷ்ணமூர்த்தி முன்னர் இந்தியாவுக்கான இலங்கையின் பிரதித் தூதராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ச)

## லஞ்சம் பெற முயன்ற பொலிஸார் கைதானார்

கொழும்பு,மே 3

லஞ்சம் வாங்க முயற்சித்த குற்றச்சாட்டில் அநுராதபுரம் பொலிஸ் அலுவலகத்தில் கடமையாற்றிய கான்ஸ்டபிள் ஒருவர் லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவினால் கைது செய்யப் பட்டுள்ளார்.

இந்தப் பொலிஸ் கான்ஸ்டபிள் 2,000 ரூபாவை லஞ்சமாகப் பெறுவதற்கு முயற்சித்த வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் கான்ஸ்டபிள் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்தவேளை, கார் ஒன்றில் பயணித்தவர் ஆசனப் பட்டியை அணியாது பயணித்துள்ளார்.

இவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தவிர்ப்பதற்காகக் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் லஞ்சம் பெற முயன்றுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் குறிப்பிட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார். (த)

## சு.க.–தே.சு.மு.ஆதரவாளர் மோதல்

கொழும்பு,மே 3

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களுக்கும் தேசிய சுதந்திர முன்னணி ஆதரவாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கைகலப்பில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று கல்கிஸைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரத்மலானை பிரதேசத்திலேயே இந்தக் கைகலப்பு நேர்ந்து இடம்பெற்றுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## மின் கட்டண நிவாரணம்; அறிக்கை மஹிந்தவிடம்

கொழும்பு,மே 3

அண்மையில் அதிகரிக்கப்பட்ட மின்சார கட்டணங்கள் தொடர்பில் நிவாரணங்களை வழங்குவதற்கான யோசனைகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

குறித்த யோசனைகளை நிதியமைச்சு மற்றும் மின்சக்தி அமைச்சு ஆகியன தயாரித்துள்ளதாக மின்சக்தி அமைச்சின் செயலாளர் வை.எம்.சி.பெர்னாண்டோ தெரிவித்தார்.

அண்மைக்காலங்களில் இது தொடர்பில் ஜனாதிபதியுடன், மின்சக்தி அமைச்சு அதிகாரிகள் பலகட்ட பேச்சுக்களையும் நடத்தியிருந்தனர்.

இதன்போது, மின்சார கட்டணம் தொடர்பில் நிவாரணங்கள் வழங்கப்படும் பட்சத்தில் அது மின்சார சபைக்கும், திறைசேரிக்கும் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பெர்னாண்டோ மேலும் குறிப்பிட்டார். (த)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலையின் குறைபாட்டை நிவர்த்தி செய்யுமாறு கோரிக்கை

## சுகாதார பணிமனைக்கு முசலி பிரதேச பிரசைகள் குழு மனு

மன்னார்,மே 3
மன்னார் சிலாவத்துறை வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரும் மனு ஒன்றை முசலிப் பிரதேச பிரசைகள் குழுவினால் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்துள்ளார் அந்தக் குழுவின் அமைப்பாளரான சுனேஸ் சோசை.



முசலிப் பிரதேசத்தில் 30 கிராமங்களுக்கு மேல் உள்ளன. இந்தக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் சிலாவத்துறை வைத்தியசாலையை நம்பி உள்ளனர். தினமும் சுமார் 150 நோயாளிகள் இந்த வைத்திய சாலைக்கு வருகின்றார்கள்.
இருந்த போதிலும் இந்த மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதை பிரசைகள் குழு அவதானித்துக் கொண்டு இருக்கின்றது.
குறிப்பாக இந்த வைத்திய சாலையில் பணிபுரியும் ஊழியர்களில் சிலர் நோயாளிகளுடன் கடுமையாக நடந்து கொள்கின்றனர்.
நீரிழிவு நோய் காரணமாக கிளினிக் வரும் நோயாளிகள் காலையில் சாப்பிடாமல் வருகின்றார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் படை வீரர்கள் மருந்து எடுக்க வருகின்ற போது அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதுடன் ஏனைய நோயாளிகள் பல மணி நேரம் காத்துக் கிடக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.
வைத்தியருக்கும் ஊழியர்களுக்கும் இடையில் காணப்படும் சில பிரச்சினைகள் காரணமாக கடந்த 9 ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் கையொப்பம் இடும் பதிவேடு நோயாளிகள் பார்த்திருக்கையில் தூக்கி வீசப்பட்ட சம்பவம் ஒன்றும் நடைபெற்றுள்ளது.
இவற்றுக்கு மேலதிகமாக போதிய அடிப்படை வசதிகள் இல்லாமை, வைத்திய சாலைக்கென அபிவிருத்திச் சங்கம் அமைக்கப்படாமை, வைத்தியசாலைக்கு சுற்று மதில் அமைக்கப்படாமை, வைத்தியசாலைக்கு அருகில் வீதி விளக்குகள் பொருத்தப்படாமை, குடி தண்ணீர்ப் பிரச்சினை, போதிய மருத்துவ மாதுக்கள் நியமிக்கப்படாமை போன்ற குறைபாடுகளும் உள்ளன. இத்தகைய நெருக்கடிகளை நிவர்த்தி செய்து தருமாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.
(க-12)



முல்லைத்தீவு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் முழு நிலா கலை நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது. (ஐ-433)

### நல்லின கறவை மாடுகள்

முல்லைத்தீவு,மே 3
கற்சிலைமடு கிராம அலுவலர் பிரிவில் சேவா லங்கா நிறுவனத்தால் நல்லினக் கறவை மாடுகள் வழங்கப்பட்டன. இதற்கென 30 குடும்பங்கள் தெரிவாகிய நிலையில் முதற் கட்டமாக கடந்த 25ஆம் திகதி 7 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கும் மாடுகள் வழங்கப்பட உள்ளதாக நிறுவனத்தினர் தெரிவித்தனர்.
இந்த நல்லின கறவை மாடுகள் மூலமாக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த மாடுகள் மூலமாகக் கிடைக்கின்ற கன்றுகளை மேலும் பலருக்கு வழங்குவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகவும் தெரியவருகின்றது. (க-500)

### பல்கலைக்கு அனுமதி

முல்லைத்தீவு,மே 3
கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலிருந்து 13 மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்றிருப்பது தொடர்பாக பாடசாலைச் சமூகத்தினர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.
துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள இந்தப் பாடசாலையில் பல்வேறு பின்தங்கிய பகுதிகளையும் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இந்த நிலையில் மாணவர்களின் ஊக்கம் காரணமாகவும், ஆசிரியர்களின் சிறந்த கற்பித்தல் செயற்பாடுகள் காரணமாகவும் இந்தச் சிறந்த பெறுபேற்றை எட்ட முடிந்ததாகப் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.
விளையாட்டுத் துறையிலும் இந்தப் பாடசாலை மாணவர்கள் சிறந்து விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-500)

### தரமான மரங்களுக்கு அனுமதி

முல்லைத்தீவு,மே 3
முல்லை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டுத் திட்டங்களுக்கு வன்னியில் தாராளமாகக் கிடைக்கின்ற பாலை, முதிரை ஆகிய தரமான மரங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என பயனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
தற்போது தென்னிலங்கையிலிருந்து எடுத்து வரப்படும் மரங்களைப் பயன்படுத்தியே கதவு, யன்னல் என்பன அமைக்கப்படுகின்றன. ஆனால் தரமற்ற மரங்களால் அமைக்கப்பட்டதால் இவை பழுதடைந்த நிலையில் மீண்டும் புதிதாக அமைக்க வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.
வன்னியிலிருந்து தினமும் பாலை, முதிரை மரங்கள் வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆனால் இங்கு வீடுகளை அமைப்பவர்கள் தரமற்ற மரங்களைப் பயன்படுத்த வேண்டிய நிலையில் உள்ளனர்.
எனவே இங்கு கிடைக்கின்ற தரமான மரங்களைப் பயன்படுத்துவதற்கு அதிகாரிகள் அனுமதி வழங்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

### வயலுக்குச் செல்லும் மாணவர்கள்

முல்லைத்தீவு,மே 3
முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களில் சிலர் பாடசாலைகளுக்குச் செல்லாது வயல் வேலைகளில் ஈடுபடுவதால் அவர்களது கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.
குடும்ப வறுமையே இதற்குக் காரணமெனக் கூறப்பட்டாலும் பெற்றோர்களின் பொறுப்பற்ற நடவடிக்கையே இதற்கு முக்கிய காரணமெனக் கூறப்பட்டுள்ளது.
மேலும், மாணவர்கள் சிலர் பாடசாலைகளுக்குச் செல்வதில் அக்கறை காட்டாது வயல் வேலைகளுக்குச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. எனவே இத்தகைய மாணவர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு அவர்கள் பாடசாலை செல்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
(க-500)

## மன்னார் தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்படும்

### அதன் புதிய தலைவர் தெரிவிப்பு

மன்னார்,மே 3
மன்னார் தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்படவுள்ளதாக அதன் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்ட தமிழ்நேசன் அடிகளார் குறிப்பிட்டுள்ளார்.



மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த 25ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின்போது புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. இதில் புதிய தலைவராக மீண்டும் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.
பொதுச் செயலாளராக ஆசிரியர் எம். சிவானந்தனும், பொருளாளராக எஸ். எச். எம். ஷிஹாரும் தெரிவு செய்யப்பட்டனர்.
சிரேஷ்ட துணைத் தலைவராக மூத்த ஊடகவியலாளர் மக்கள் காதரும், துணைத் தலைவராக மகாஸ்ரீ தர்ம குமாரக் குருக்களும், துணைப் பொதுச் செயலாளராக திருமதி பெப்பி விக்டர் லெம்பேர்ட்டும், நிர்வாகச் செயலாளராக மன்னார் அமுதனும் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களைவிட நான்கு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.
இந்தக் கூட்டத்தில் கருத்துரைத்த தமிழ்நேசன் அடிகளார், எதிர்காலத்தில் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகளை விஸ்தரிக்கவுள்ளதாகவும், மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து கலை இலக்கிய ஆர்வலர்கள், ஆற்றல் வாய்ந்தவர்களை சங்கத்துக்குள் உள்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.
மாணவர் அணி, இளைஞர், பெண்கள் அணி, முதியோர் அணி எனப் பல அணிகளையும் நாடகக்குழு, நாட்டியக் குழு, சங்கீதக்குழு, கவிஞர் குழு, எழுத்தாளர்குழு, அண்ணாவியார்குழு எனப் பல குழுக்களையும் உருவாக்கி மன்னார் தமிழ்ச் சங்கத்தை பரந்த பலமான ஒரு கலை இலக்கிய அமைப்பாக கட்டியெழுப்பவுள்ளதாகவும் இதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் தேவை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.
(க-12)

## கிளிநொச்சி கல்வி வலயத்தில் 4 பாடசாலைகள் தரம் உயர்வு

### வன்னேரி ம.விக்கு உயர்தர அனுமதி

அக்கராயன், மே 1
கிளிநொச்சி வன்னேரிக் குளம் மகாவித்தியாலயத்தில் உயர்தரக் கலை, வர்த்தகப் பிரிவுகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
தற்போது சாதாரண தரம் வரை இயங்கிக் கொண்டிருக்கும் இந்தப் பாடசாலைக்கு உயர்தர பிரிவை ஆரம்பிக்க வேண்டும்.
கிராம மக்களின் தொடர்ச்சியான கோரிக்கையை அடுத்து இந்த அனுமதியை கிளிநொச்சி கல்வி வலயம் வழங்கியுள்ளது.
இது குறித்து கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேல் கருத்துத் தெரிவிக்கையில்;
'' கிளிநொச்சி வலயத்தில் நான்கு பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அதில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கு கணித, விஞ்ஞானப் பிரிவுகளை இயக்க அனுமதி வழங்கப்பட்டு 1 ஏபி பாடசாலையாகத் தரமுயர்த்தப்படுகிறது.
இதேபோல கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலய ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. இங்கும் கணித, விஞ்ஞானப் பிரிவுகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்தப் பாடசாலையையும் 1ஏபி தரத்துக்கு உயரும்.
முழங்காவில் மகாவித்தியாலயத்துக்கு கணித, விஞ்ஞானப் பிரிவுகளை ஆரம்பிக்க அனுமதி இருந்த போதும் ஆசிரியர் இன்மையால் இழுபறியில் காணப்பட்டது. இப்போது அந்தப் பாடசாலைக்கு கணித, விஞ்ஞானப் பிரிவுகளுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதன் மூலம் அந்தப் பாடசாலையையும் 1 ஏபி பாடசாலை தரத்தை அடையும்.
இதே போல வன்னேரிக் குளம் மகா வித்தியாலயம் 1 சி பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டு அங்கு புதிதாக உயர்தர கலை, வர்த்தகப் பிரிவுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது - என்றார்.
(ஐ- 18)

## கெக்கரிக்காயை பயிரிடுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்து

முல்லைத்தீவு,மே 3
கெக்கரிக்காயைப் பயிரிடுமாறு முல்லைத்தீவு விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
'கேடீஸ்' நிறுவனம் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது.
கெக்கரிக்காய்க்கு கொழும்பில் [illegible] தால் இந்தப் பகுதி விவசாயிகள் குறைந்தது கால் ஏக்கரிலாவது இதனைச் செய்கை பண்ணுமாறு 'கேடீஸ்' நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.
தற்போது ஒட்டுசுட்டான் முத்துஐயன் கட்டுக் குளத்தின் கீழ் சிறுபோகச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் [illegible] ஏக்கரிலாவது கெக்கரிக்காய்ச் செய்கையில் ஈடுபடுமாறும் இதன் மூலமாகக் குறைந்த செலவில் அதிக இலாபத்தைப் பெற முடியுமெனவும் இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.
மேலும் ஏனைய மரக்கறி வகைகளையும் செய்கை பண்ணுமாறும் அவை உடனுக்குடன் கொள்வனவு செய்யப்படுமெனவும் இந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (க-500)

### மின்சாரத்துக்காக காத்திருக்கும் கிராமம்

வவுனியா,மே 3
வவுனியா வேலன் சின்னக் குளம் கிராமத்தில் மின்சார இணைப்புக்கள் வழங்கப்படாமையால் மாணவர்கள் உட்பட பல தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
வவுனியா வேலன் சின்னக் குளம் கிராம மக்கள் போரின் போது மோசமாகப் பாதிக்கப்பட்டனர். தற்போது இவர்கள் மீள்குடியமர்ந்த நிலையில் 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் மூலமாக மின்சாரம் வழங்குவதாக அதிகாரிகள் கூறினார்கள். ஆனால் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லையென இந்த மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு முறைப்பாடுகள் தெரிவித்தபோதிலும் அவை கவனத்தில் கொள்ளப்படவில்லையெனவும் இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-40?)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழகங்களில் இணைந்து கொள்ளும்
# வெளிநாட்டு மாணவர்களுக்கு மேலும் பல கல்விச் சலுகைகள்

இலங்கை பல்கலைக் கழகங்களில் இணையும் வெளிநாட்டு மாணவர்களுக்கு மேலும் பல சலுகைகளை வழங்குவ தற்கு உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இங்குள்ள பல்கலைக்கழகங்களில் அதிகளவு வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் வகையில் 48 நாடுகளின் மாணவர்களுக்கு உயர் கல்வி அமைச்சினால் வருடாந்தம் 100 புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டம் 2011 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள போதிலும் எதிர் பார்க்கப்பட்ட அளவில் மாணவர்களின் வருகை காணப் படாததால் சலுகைகள் அதிகரிக்கப்பட உள்ளன.

புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள சலுகைகளுக்கு மேலதிகமாக அவர்கள் இங்கு வருவதற்கும் மற்றும்திரும்பிச் செல்வதற்குமான விமானப் பயணக் கட்டணங்களை வழங்குவதற்கும், வீஸா அனுமதி தொடர்பான அனைத்துச் செலவினங்களையும் ஏற்றுக் கொள்வதற்கும் உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதைவிட,சீனா,வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து வரும் புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்கு ஆங்கிலமொழிப் பாடநெறியை ஓராண்டு காலத்துக்கு இலவசமாக்குவ தற்கும் உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழகங்களின் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் இரு வாரகால இசைவாக்கச் செயற்றிட்டமொன்றினை மேற்கொள்வதற்கும் கல்வி மேம்பாடுகள் செயற்றிட்ட மொன்றை நடைமுறைப் படுத்துவதற்கும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் தற்போது உள்ள 48 நாடுகளுக்கு மேலதிகமாக மேலும் 10நாடுகளை இணைத்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவொன்றும் வழங்கப்பட்டு வருவதோடு, 2011 ஆம் ஆண்டில் பாகிஸ்தான், பாலஸ்தீனம் மற்றும் கென்ய நாட்டு மாணவர்கள் ஐவருக்கு புலமைப் பரிசில்களும் வழங்கப் பட்டுள்ளன.

மேலும், கடந்த ஆண்டு புலமைப் பரிசில் தொடர்பாக 166 விண்ணப்பங்கள் கிடைக் கப் பெற்றதோடு, அவற்றுள் பட்டப் பின் படிப்புக்கள் தொடர்பாக 36 விண்ணப்பங்களும், முந்திய பட்டப் படிப்புக்கள் தொடர்பாக 28 விண்ணப் பங்களும் தெரிவு செய்யப்பட்டன என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், பூட்டான், பாகிஸ்தான், மெக்ஸானியா, கென்யா, நேபாளம், நைஜீரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் 23பேர்புலமைப் பரிசில்களை ஏற்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதோடு அவர்களுக்கு அந்தந்த நாடு களின் தூதரகங்கள் ஊடாக புலமைப் பரிசில்களுக்குரிய கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

(க-22)

## மூவரின் தூக்கை ரத்து செய்க கோரிக்கை

ஈழத்தமிழருக்கு ஏற்பட்ட நிலையால் இளைஞர்கள் கொதித்துப்போய் உள்ளனர். எனவே ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகள் மூவரின் தூக்கை உடனே இந்திய அரசு ரத்து செய்ய வேண்டுமென வைகோ, கொளத்தூர் மணி, பழ. நெடுமாறன், தமிழருவி மணியன் ஆகியோர் தெரிவித் துள்ளனர்.

. மூவரின் உயிர்காக்க தமிழக முதலமைச்சர் நடவடிக்கை வேண்டும்.

தமிழர் மூவரின் உயிர் காக்க தாய் தமிழக மக்கள் ஒன்றாக அணிதிரள வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் தோழர் வைகோ தனது உரையில் கூறியுள்ளார்.

32ஆம் நாள் நினைவு கூருதலும்
நன்றி செலுத்தும் வழிபாடும்



மண்ணில்
23.01.1933
விண்ணில்
03.04.2013
அமரர்
சிவப்பிரகாசம்
ரூத்பூமலர்
(பூவக்கா)

கடந்த 03.04.2013 இறைமகிமைக்குள் ஆறுதல் பிரவேசம் அடைந்த எனது தாயாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும். தந்தி தொலைபேசி மூலம் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள். மலர்வளையங்கள் செலுத்தி துயர்பகிர்ந்தோருக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவிபுரிந்த உற்றார்.உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நாளை (04.05.2013) சனிக்கிழமை மு.ப.11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அவரின் வாழ்வையும் பணியையும் நினைவுகூர்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்தும் வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஐக்கிய மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார்.உறவினர். நண்பர்கள்.திருச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

"பாலஜீவனம்"
கற்கோவளம், பருத்தித்துறை.
தொ.பே.: 077 622 5033

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(35349)(5.6)

## எரிபொருளை எடுத்துச் செல்லும்போது
# ஜீ.பி.எஸ். சாதனம் பொருத்துவது கட்டாயம்

கொழும்பு, மே 3

எரிபொருள்களை எடுத்துச் செல்லும் வாகனங்களில் ஜீ.பி.எஸ். சாதனங்களைப் பொருத்துவது கட்டாயமாக் கப்பட்டுள்ளது.

எரிபொருள்களை எடுத்துச் செல்லும் அரச மற்றும் தனியார்துறை வாகனங்கள், பவுஸர்கள் போன்றவற்றில் மே மாதம் முதலாம் திகதியில் இருந்து ஜீ.பீ.எஸ். சாதனத் தொகுதிகள் (Global Position Systems) பொருத்தப்பட்டிருக்க வேண்டுமென பெற்றோலிய வளத் தொழிற்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஸன யாப்பா தெரிவித்துள்ளார்.

எரிபொருள் கொண்டு செல்லப்படும்போது இடம்பெறும் முறைகேடுகளை தடுத்து விடும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள்களை எடுத்துச் செல்வதில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்கள் தமது செலவில் இந்தச் சாதனத்தை பொருத்திக் கொள்ள வேண்டுமெனவும், அரச நிறுவனங்களுக்கு அரச செலவில் இவை பொருத்திக் கொடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் எரிபொருள்கள் எடுத்துச் செல்லப்படும் போது இடம்பெறும் ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் துரிதமாக அதிகரித்துச் செல்வதாகவும் தெரியவந் துள்ளது. அண்மையில் சபுகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட எரிஎண்ணெய்த் தொகுதியில் பூகொட பிரதேசத்துக்குள் வைத்து கலப்படம் செய்யப்பட்டு தனியார் துறை மின் உற்பத்தி நிலையங்களுக்கு விற்கப்பட்டமை தெரிய வந்துள்ளது.

மேலும் எரிபொருள் பவுஸர்களில் கூட்டுத்தாபனத்தால் இடப்பட்டுள்ள முத்திரைகள் எரிபொருள் நிரப்பு நிலையங்களைச் சென்றடைவதற்கு முன்னரே மோசடிக்காரர்களால் உடைக்கப்பட்டு பல தரப்பட்ட முறைகேடுகள் மேற்கொள்ளப் படுகின்றமை தெரியவந்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சாதனம் பொருத்தப்பட்டதன் பின்னர் சாதனங் களுடன் எரிபொருள் எடுத்துச் செல்லப் படும்போது அந்த வாகனங்கள் செல்லுமிடங்கள் மற்றும் பயண முடிவு தொடர்பாகக் கண்காணிப்புடன் செயற்படுவதற்கு அதிகாரிகளுக்கு வாய்ப்பு ஏற்படு மென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது எரிபொருள்களை எடுத்துச் செல்லும் செயற்பாட்டில் 600 வாகனங்கள் வரையில் பயன்பாட்டில் உள்ளன.

அவற்றுள் 400 வாகனங்கள் தனியார் துறையினரால் செயற்படுத்தப்படுகின்றன எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-22)

**Van for Services**

திருமணசேவை உங்கள் விசேட தேவைகளுக்கான போக்குவரத்து தேவைக்கான

**சொகுசு வான்**

சேவைகளுக்காக நீங்கள் முற்பதிவு செய்யமுடியும்

தொடர்பு: 077 118 3374,
021 222 9288.

நிறுவன போக்குவரத்து தேவைக்கான வான்சேவை மாதாந்த அடிப்படையிலும் வழங்கப்படும்.

(36301)
(46.6)

**வேலையாள்கள் தேவை**

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வசிக்கக்கூடிய A/L., O/L., படித்த மருந்தகங்களில் வேலையாற்றிய அனுபவமுள்ள (ஆண், பெண்) வேலையாள்கள் மருந்தகம் ஒன்றுக்குத் தேவை. உங்கள் சுயவிவர கோவையை பின்வரும் தொலைபேசியினூடு தொடர்புகொண்டு அனுப்பிவைக்கவும்

தொடர்பு: 077 118 3374,
021 222 9288

(36302)(46.6)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20
06
1927

மறைவு
14
04
2012

அமரர் நமசிவாயம் நல்லையா
(வதரவத்தை புத்தூர்) திதி: நவமி 03.05.2013

எங்கள் குடும்பத்து ஒளி விளக்கே
பாசத்தின் உறைவிடமே நற்பண்பின் சிகரமே
எல்லோரையும் அரவணைக்கும் தெய்வமே
உங்கள் இன்முகம் என்றும்
எங்கள் மனதில் நிழலாகுது
நீங்கள் எம்மீது வைத்த பாசத்தை
நாங்கள் அளவிட முடியாது-----
ஆண்டு ஒன்றல்ல பல்லாண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகளுடனே வாழ்வோமப்பா
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கோயில் வாசல்,
இணுவில் மேற்கு, இணுவில்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(36945)(2.6)

மணிவிழா காணும் அதிபரின் சேவையைப்
பாராட்டிவாழ்த்துகின்றோம்



திரு.கு.கணபதிப்பிள்ளை
[அதிபர்- கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்]

27.05.1977 தொடக்கம்
03.05.2013 வரை
ஆசிரியராகவும், அதிபராகவும்
36 வருட சேவையைப் பூர்த்தி
செய்து ஓய்வு பெறும்

கிளி/முழங்காவில் ம.வி அதிபரின் சேவையை மனமார பாராட்டி வாழ்த்துவதோடு தனது சேவைக்காலத்தில் அயராது உழைத்து பல சாதனைகளைப் புரிந்த அதிபர் அவர்கள் தமது ஓய்வுகாலத்தில் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்தி நிற்கும்...

Best Wishes
அதிபர்கள்
பூநகரிக் கோட்டம்.

**SYLO FOOD & BEVERAGES (PVT) LTD**

**பதவி வெற்றிடங்கள்**

யாழ்மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள SyloFood&Beverages(PVT)Ltdநிறுவனத்தின் ICE Cream மற்றும் Beverage பிரிவுக்கு கீழ்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன தகுதியும் விருப்பமுள்ளோரும் விண்ணப்பிக்கவும்

01 **Project Manager** (முகாமையாளர்)
ஐஸ்கிறீம் தயாரிப்பு மற்றும் விற்பனை அனுபவமும் நிர்வாகத்திறமையும் உள்ளவர்கள்
02 **Factory Incharge** (தொழிற்சாலை பொறுப்பாளர்)
ஐஸ்கிறீம் உற்பத்தியில் போதிய அனுபவமுள்ளவர்கள்
03 **Electrical & Mechanical Technician**
04 **Drivers** (Light vehicle, heavy vehicle)
05 **Sales Man** (Ice cream Van மற்றும் கடை அனுபவம்)
06 **Mechanics** (வாகனங்கள் பராமரிப்பில் அனுபவம்)
07 **Security Guard** (அனுபவம் உள்ளவர்கள்)
08 **Helpers and cleaners** (ஆண்/பெண்)

அனைத்து விண்ணப்பங்களும் 15/05/2013முன்னர் கிடைக்க கூடியவாறு அனுப்பிவைக்கவும்
அனுப்பவேண்டிய Address/ email

**Sylo Food &Beverages (Pvt) Ltd,**
**No: 76, Amman veethy, Kokuvil East Kokuvil, Jaffna.**
**syloicecream@sltnet.lk**

(36923)(2.6) மேலதிக தொடர்புகளுக்கு :- **077 771 0785 / 077 979 8053**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சாவுக்கு தண்டம்

கிளிநொச்சியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இருவருக்கு நீதிமன்றினால் 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் கடந்த 29 ஆம் திகதி கஞ்சா திணிக்கப்பட்ட சுருட்டை வைத்திருந்த ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
கிளிநொச்சி கனகாம்பிகைகுளம் பகுதியில் இதே தினத்தன்று கஞ்சா சுருட்டு ஒன்றை வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்ட மற்றொரு நபருக்கும் 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க-6)

## குடி தண்ணீர் போத்தல்கள் பறிமுதல்

தென்மராட்சி,மே 3
உற்பத்தி அனுமதிப் பத்திரம் புதுப்பிக்காத தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டு சாவகச்சேரி நகரப்பகுதி வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பெருமளவு குடி தண்ணீர்ப் போத்தல்கள் கடந்த 30 ஆம் திகதி சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் பறிமுதல் செய்யப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது. (வ-9)

# வடபகுதி வாக்காளர்களுக்கு இலவச அடையாள அட்டை

## மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு

கொழும்பு,மே 3
எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்க அடையாள அட்டைகள் இல்லாத வாக்காளர்களுக்கு அவை இலவசமாக வழங்கப்படவுள்ளன.
இலவசமாக அடையாள அட்டைகளை ஆள்பதிவுத் திணைக்களமும் 'பவ்ரல்' அமைப்பும் இணைந்து வழங்கவுள்ளன.
இது தொடர்பாக ஏற்படும் செலவீனங்களையும் 'பவ்ரல்' ஏற்றுக்கொள்ளும் என ஆள்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் ஆர்.எம்.எஸ்.சரத்குமார தெரிவித்துள்ளார்.
போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் உள்ளடங்கலாக வடக்கில் வாழுகின்ற பெருமளவு மக்களுக்கு தேசிய ஆள் அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

> போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் உள்ளடங்கலாக வடக்கில் வாழுகின்ற பெருமளவு மக்களுக்கு தேசிய ஆள் அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

'' வடமாகாணத்தின் பல வேறு பிரதேசங்களிலும் நடமாடும் சேவை நிலையங்களை நடத்துவதன் மூலமாக அந்த மக்கள் தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
பொலிஸ் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு உதவுதல் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் வழங்குதல் உள்ளிட்ட ஏனைய செலவினங்களையும் 'பவ்ரல்' அமைப்பே ஏற்கவுள்ளது என்று அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.
மே மாதம் 6,7,8 ஆம் திகதிகளில் மன்னார்ப் பிரதேசத்தில் இது தொடர்பான நடமாடும் சேவைகள் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (சு-22)

## நனவு நிலை என்றால் என்ன

அறிவு நிலை- நனவு நிலை என்பதற்கு மூன்று தன்மைகள் உள்ளன.
அறிவு நிலை புலனுடன் சம்பந்தப்படும் போது நாம் 'உணர்வு' என்ற பதத்தை உபயோகிக்கின்றோம். சிந்தனையுடன் சம்பந்தப்படும் போது நனவு நிலை அல்லது மனச்சாட்சி என்கிறோம்.
'தான்' என்பதுடன் சம்பந்தப்படும் போது அது தூய்மையான அறிவு நிலையாகின்றது.
இந்த மூன்று சொற்பதங்களும் நாளாந்தம் இலகுவாகப் பயன்படுத்தப்படுகின்றன.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

# புதிய நீதிமன்றக் கட்டடங்கள் இரண்டு மாதங்களில் திறப்பு

## நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடம்

யாழ்ப்பாணம், மே. 3
யாழ். மாவட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் இரண்டு நீதிமன்றக் கட்டடங்களையும் இருமாத காலத்தினுள் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதியமைச்சர் ஹக்கீம் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.
யாழ். மாவட்டத்துக்கு இருநாள் பயணமாக வந்திருந்த நீதியமைச்சர் ஹக்கீம், மாவட்டத்தின் பல பகுதிகளையும் பார்வையிட்டார்.
புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் மல்லாகம் நீதி மன்றம் மற்றும் சாவகச்சேரி நீதிமன்றம் என்பவற்றை அவர் நேரில் சென்று பார்வையிட்டார். வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தையும் சனிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தையும் சென்று பார்வையிட்டார்.
அவற்றின் வேலைகள் நிறைவடையும் தறுவாயில் இருப்பதாகவும் இரண்டு மாத காலத்தினுள் இரு புதிய நீதிமன்றங்களும் திறந்து வைக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ம-5)

# கல்வி நிர்வாக சேவைக்கு விரைவில் ஆள்சேர்ப்பு

## மூன்று வகைகள் மூலம் தெரிவு

அச்சுவேலி, மே. 3
இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கு நடத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III போட்டிப் பரீட்சை-2013 தொடர்பான விவரங்கள் கடந்த 26ஆம் திகதி வெள்ளிக்கிழமைய வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்ப இறுதித் தினம் மே 27 ஆம் திகதியாகும்.
இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு திறந்த நிலை போட்டிப் பரீட்சையின் மூலம் 25 வீதமானோரும் மட்டுப்படுத்தப்பட்ட நிலை போட்டிப் பரீட்சையின் மூலம் 30 வீதமானோரும் இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றில் உள்ளவர்களில் இருந்து திறமை சேவை மூப்பு அடிப்படையில் 45 வீதமானோரும் தெரிவு செய்யப்படுவதுண்டு.
மூன்று வகைப்பாட்டிலும் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III ஆள் தெரிவு நடைபெறும். இதில் திறந்த நிலையில் நடைபெறும் தெரிவுக்கு இரண்டு போட்டிப் பரீட்சைகளும் புள்ளி வழங்கப்படாத (சான்றிதழ் பரிசீலனை) நேர்முகத் தேர்வும் நடைபெறும்.
மட்டுப்படுத்தப்பட்ட நிலை மற்றும் அதிபர் சேவையில் உள்ளவர்களில் இருந்து தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கும் புள்ளி வழங்கப்பட்டு தெரிவுகள் நடைபெறும்.
இறுதியாக 2010 ஆம் ஆண்டு தெரிவுகளுக்கான போட்டிப் பரீட்சை நடைபெற்றது. அதை அடுத்து இந்த வருடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-11)

## வேகத்தால் எவ்வேளையும் எதுவும் நடக்கலாம்....!



வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஹைஏஸ் வான் நாவற்குழி பாலத்தை அண்மித்த வீதி வளைவில் விலகி கடலேரிக்குள் பாய்ந்தது. இந்த விபத்தில் எவருக்கும் பெரியளவில் பாதிப்பு ஏற்படவில்லை. (ஓ-1)

# கஞ்சா வாங்கித் தந்த இரு மாத சிறை வாழ்வு

தென்மராட்சி,மே 3
கஞ்சா வைத்திருந்த நாவற்குழி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
அபராதத் தொகை செலுத்த முடியாததால் குற்றவாளி இரண்டு மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்கச் சிறைக்குச் சென்றார்.
நாவற்குழிப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய நபரை சாவகச்சேரி பொலிஸார் சோதனையிட்ட போது அவர் கஞ்சா மறைத்து வைத்திருந்ததைக் கண்டனர்.
அவரைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்றம். அதனைச் செலுத்தத் தவறியமையால் அவர் சிறைக்கு அனுப்பப்பட்டார். (ம-9)

## றெகுலேற்றர் வெடித்ததால் சிதறி ஓடிய நோயாளர்கள்

### சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பரபரப்பு

தென்மராட்சி, மே 3
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் திடீரென வெடிப்புச் சத்தம் கேட்டதால் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறக் காத்திருந்த நூற்றுக் கணக்கான நோயாளர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ள தனி அறையில் வைக்கப்பட்டிருந்த சிலிண்டரில் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் றெகுலேற்றர் பொருத்திய வேளையில் அது வெடித்த சத்தம் பெரிதாகக் கேட்டதால் மக்கள் பயந்து ஓடியதாகத் தெரிவிக்கப்பட்டது.
றெகுலேற்றர் வெடித்தபோதிலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (வ)

# பயனுள்ள கருத்திட்டங்களாக அபிவிருத்தி மாறவேண்டும்

## வலி . தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 3
வலி.தென்மேற்கு பிரதேச சபை அபிவிருத்தித் திட்டங்களை முன்மொழிவதுடன் மட்டும் நின்றுவிடாமல் திட்டங்கள் ஒவ்வொன்றையும் மக்களுக்கு பயனுள்ள கருத்திட்டங்களாக மாற்ற செயற்பட வேண்டும்- என்று வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் தெரிவித்தார்.
மாகாண அரசின் நிதி மற்றும் புறநெகும அபிவிருத்தி நிதிப் பயன்பாடு தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே பிரதேச சபை உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
''சபையில் உள்ள நா மக்களுக்கு பயனுள்ள கருத்திட்டங்களை முன்மொழிந்து மாகாண அரசினாலும், புறநெகும நிதியினாலும் ஒதுக்கப்படும் அபிவிருத்தி நிதிகளைப் பயன்படுத்த முன்வரவேண்டும். காலம்கடந்த சிந்தனை பயனற்றது. சேவையில் இருக்கும் போதே மக்களுக்கு பணியாற்ற வேண்டும்'' என்றார் உறுப்பினர்.
அரச, சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவி நிதிக்கு அப்பால் எவ்வாறு சபையைப் பயன்படுத்தி, வலுவுடையதாக்கி பயன்மிக்க சேவைகளை மக்களுக்கு வழங்கலாம் என ஒவ்வொரு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் சிந்திக்க வேண்டும். என்றும் அவர் தெரிவித்தார். (எ-50)

> காலம்கடந்த சிந்தனை பயனற்றது. சேவையில் இருக்கும் போதே மக்களுக்கு பணியாற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை விரிவு செய்

அறிவைத் தருவது, அறிவை வளர்ப்பது கல்வி.

அறிவு என்பது என்ன?

அறிவு என்பது புலன்கள் கொண்டு வருகின்ற அனுபவங்கள் மட்டுமல்ல; அந்த அனுபவங்களுடன் மனதில் சில செயற்பாடுகளும் இணைந்ததே அறிவு.

நெருப்பு என்பது சுடும். இஃது ஓர் உண்மை. இதனைத் தன் அனுபவத்தால், அதாவது ஒருவன் தன் கையால் நெருப்பைத் தீண்டி, அது கையைச் சுட்டு, உணரும்போது அந்த உணர்வு ஓர் அறிவு ஆகிறது. ஆனால், அதை மட்டும் அறிவு என்று சொல்ல முடியுமா?

நெருப்பு சுடும் என்பதை அறிந்து கொண்டு, மேலும் தனக்கு, நெருப்பினால் துன்பம் வராதவாறு பாதுகாத்துக் கொள்ளக்கூடிய வழிமுறைகளைச் சிந்திக்கச் செய்வதே அறிவு.

இத்தகைய அறிவை, சிந்திக்கும் ஆற்றலைத் தருவதே கல்வி.

அதாவது கல்வி என்பது மனிதனைச் சரியாகத், திறமையாகச் சிந்திக்கப் பயிற்றுவிப்பது.

கல்வி தந்த அறிவை நாம் விரிவுபடுத்த வேண்டும். ஏட்டுக் கல்வியை மட்டும் கற்றுக் கொள்ளும் குறுகிய அறிவாக இருக்கக்கூடாது.

'அறிவை விரிவு செய், அகண்டமாக்கு' என்பார் பாவேந்தர் பாரதிதாசன்.

இன்று நம்மில் பலர் குறுகிய அறிவுடன்தான் இருக்கிறார்கள்.

மருத்துவம், பொறியியல், கணினித்துறை போன்றவற்றில் பட்டம் பெறுகிறார்கள். அவர்களின் அறிவு, அந்தக் குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே அடங்கிவிடுகிறது.

அவர்கள் கற்றதை, பெற்ற அறிவைப் பணம் சம்பாதிப்பதற்காகவே பயன்படுத்துகின்றனர்.

கல்வியறிவு, வாழ்க்கையை வளப்படுத்த வேண்டும்.

வாழ்க்கைக்குரிய கல்வியைக் கற்க வேண்டும்.

தமிழ்ப் பாடல்களில் நல்ல நீதிகள் உண்டு. அறம் உண்டு. வாழ்வைச் செம்மைப்படுத்தும் போதனை உண்டு. தெய்வீகம் உண்டு. அனைத்துவிதமான நல்ல விடயங்களும் தமிழ்ப் பாடல்களில் கொட்டிக் கிடக்கின்றன.

நீ அறிவியல் படி; வரலாறு படி; கணிதம் படி; உலக விடயங்களைப் படி; வானவியல் படி; பிற மொழிகளைப் படி; அது போல் தமிழையும் படி. நீ எதைப் படித்தாலும் ஆர்வத்துடன் படி.

என் தந்தை இண்டர்மீடியட் (அந்தக் காலம் பட்டப் படிப்பு) வரைதான் படித்திருந்தார். ஆனால் அவருக்குப் பல மொழிகள் தெரியும். ஆங்கிலம், ஹிந்தி, சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளை நன்கு அறிந்து வைத்திருந்தார்.

மராட்டியில் பாடுவார். கன்னடத்தில் பாடுவார். அனைத்து மொழியிலும் உரையாடுவார். காரணம், அவரது ஆர்வம்.

ஆர்வத்துடன் நீ எதைக் கற்றாலும் அது எளிதில் உன் வசமாகும்.

ஏட்டுக்கல்வியை மட்டும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் படித்துவிட்டு, அதற்கான பட்டத்தைப் பெற்றுவிட்டு, "நான் படித்தவன், கற்றவன்" என்று இறுமாப்புக் கொள்ளாதே!

நீ மற்ற நல்ல பயனுள்ள நூல்களைப் படித்தால்தான், உன் அறிவு பரந்து விரிந்தால் தான் நீ கற்றவனாகிறாய்.

நீ மிகுதியாகக் கற்றிருந்தாலும், பல விதமான விடயங்களை ஆழமாக அறிந்திருந்தாலும் கர்வம் கொள்ளுதல் கூடாது.

ஏனெனில் கற்றது கைம்மண் அளவு. கல்லாதது உலகளவு.

"கற்றவர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்"

அதாவது, நல்ல விடயங்களைக் கற்று, அதை நன்கு உணர்ந்து, அடக்கமாக வாழ்வதுதான் கல்வி கற்றவனுக்கு அழகு.

சரஸ்வதி கையிலே ஏடு. பிரம்மன் கையிலே ஓலைச்சுவடி. தட்சணாமூர்த்தி கையிலே ஏடு என்று அவர்கள் திருவுருவத்திலே பார்த்திருப்பாய். இது எதை உணர்த்துகிறது தெரியுமா?

"நாங்கள் இன்னும் படித்துக் கொண்டிருக்கிறோம். ஞானத்தைத் தேடிக் கொண்டிருக்கிறோம்" என்பதையே இந்தத் தெய்வ உருவங்கள் உணர்த்துகின்றன.

உலகில் அனைத்தும் அறிந்தவனும் இல்லை.

ஒன்றும் தெரியாதவனும் இல்லை.

முடிந்தவரை உன் ஆயுள் காலத்துக்குள் எவ்வளவு முடியுமோ, அவ்வளவும் கற்றுக்கொள்.

அறிவில்லாதவன் முட்டாள் என்று பெயர் எடுப்பவன் மனிதனாய்ப் பிறந்து என்ன பயன்? அறிவைப் பெருக்கு; விசாலமாக்கு. கற்கக் கற்கத்தான் அறிவு பெருகும்.

'கற்றனைத்தூறும் அறிவு' என்பார் வள்ளுவப் பெருந்தகை.

உன் அறிவு கடுகைப் போல் குறுகியதாய் இருக்கக் கூடாது.

கடலைப் போல் பரந்து விரிந்ததாய் இருக்க வேண்டும்.

அனைவருக்கும் பயன்படும் விதத்தில் அது பேரொளி வீச வேண்டும்.



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# அடியவர் வேண்டியதை அருளும் மாசிவன் ஸ்ரீ மீனாட்சி அம்மன்

(கடந்தவாரத் தொடர்ச்சி....)



ஞானி

மட்டுவிலில் இருந்து மணமகளாக மாசிவன் வந்த மங்கை தன்னோடு எடுத்து வந்து தனது இல்லத்துக்கு அருகில் வேப்ப மரத்தடியில் பிரதிஷ்டை செய்ததோடு குடும்பமாக வழிபட்டு அருள் பெற்றார். மாசிவன் எல்லைக் காளி அம்பாள் ஊரின் நடுவிடத்தில் உற்ற தெய்வமாக இருந்து அடியவர்கள் வேண்டுவதை அருளுவதாக ஊரவர்கள் அம்பாளின் அருள் வியாபகத்தை வியந்து மகிழ்கின்றனர்.

காளி அம்பாளாக மாசிவன் வந்தவள் ஸ்ரீ மீனாட்சி அம்பாளாக பெயர் மாற்றம் பெற்றாள். காலவோட்டத்தில் ஏற்பட்ட நிகழ்வு ஊரின் மத்தியில் காவல் தெய்வமாக அமர்ந்து அருள் பாலிக்கும் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் அடியவர்கள் குறையிரந்து சமர்ப்பிக்கும் வேண்டுதல்களை குறுகிய காலத்தில் நிறைவு செய்வதோடு அடியவர்களுக்கு காட்சியும் கொடுத்து அவர்களின் குறைகளை போக்குகின்றார் என மூத்த பிரஜைகள் கூறி மகிழ்கின்றனர்.

ஓலைக் கொட்டிலில் இருந்த அம்பாளுக்கு இன்று சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய அழகான ஆலயம் அமைக்கப்பட்டிருப்பதோடு முதற்கட்டமாக ஒரு கோடி உத்தேச மதிப்பீட்டில் ஆலய முகப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மூடு சாந்து மண்டபம் உட்பிரகாரம் முழுவதையும் உள்ளடக்கியதாக கட்டம் கட்டமாக நிறைவு செய்ய தீர்மானித்திருப்பதாக ஆலய பரிபாலன சபையின் செயலாளர் இ.கஜேந்திரா தெரிவித்தார். அதுமட்டுமல்ல அழகான சித்திரத்தேர் மற்றும் கொடித்தம்பம் அமைத்து வேதாகம முறைப்படி கொடியேற்றி திருவிழா செய்ய அடியவர்கள் உத்தேசித்திருப்பதாக கூறினார்.

1986 ஆம் ஆண்டு ஊரவர்கள் ஒன்றுகூடி ஆலயத் துக்கு பரிபாலன சபை ஒன்றை அமைத்து ஆலயத் திருப்பணி மேற் கொண்டதோடு காளி கோயில் என அழைக் கப்பட்ட ஆலயத்தை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் என பெயர் மாற்றம் செய்தனர்.

ஆலயத் திருப்பணிக்கு உள்ளூர் அடியவர்களும், புலம்பெயர் உறவுகளும் தாராளமாக வாரி வழங்கி வருவதோடு ஆலயத்தில் அலங்கார உற்சவம் நடைபெறும் ஆடி மாதம் ஊரில் இருந்து பிரிந்து வெளியிடங்களிலும் வெளிநாடுகளிலும் வாழும் உறவினர் ஊரில் வந்து தங்கியிருந்து உற்சவங்களில் கலந்து மகிழ்கின்றனர்.

பன்னிரண்டு பரப்பு நிலம் ஆலயத்துக்குரிய காணியாக உள்ள போதிலும், ஆலயத்தின் சுற்றாடலில் உள்ள நிலங்களை ஆலயத்துக்கு காணிக்கையாக வழங்குவதற்கு அடியவர்கள் முன்வந்திருப்பதாகவும், புதிய சித்திரத்தேர் ஓடுவதற்கான வெளிவீதி வசதிக்கான காணிகளை பெற்று மேம்படுத்த உத்தேசித்திருப்பதாக ஆலய பரிபாலனசபை செயலாளர் தெரிவித்தார்.

அற்புதங்கள் நிறை மாசிவன் ஸ்ரீ மீனாட்சி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் அலங்காரத் திருவிழாவாக பன்னிரண்டு தினங்கள் நடைபெறுகின்றன. ஆடிப்பூரத்தில் மணவாளக் கோல உற்சவம் நடைபெறக்கூடியதாக அதற்கு முந்திய பதினொருதினங்களும் திருவிழாக்கள் நடைபெறும்.

ஆலயத்தில் நடைபெறும் நவராத்திரி உற்சவங்களின் இறுதிநாள் விஜயதசமி அன்று நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் அடியார்கள் சூழ அம்பாளின் ஆலயத்துக்கு எழுந்தருளி வாழைவெட்டி அருள்புரிவது அற்புதமான நிகழ்வு. அத்துடன் ஆண்டு தோறும் விசேட உற்சவங்கள் தை அமாவாசை, சித்திரை பௌர்ணமி, ஆடி அமாவாசை, பங்குனித்திங்கள் மற்றும் திருவெம்பாவை, வைகாசி விசாகம், தீபாவளி, மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, தைப்பொங்கல் தினங்களில் விசேட உற்சவங்கள் நடைபெறும். வருடாந்த மகோற்சவம் மற்றும் விசேட உற்சவ காலங்களில் ஊரே கூடி அம்பாளின் அருள் பெற்று உய்கின்றனர்.

1986 ஆம் ஆண்டு ஊரவர்கள் ஒன்றுகூடி ஆலயத்துக்கு பரிபாலனசபை ஒன்றை அமைத்து ஆலயத்திருப்பணி மேற்கொண்டதோடு காளி கோயில் என அழைக்கப்பட்ட ஆலயத்தை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் என பெயர் மாற்றம் செய்தனர். 1986 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 20 ஆம் நாள் (05.09.1986) கன்னி லக்கின சுப முகூர்த்த வேளையில் முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. இரண்டாவது கும்பாபிஷேகம் 2000 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 23 ஆம் நாள் (08.11.2000) நடைபெற்றது.

மீனாட்சி அம்பாள் என பெயர் மாற்றம் செய்ததோடு மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம் மற்றும் திருமஞ்சனக்கிணறு அமைத்து ஸ்ரீ மீனாட்சி அம்பாள், விநாயகர், முருகன், வைரவர், நாகதம்பிரான், நந்தீஸ்வரர் போன்ற மூர்த்தங்களை எழுந்தருளச்செய்து பரிவார தெய்வங்களுக்கு கோயில் அமைத்து பூசை வழிபாடு நடைபெறுகின்றது.

ஆலயப் பூசகர்களாக சிவஸ்ரீ.க.தியாகராசக் குருக்கள் அவரின் மகன் பாலசுப்பிரமணிய சர்மா மற்றும் இராமகிருஷ்ண சர்மா ஆகியோர் கடமையாற்றி வந்தனர். 1986 ஆம் ஆண்டு இடம்பெற்ற கும்பாபிஷேகத்தை தொடர்ந்து பிரம்மஸ்ரீ குகதாஸ சர்மாவும் அவரது மகன் பாலகிருஷ்ணசர்மாவும் ஆலய பூசை கிரியைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களுக்கு எதிரான போரும் உண்மைகளை வெளியிடும் உரிமைகளுக்கு வாய்ப்பூட்டும்

பீ.ஏ. அந்தோனிமார்க்

பத்திரிகை சுதந்திரம் என்றால், பத்திரிகை வெளியிடும் ஸ்தாபனங்கள் சுதந்திரமாக தமது கருத்துக்களை அல்லது செய்திகளை வெளிப்படுத்துவதற்கு உரிய உரிமைகள் எனக் கூறலாம். பொதுவாக நாட்டில் நடைபெறும் பொருளாதார, அரசியல், சுகாதார, விவசாய, விளையாட்டு போன்ற விடயங்கள் சம்பந்தமாக அவ்வப்போது நடைபெறும் நிகழ்வுகளையும், அதன் நன்மை தீமைகளையும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் செய்திகளாக வெளியிடுதலாகும். இந்தச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துபவர்கள் பத்திரிகை ஸ்தாபன ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகும். எந்த ஒரு நாட்டில் ஊடகத்துறைக்கும் ஊடகவியலாளர்களுக்கும் சுதந்திரமும், பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளதோ அந்த நாடு எல்லா வழிகளிலும் முன்னேறியிருப்பதைக் காணலாம். படிப்படியாக சர்வதேச மிலேனியம் அபிவிருத்தி இலக்கை எட்டுவதையும் காணலாம். ஆனால் பத்திரிகைகள், ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பு அந்தந்த நாட்டு அரசாங்கங்களுக்கு உரியதாகும். அதற்குத் துணையாக நீதிமன்றங்கள் இயங்குகின்றன. அதற்கு மேலதிகமாக யுனெஸ்கோ ஸ்தாபனம், ஐக்கிய நாடுகள் சபை, பத்திரிகை ஆணைக் குழுக்கள், ஊடகவியலாளர் சங்கங்கள், சர்வதேச சங்கங்கள் என்பனவும் ஊடகவியலாளர்களையும் ஊடகங்களையும் பாதுகாத்து வருகின்றன.

ஊடகங்கள் என்று கூறும் போது பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சிகள், வானொலிகள், இணையங்கள், புத்தக வெளியீடுகள் உட்பட அனைத்தையும் உள்ளடக்கும்.

### பத்திரிகை ஊடகங்களின் முக்கியத்துவம்

ஊடக ரீதியான கண்ணோட்டத்தில் பார்க்கும்போது 75 வீதமான செய்திகளை பத்திரிகைகள் தான் வெளிப்படுத்துகின்றன. இந்த ரீதியில் பத்திரிகைகளின் சுதந்திரம் நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கை முன்னெடுத்துச் செல்கிறது. ஊடகங்களில் பத்திரிகையின் விநியோகம் உலகத்தையே திருப்பக் கூடிய வல்லமை பெற்று விளங்குகின்றது. ஆனால் ஊடக சட்டங்களின் கீழ் கருத்து வெளியிடும் சுதந்திரம் ஒரு மட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஒரு கருத்தை வெளியிடும்போது சட்டத்தில் ஒரு வரையறைக்குள் அது மக்களை சென்றடைய வேண்டும் என்ற கோணத்தில் பல சுவாரஸ்யமான செய்திகள் வெளியிடப்படுகின்றன. ஆனால் இந்தச் செய்திகளின் ஊடாக ஒருவரை ஏளனப்படுத்துவதாக அல்லது அவரை சமூகத்தில் குறைத்து மதிப்பிடுவதாக இருந்தால் உண்மையான நோக்கம் அங்கு பூர்த்தி செய்யப்படவில்லை. சட்டத்தின் முன் சகலரும் சம உரிமை பெற்றவர்கள் ஆவர். வெகுஜன ஊடகங்கள் மற்றும் தொடர்பாடல் என்பன யுனெஸ்கோவின் கொள்கைத் திட்டங்களின் கீழ் வருகின்றன. ஊடகம் தொடர்பாக உலகளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் ஒரு அம்சமாக யுனெஸ்கோ 14 பேர் கொண்ட ஆணைக்குழு ஒன்றை 1972 ஆம் ஆண்டு அமைத்தது. ஊடகங்களின் பங்களிப்புக்கள், ஊடகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கும் இந்த ஆணைக்குழு அயர்லாந்து தேசத்தைச் சேர்ந்த சைம் மக்கீல்ட் என்பவர் தலைமையிலே நியமிக்கப்பட்டது. இந்த முன்மொழிவுகள் பாரிய தொரு புத்தகமாக 1980 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

### ஊடகங்களின் பங்களிப்பு தொடர்பான முக்கிய அம்சங்கள்

இந்த ஆணைக்குழுவின் அறிக்கையின்படி ஊடகங்களின் பங்களிப்பு தொடர்பாக எட்டு முக்கிய விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவையாவன;

**1. தகவல் வழங்குதல்:-** மக்கள் தமது கிராமத்தில் நகரத்தில், நாட்டில், உலகத்தில் என்ன நடைபெறுகிறது என்பது பற்றி சரியான தகவல்களை அறிந்து கொள்ள வேண்டும். இதில் வேறு எந்த விடயங்களையாவது மேலதிகமாக உள்ளடக்கமுடியாது. தகவல் என்று கூறும்போது அது சரியானதாகவும், துல்லியமானதாகவும், நடைமுறைப்படுத்தக்கூடியதாகவும், பக்கச் சார்பற்றதாகவும் அமையவேண்டும் இது [illegible] ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கு அவசியமாகும்.

**2. சமூகமயப்படுத்துதல்:-** ஊடகங்கள் மக்களுக்கு சரியான அறிவை வழங்கி சமூகத்தை பிரச்சினைகளில் இருந்து மீட்டெடுப்பதற்கு உதவ வேண்டும்.

**3. ஊக்குவித்தல்:-** ஒரு சமூகம் முன்னேற வேண்டுமாயிருந்தால் அச்சமூகம் ஊக்குவிக்கப்படல் வேண்டும். நாளாந்தம் நாட்டில் நடக்கும் செயற்பாடுகளை மக்களுக்கு செய்திகள் மூலம் தெரியப்படுத்த வேண்டும். 2006 ஆம் ஆண்டு (சுனாமி) கடல் கோள் சம்பந்தமான செய்தியை ஊடகங்கள் நேரகாலத்துடன் அறியப்படுத்தியிருந்தபடியினால் பலர் தம்மை காப்பாற்றவும் மீண்டும் சாதாரண வாழ்க்கைக்கு இணைவதற்கும் உதவியது.

**4. விவாதங்களும் கலந்துரையாடல்களும்:** ஊடகங்கள் ஒரு சமூகம் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விவாதங்களையும் கலந்துரையாடல்களையும் நடத்தி சில விடயங்களை பகிரங்கப்படுத்துவதன் மூலம் மக்கள் சரியான தீர்மானங்கள் எடுப்பதற்கு உதவியளிக்க வேண்டும்.

**5. அறிவூட்டல்:-** 20 ஆம் நூற்றாண்டில் அறிவுத்திறன் மிகவும் வேகமாக வளர்ச்சி கண்டுள்ளது. குறிப்பாக அறிவுத்திறன் அதிகரிக்கும் விதம் இரட்டிப்படைந்துள்ளது. இதன் மூலமாக மக்கள் விவசாய [illegible] யுள்ளார்கள். எனவே புதிய முயற்சிகள், நவீன தொழில்நுட்பம் விருத்தி, நூதன கண்டுபிடிப்புகள் பற்றி ஊடகங்கள் மக்களுக்கு அறிவூட்ட வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ளன.

**6. கலாசார பரம்பல் :-** இது வெகுஜன ஊடகங்களின் முக்கிய ஒரு கடமையாகும் கலாசாரம் பற்றிய விழிப்புணர்வு அல்லது கலாசாரத்தை மக்கள் மத்தியில் பரப்புவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கும் பாரம்பரியவளர்ச்சிக்கும் பெரும் உறுதுணையாக அமையமுடியும்.


**7. பொழுது போக்கு:-** ஊடகங்கள் மக்களுக்கு பொழுதுபோக்குச் சாதனமாக அமையவேண்டுமென்று மீமக்கீல்ட் ஆணைக்குழு கூறுகிறது. சஞ்சிகைகள், குறியீடுகள், நாடகங்கள், நாட்டியம், ஒலி ஒளியும் நகைச்சுவை, விளையாட்டு போன்றவற்றில் மக்களை மகிழ்வித்தல் அல்லது பொழுது போக்க உதவியளித்தல்.

**8. ஒருங்கிணைத்தல்:-** மக்கீல்ட் ஆணைக்குழு இறுதியாக அடையாளப்படுத்தியிருப்பது ஊடகங்களின் ஓர் இணைப்புப் பணியே மாறுபட்ட இனங்கள், மாறுபட்ட சமூகங்களுக்கிடையில் சமத்துவத்தைப் பேணுவது என அர்த்தப்படுகிறது. சமூக கலாசார, இன ரீதியான பிணைப்புக்களுடைய ஒரு உலகத்திலே நாம் தற்போது வாழ்ந்து வருகிறோம். உலகத்தில் இன்று ஏறக்குறைய 200 நாடுகள் உள்ளன. ஐ.நா சபையில் உறுப்புரிமை 192 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன. கலாசார வேறுபாடுகள் எல்லா நாடுகளிலும் உண்டு. இவ்வாறு வேறுபட்ட சமூகங்களுக்கிடையில் சமத்துவத்தையும் சமாதானத்தையும் பேணி, சமூகங்களை விட்டுக்கொடுப்புடன் செயற்பட வைப்பதே ஊடகங்களின் பங்காகும்.



இன்று உலக பத்திரிகை சுதந்திர தினம்

03.05.2013




### இலங்கையில் ஊடகங்கள் எதிர்நோக்கும் சவால்கள்

இலங்கையில் ஊடகங்கள் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே சமாதானத்தையும் சக வாழ்வையும் ஏற்படுத்த வேண்டும். ஆனால் இன்று சமூகம் அல்லது அரசுக்கு எதிரான போர்களினால் ஊடக சுதந்திரம் மற்றும் செய்திகள் வெளியிடும் உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஊடகவியலாளர்கள் பல தியாகங்களையும், சில நேரம் உயிரையுமே தியாகம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். அத்துடன் இவர்களின் ஊடகத்தொழில் - பலவந்தங்கள், தொடர்ந்த பயமுறுத்தல்கள், தொந்தரவுகள், பலவிதமான கட்டுப்பாடுகள் செய்தித் தணிக்கைகள் போன்றவற்றிற்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. ஆனாலும் பல துன்பங்களுக்கு மத்தியிலும் ஊடக சுதந்திரத்திற்காகவும் தொடர்ந்து தகவல்களை வழங்கும் சுதந்திரத்திற்காகவும் போராடி வருகிறார்கள்.

இலங்கையானது உலகத்தில் மிகவும் பயங்கரமான நாடு என சர்வதேச பத்திரிகை சுதந்திர ஸ்தாபனத்தின் மூலமாக (INTERNATIONAL) அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக பாரிஸ் நாட்டிலுள்ள (R.S.F) ஆர்.எஸ்.எவ். எனப்படும் ஊடக ஸ்தாபனம், பத்திரிகை சுதந்திரத்துக்கு உலகத்திலே மிகக் குறைந்த மதிப்புக் கொடுக்கும் நாடு இலங்கையென குற்றம் சாட்டியுள்ளது. மற்றும் ஊடகவியலாளரை பாதுகாக்கும் குழு (C.P.J) எனப்படும் அமைப்புத் தயாரித்த ஊடகத்துக்கு தீங்கு செய்யும் நாடுகளில் இலங்கை முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இலங்கையில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் போன ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம். ஜனவரி 2000 இல் இருந்து டிசம்பர் 2008 வரை 20 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். 20 இற்கு மேற்பட்ட அனுபவம் வாய்ந்த ஊடகவியலாளர்கள் அரசியல் தஞ்சம் கோரி வேறு நாடுகளுக்குச் சென்று விட்டார்கள். எல்லையற்ற செய்தியாளர்கள் (REPORTERS SANS FRONTIERS) அமைப்பு ஆண்டு தோறும் வெளியிட்டு வருகின்ற ஊடக சுதந்திர சுட்டெண் (PRESS FREEDOM INDEX) வரிசையில் 169 நாடுகளில் இலங்கை 153 வது இடத்தில் இருக்கின்றது. கடந்த 4 ஆண்டுகளாக, குறிப்பாக இப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பிற்பாடு ஊடகவியலாளரினதும், ஊடகங்களினதும் சுதந்திரம் படுமோசமாகிவிட்டது. இதுவரை பல ஊடகவியலாளர்கள் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டு சடலமாக மீட்கப்பட்டது டன் காணாமல் போன பலரின் நிலைமை குறித்து இதுவரை எதுவும் தெரியவில்லை. - இது போக யாழ்ப்பாணம் உதயன் காரியாலயம் கடந்த மாதங்களில் இரண்டு தடவையாக தாக்கப்பட்டு அங்கிருந்த பல லட்சம் பெறுமதியான அச்சு இயந்திரங்கள் உடைத்து நாசமாக்கப்பட்டு தொழிலாளர்களும் அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள். அதே போன்று 2006 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த சாலையில் உலக ஊடகவியலாளர் மகாநாடு நடக்கும் போது மே மாதம் 2 ஆம் திகதி இரவு யாழ். உதயன் காரியாலயம் உடைக்கப்பட்டு அங்கிருந்த பல தொழிலாளர் கொலைசெய்யப்பட்டார்கள். இப்படியாக பல தடவை உதயன் காரியாலயமும் தொழிலாளர்களும் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டார்கள். இப்படியாக கொழும்பு சுடர் ஒளி காரியாலயமும் பலதடவை தாக்கப்பட்டு தொழிலாளர்களும் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

ஆகவே ஊடக நிறுவனங்களும் ஊடகவியலாளர்களும் அச்சமின்றி பணியாற்றக் கூடிய ஒரு சூழல் அமைக்கப்படல் வேண்டும். குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். உலகளாவிய அறிவை ஊடகவியலாளர் உள்வாங்கி, உள்வாங்கிய அறிவை மறைத்து வைத்திருக்காமல் நாடு முழுவதும் உள்ள சமூகத்திற்கு பரப்ப வேண்டும். நாட்டில் ஜனநாயக ஆட்சி நிலை பெற வேண்டும், சாந்தியும் சமாதானமும் நிலவவேண்டும்.

ஊடகங்களினதும் ஊடகவியலாளர்களின் கடமைகளும் பங்களிப்பும் இவற்றில் தான் தங்கியுள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LG இன் புதிய கைபேசிகள்

கொரியாவை தளமாகக் கொண்டு இயங்கும் LG நிறுவனமானது Optimus F5 என்ற புத்தம் புதிய கைப்பேசிகளை அறிமுகப்படுத்து கின்றது.

4G LTE வலையமைப்பு தொழில்நுட்பத்தினைக் கொண்ட இக்கைப்பேசிகள் 4.3 அங்குல அளவும் 256ppi Resolution உடைய HD தொடுதிரையினை உள்ளடக்கியுள்ளதுடன் 1.2GHz வேகத்தில் செயலாற்றவல்ல Qualcomm Snapdragon Processor, 1GB RAM, 2150mAh மின்கலம் ஆகியவற்றினையும் கொண்டதாக வடிவமைக் கப்பட்டுள்ளன.

மேலும் கூகுளின் Android 4.1.2 இயங்குதளத்தினை அடிப்படை யாகக் கொண்ட செயற்படவல்ல இக்கைப்பேசிகளில் 5 மெகாபிக் சல்கள் உடைய பிரதான கமெரா, 1.3 மெகாபிக்சல்கள் உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா ஆகியன வும் காணப்படுவதுடன் சேமிப்பு நினைவகமானது 8GB ஆகவும் அமைந்துள்ளது. இவற்றின் விலையானது 445 டொலர்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




இக்கைப்பேசிகள் 4.3 அங்குல அளவும் 256ppi Resolution உடைய HD தொடுதிரையினை உள்ளடக்கியுள்ளதுடன் 1.2GHz வேகத்தில் செயலாற்றவல்ல Qualcomm Snapdragon Processor, 1GB RAM, 2150mAh மின்கலம் ஆகியவற்றினையும் கொண்டதாக வடிவமைக் கப்பட்டுள்ளன.

# புத்தம்புதிய Notebook கணினிகளை அறிமுகப்படுத்தும் Asus




கணனி உற்பத்தியில் சிறந்து விளங்கும் அஸ்தஸ் நிறுவன மானது Asus 1015E Notebook எனப்படும் புத்தம் புதிய மடிக் கணனிகளை அறிமுகப்படுத்தி யுள்ளது.

10.1 அங்குல அளவு மற்றும் 1366 x %68 Pixel Resolution உடைய திரையினைக் கொண்ட இச்சாதனமானது 1.1 எஜத் வேகத் தில் செயலாற்றவல்ல Intel Celeron 84% Dual Core Processor, பிரதான நினைவகமாக 2GB RAM ஆகியவற்றினையும் உள்ள டக்கியுள்ளது.

எனினும் இதன் பிரதான நினைவகமானது 4எஆ வரை அதிகரிக்கக்கூடியதாகக் காணப் படுதல் சிறப்பம்சமாகும்.

10.3து % து 1.4 என்ற அளவுப் பரிமாணமும் 2.8 பவுண்ட் எடையும் கொண்ட இந்த மடிக் கணனியானது 320எஆ சேமிப்புக் கொள்ளளவை உடையதாகவும் காணப்படுவதுடன் இதன் பெறு மதியானது 299 அமெரிக்க டொலர்களாகும்.

# அதிநவீன அன்ரோயிட் டேப்லட் அறிமுகம்

அதிநவீன டேப்லட் ஒன்றினை இலத்திரனி யல் சாதனகளை உற்பத்தி செய்யும் நிறுவன மான Pipo அறிமுகப்படுத்தியுள்ளது.

இது கூகுளின் அன்ரோயிட் இயங்குதளத் தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக் கப்பட்டுள்ளது.

Pipo M8pro எனும் இந்த டேப்லட் ஆனது 9.4 அங்குல அளவுடையதும், 1280 x 800 Pixel Resolution உடையதுமான தொடு திரையினைக் கொண்டுள்ளதுடன் Quad Core Processor மற்றும் பிரதான நினைவ கமாக 2GB RAM ஆகியவற்றினையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

மேலும் Android 4.1 Jelly Bean இயங்கு தளத்தினையும், 16எஆ சேமிப்பு வசதியை யும் கொண்டுள்ளதுடன் குறித்த சேமிப்பு வசதியினை MicroSD கார்ட்களின் உதவியு டன் தேவைக்கு ஏற்ப அதிகரித்துக் கொள்ள வும் முடியும். இவற்றுடன் 5 மெகாபிக் சல்கள் உடைய பிரதான கமெரா மற்றும் 2 மெகாபிக்சல்கள் உடைய வீடியோ அழைப் புக்களுக்கான கமெரா போன்றவற்றினையும் கொண்டுள்ள இச்சாதனத்தின் பெறு மதியானது 229 அமெரிக்க டொலர்களாகும்.

# Remember The Milk

## அன்ரோயிட் அப்பிளிகேஷனின் புதிய பதிப்பு வெளியிடப்பட்டது





நமது அன்றாட நடவடிக்கைகளை ஞாபகப்படுத்தும் அன்ரோயிட் அப்பிளிக்கேஷனான Remember The Milk இன் மேம்படுத்தப்பட்ட பதிப்பு தற்போது வெளியிடப்பட் டுள்ளது.

இப்புதிய பதிப்பில் முன்னைய பதிப்பில் காணப்பட்ட சில தவறுகள் சரிசெய்யப்பட்டுள்ளதுடன், பயனர்களைக் கவரக்கூடிய மேலும் சில அம்சங்கள் உட்புகுத்தப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை எணிணிடுநு கடுச்து குஞுணிணுநு தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து நிறுவிக்கொள்ள முடியும். remember the milk.com என்ற இணையத்தள முகவரியினூடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

# QWERTY கீபோர்ட் உடைய Nokia அண்டச் 210 செல்பேசிகள்

நோக்கியா நிறுவனமானது QWERTY கீபோர்ட் உடைய மீணிடுடிச் அண்டச் 210 எனும் புதிய ஸ்மார்ட் கைப்பேசி ஒன்றினை அறிமுகப்படுத்துவது தொடர்பான அறிவித்தலை வெளியிட்டுள்ளது.



2.4 அளவு, 320 து 240 Pixel Resolution உடைய LCD திரையினைக் கொண் டுள்ள இக்கைப் பேசியானது 2 மெகா பிக்சல்கள் உடைய கமெரா, 64MB சேமிப்பு நினைவகம் ஆகியவற்றினை யும் கொண்டுள்ள தடன் இச்சேமிப்பு நினைவகமானது microSD கார்ட்களின் உதவியுடன் 32GB வரை அதிகரிக்கக்கூடியதாகவும் அமைந்துள்ளது.

இக்கைப்பேசிகள் தனியான சிம் மற்றும் இரண்டு சிம்களை இணைத்து பயன்படுத்தக்கூடிய இரு பதிப்புக்களாக வெளிவரவுள்ளதுடன் இவற்றில் க்குஆ இணைப்பான் மற்றும் ஙிடிஉளடி வயர் லெஸ் தொழில்நுட்பமும் உள்ளடக்கப் பட்டுள்ளது. இவ்வருடத்தின் இரண் டாவது காலாண்டுப் பகுதியில் அறி முகப்படுத்தப்படவுள்ள இவற்றின் அறிமுக விலையானது 72 டொலர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பிலும் இராணுவ மயமாக்கல்

## அனுமதிக்கவே முடியாது என்கிறார் அரியம் எம்.பி.




மட்டக்களப்பு,மே 3
வடக்கை இராணுவமயமாக்கி சீரழித்து வருகின்ற அரசு, மட்டக்களப்பு மாவட்டத்தையும் அவ்வாறு இராணுவமாயமாக்கி தமிழரை மேலும் நசுக்க எடுக்கும் முயற்சியை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
தற்போது நாட்டில் பூரண சமாதானம் நிலவுவதாக அரசு கூறி வருகின்றது. அப்படி இருக்கும்போது தமிழர் பகுதிகளில் இராணுவ முகாம்களை அமைத்து இராணுவ மயமாக்கலை உருவாக்குவதானது ஒருபோதும் சமாதானத்தை தோற்றுவிக்கும் செயற்பாடாக அமையாது.
அரசு போரில் வெற்றி கொள்வதற்கு சர்வதேசமும் இந்தியாவும் உதவிசெய்தன. ஆனால்,போருக்குப் பின்பு மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களின் சுதந்திரமான வாழ்க்கை என்ற விடயத்தில் சர்வதேசமும் இந்தியாவும் பாராமுகமாகச் செயற்படுகின்றன.
போர் முடிவுற்று 4 ஆண்டுகளாகியும் தமிழ் மக்கள் இன்னும் சொல்லொணாத் துயரங்களுடனேயே வாழ்கின்றனர். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அவர்களின் சொந்த நிலங்களில் இருந்து இராணுவம் இன்னும் வெளியேறவில்லை. சம்பூர் மக்கள் இன்னுமே பூரணமாகக் குடியேற்றப்படவில்லை.
வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் நிலங்களை இராணுவம் சுவீகரித்துள்ளது. அந்த நிலங்களை மீட்பதற்கான போராட்டங்களை அந்த மக்கள் முன்னெடுத்து வருகின்றனர்.
எனவே, இவ்வாறு இருக்கும் போது மட்டக்களப்பிலும் புதிய இராணுவ முகாம்களுக்காக 12 இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை இராணுவத் தலைமையகம் மேற்கொண்டு வருகின்றது.
தமிழர் பகுதிகளில் இராணுவ மயமாக்கலை மேற்கொள்ளக்கூடாது. ஏற்கனவே இராணுவம் பிடித்துள்ள தமிழ் மக்களின் நிலங்களில் இருந்து அவர்கள் வெளியேற வேண்டும். புதிய இராணுவ முகாம்களை அமைக்கக் கூடாது போன்ற விடயங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பும் சர்வதேச அமைப்புகளும் அரசை வற்புறுத்தி வருகின்ற நேரத்தில், புதிய இராணுவ முகாம்களை அமைப்பதற்காக இராணுவம் நிலங்களை அடையாளப்படுத்தி அவற்றை சுவீகரிக்க நடிவடிக்கை மேற்கொண்டு வருவதானது தமிழ் மக்கள் மத்தியில் அரசு மீது ஒருபோதும் நல்லெண்ணத்தை ஏற்படுத்தாது. -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கிழக்கில் நில அதிர்வு அளவீட்டு மையம்

### நிறுவுகிறது புவிச்சரிதவியல் பணியகம்

அம்பாறை,மே 3
கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கும் வகையில் நில அதிர்வு அளவீட்டு மையமொன்றை அமைப்பதற்கு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தீர்மானித்துள்ளது.
அம்பாறை,வடினாகல பகுதியில் கடந்த காலங்களில் பதிவான நில அதிர்வுகளை கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று பணியகத்தின் பணிப்பாளர் அனில் பீரிஸ் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-
நில அதிர்வு மீண்டும் பதிவாகும் சந்தர்ப்பங்களில் அதனை அளவிடுவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
நாட்டில் தற்போது மிஹிந்தலை - மாகந்தராவ, பல்லேகலே , ஹக்மன பகுதிகளில் நிலஅதிர்வு அளவீட்டு மையங்கள் அமைந்துள்ளன. எனவே, கிழக்கு மாகாணத்திலும் விரைவில் அதனை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அம்பாறை - வடினாகல பகுதியில் பதிவான நில அதிர்வுக்கான காரணத்தை ஆய்வுகளின் மூலம் கண்டறிய முடியாது போயுள்ளது.
இந்த அதிர்வுகளுக்கான காரணத்தைக் கண்டறிவதற்கு எதிர்காலத்தில் வேறு அணுகுமுறைகள் பின்பற்றப்படவுள்ளன.
நில அதிர்வு தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்வது மிகவும் கடினமான விடயம். அதற்கமைய ஆய்வுகளுக்குத் தேவைப்படும் கால அவகாசம் மற்றும் ஆய்வை மேற்கொள்ள வேண்டிய முறை தொடர்பில் தற்போது கலந்துரையாடப்பட்டு வருகிறது.-என்றார். (ச)



திருகோணமலை, காந்திநகர் முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தில் பால்குடப் பவனி இடம்பெற்றபோது பக்தர்கள் கலந்து கொண்டு நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்றனர். (40)

## யானையிலிருந்து பாதுகாக்க 'டோச் லைற்'



மட்டக்களப்பு,மே 3
மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேச செயலர் பிரிவில் வாழும் மக்கள் யானைத் தொல்லையில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள விசேட 'டோச் லைற்'கள் வழங்கப்பட்டுள்ளன.
வவுணதீவுப் பிரதேச எல்லைப் பகுதியில் யானை வேலி அமைக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றுக்கு அப்பாலும் யானைகளின் தொல்லை அதிகரித்து வருவதனால், அந்தப் பகுதியில் மக்கள் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.
மக்களையும் அவர்களுடைய விவசாய செய்கையையும் பாதுகாத்துக் கொள்ள விசேட டோச் லைற்களை வழங்குமாறு கேயார் நிறுவனத்திடம் வவுணதீவுப் பிரதேச செயலர் வெ.தவராஜா வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார்.
அதனையடுத்தே தலா ஐயாயிரம் ரூபா பெறுமதியான 20 விசேட டோச் லைற்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன.
பாவற்கொடிச்சேனை, காந்திநகர்,பன்சேனை, உன்னிச்சை, நெடியமடு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு முதற்கட்டமாக டோச் லைற்கள் வழங்கப்பட்டன.
இந்தத் திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் ஏனைய பகுதி மக்களுக்கும் விசேட டோச் லைற்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வடிச்சல் திட்டம் இடைநிறுத்தம்; சிறுபோக நெற்செய்கை பாதிப்பு



மட்டக்களப்பு,மே3
கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வந்த அட்டாளைச்சேனை சம்புக்களப்பு வடிச்சல் திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதனால், இந்தப் பிரதேசத்திலுள்ள பல ஏக்கர் விவசாயக் காணிகள் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ள இயலாத நிலையில் நீரில் மூழ்கியுள்ளன.
சுமார் 945 ஏக்கர் காணிகள் சிறுபோக நெற் செய்கைக்குத் தயார்படுத்தப்பட்டு வந்த நிலையில் அவை தற்போது நீரில் மூழ்கி முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு பொருளாதார இழப்பும் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
அட்டாளைச்சேனை பிரதேச விவசாயிகளின் நன்மை கருதி கிழக்குமாகாண வீதி அபிவிருத்தி அமைச்சினால் மேற்படி சம்புக்களப்பு வடிச்சல் அபிவிருத்தி வேலைத் திட்டம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. அதன் மூலம் இந்தப் பிரதேசத்திலுள்ள சுமார் 6 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் விவசாய நடவடிக்கைக்குப் பயன்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்பட்டது.
ஆனால், முறையான சாத்தியவள அறிக்கைகள் பெறப்படாத நிலையில் முன்னெடுக்கப்பட்டு வந்த இந்த வேலைத் திட்டம் தற்போது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதனால் வழமையாக செய்கை பண்ணப்பட்டு வந்த 945 ஏக்கர் காணிகளைக்கூட செய்கைபண்ண முடியாத துரதிஷ்ட நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ச)

## பிள்ளையார் சிலை விசமிகளால் தகர்ப்பு



மட்டக்களப்பு,மே 3
வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சம்மாந்துறை பத்திரகாளி அம்பாள் ஆலய முகப்பிலிருந்த பிள்ளையார் சிலை விசமிகளால் தகர்க்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.
சம்பவ இடத்துக்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் ஆலய பரிபாலனசபையினருடன் சென்று பார்வையிட்டதுடன், சம்மாந்துறைப் பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளார். (ச)

## அபிவிருத்தி வேலைகளை ஜூலைக்கு முன் பூரணப்படுத்துக

### பொருளாதார பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் உத்தரவு

மட்டக்களப்பு,மே 3
காத்தான்குடி, கடற்கரை வீதி அபிவிருத்தி வேலைகள் ஜூலை மாதத்துக்கு முன் பூரணப்படுத்தப்பட வேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் உத்தரவிட்டுள்ளார்.
எதிர்வரும் ஜூலை மாதத்துக்கு முன் இந்த வீதியின் அபிவிருத்தி வேலைகள் முடிவடையாவிட்டால் ஒப்பந்தக்காரர்களுக்கான கொடுப்பணவுகள் இடைநிறுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.அதனால் உடனடியாக இந்த வீதியின் அபிவிருத்தி வேலைகளை துரிதப்படுத்துமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தில் அமைதி திரும்பும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**இடபம்:** எளிதாக முடிய வேண்டிய விடயங்கள் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவு தான் காரணம் என்பதை உணர்வீர்கள். வியாபாரத்தில் கணிசமாக லாபம் வரும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**மிதுனம்:** புதியவர்கள் அறிமுகமாவார்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். எதிலும் உணர்ச்சிவசப்படாமல் செயற்படுங்கள்..

**கடகம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள்.

**சிங்கம்:** அயல் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வேற்றுமதத்தவர் அறிமுகமாவார். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும், எதிர்பாராத ஒரு வேலை முடியும். புதிய வேலை அமையும். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

### நாளை

சித்திரை-21 சனிக்கிழமை 04.05.2013
திதி: நவமி காலை 06.45 வரை
நட்சத்திரம்: சதயம் பி.இ. 04.21 வரை
சுபநேரம்: 02.56- 04.26 வரை
இராகுகாலம்: 08.56- 10.2 6 வரை

**துலாம்:** துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். கோட்டை இடத்தில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**தனுசு:** முக்கிய கோப்புகளைக் கையாளும் போது அலட்சியமாக இருக்க வேண்டாம். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. தடைப்பட்ட வேலைகள் விரைவாக முடியும்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் பொறுமையுடன் செயற்படுங்கள்.

**கும்பம்:** எதிலும் வெற்றி பெறுவீர்கள். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். மனதுக்கு இதமான செய்தி வரும். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும்.

**மீனம்:** உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 7 | | 9 | 5 | 8 | | |
| | | | 8 | | | | | |
| 1 | | | | 4 | 2 | | | 9 |
| | 4 | 8 | | | 3 | | 2 | 6 |
| | | 3 | 2 | 1 | 8 | 5 | | |
| 2 | 9 | | 6 | | | 7 | 3 | |
| 6 | | | 1 | 2 | | | | 3 |
| | | | | | 6 | | | |
| | | 4 | 5 | 3 | | 6 | 1 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 5 | 1 | 2 | 8 | 4 | 6 | 7 |
| 6 | 1 | 7 | 4 | 3 | 9 | 5 | 2 | 8 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 9 | 1 | 3 |
| 1 | 3 | 4 | 9 | 8 | 7 | 2 | 5 | 6 |
| 7 | 5 | 9 | 2 | 1 | 6 | 8 | 3 | 4 |
| 8 | 6 | 2 | 5 | 4 | 3 | 1 | 7 | 9 |
| 2 | 4 | 3 | 6 | 9 | 1 | 7 | 8 | 5 |
| 9 | 7 | 6 | 8 | 5 | 2 | 3 | 4 | 1 |
| 5 | 8 | 1 | 3 | 7 | 4 | 6 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 – 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 – 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் 9 சிறு பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 – 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## கண்டெடுக்கப்பட்ட ஆவணங்களை பெற்றுக்கொள்க

தென்மராட்சி, மே 3

கொடிகாமம், மந்துவில் வடக்கைச் சேர்ந்த ஜே.காயத்திரி என்பவரது வாகன ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவரைப் பெற்றுக் கொள்ளுமாறு பணிப்பாளர் கூறியுள்ளார். (ம-9)

## சாவகச்சேரி சோதனையில் 10 வர்த்தகர்கள் மாட்டினர்

### நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடவில்லை எனக் குற்றச்சாட்டு

தென்மராட்சி, மே 3

அளவை நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடாத சாவகச்சேரி பிரதேச வர்த்தகர்கள் யாழ்.மாவட்ட அளவைகள், நிறுவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் வசமாக மாட்டிக்கொண்டனர். வர்த்தகர்கள் பத்துப் பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய இடங்களில் உள்ள வர்த்தக, வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு திணைக்களத்தினால் முத்திரையிடப்பட்டன.

அகப்பட்ட பத்து வர்த்தகர்களையும் மே 29 ஆம் திகதி நீதிமன்றுக்கு வருமாறு அழைப்பாணை அனுப்ப பதிவாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ம-9)

## சிறை வாகனங்களில் சிறுவரை இனி ஏற்றிச் செல்ல வேண்டாம்

### உயர் நீதிமன்றம் அறிவுறுத்து

கொழும்பு,மே 3

சிறுவர்களை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லும்போது சிறைச்சாலைகளுக்குரிய வாகனங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

நீதிமன்றங்களால் நன்னடத்தைப் பராமரிப்பு தொடர்பாக ஒப்படைக்கப்படும் சிறார்களை சிறுவர் நன்னடத்தை இல்லங்களுக்குக் கூட்டிச் செல்லும்போதும், மீள நீதிமன்றங்களுக்குக் கூட்டிவரும் போதும் சிறைச்சாலை வாகனங்களைப் பயன்படுத்திக் கொள்ளாதிருக்குமாறும், வேறு போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் உயர்நீதிமன்றம் சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

தற்போது கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்குரிய பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பிலேயே இந்தச் சிறுவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இளம் வயதிலிருந்து 18 வயது வரையிலான 40 பிள்ளைகள் வரையில் தினமும் சிறைச்சாலை வாகனங்களிலேயே ஏனைய கைதிகளுடன் சேர்த்துக் கூட்டிச் செல்லப்படுவதாகத் தகவல்கள் வெளிவந்ததன் பின்னணியில் நீதிமன்றத்தால் இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

> நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகத் தீர்மானிக்கப்பட்ட மற்றும் விளக்கமறியல் கைதிகளுடனேயே இந்தச் சிறார்களும் சிறைச்சாலை வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றனர்.

நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகத் தீர்மானிக்கப்பட்ட மற்றும் விளக்கமறியல் கைதிகளுடனேயே இந்தச் சிறார்களும் சிறைச்சாலை வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றனர். இதனால் அவர்களின் மனநிலை பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

இத்தகைய சிறுவர்களைத் தனியார் வாகனத்தில் கொண்டு செல்வதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் தயாராக உள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம தெரிவித்துள்ளார். இதற்குத் தேவையான வாகனத்தை வழங்குவதற்கான வாய்ப்பைக் கொடை வள்ளல்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்குவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-22)

## மின்கட்டண அதிகரிப்பை எதிர்த்து அடையாள வேலை நிறுத்தம்

கொழும்பு,மே 3

மின் கட்டணங்களின் அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தமொன்று இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மின் கட்டணங்களில் அதிகரிப்புச் செய்தமையை எதிர்வரும் மே 20 ஆம் திகதிக்கு முன்னதாக நீக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. தொழிற் சங்கங்களை ஒருங்கிணைக்கும் ஒருங்கிணைப்புக் கமிட்டி. அரசு அவ்வாறு செயற்படத் தவறும் பட்சத்தில் எதிர்வரும் மே 21 ஆம் திகதியன்று அரச, தனியார் துறை மற்றும் தோட்டங்கள் என்ற அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக நாடளாவிய ரீதியில் பெரியளவிலான ஒருநாள் அடையாள வேலை நிறுத்தமொன்றை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும் அந்தக் கமிட்டி அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைக்கு நாட்டின் 600க்கு அதிகமான பிரபல தொழிற்சங்கங்களின் சம்மேளனங்கள் ஒத்துழைப்பு வழங்கவுள்ளன.

தொழிற்சங்கங்களை ஒருங்கிணைக்கும் இந்த ஒருங்கிணைப்புக் குழுவினால் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையைத் தெரிவிப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஊடகச் சந்திப்பானது மின் கட்டண உயர்வுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக மெழுகுதிரிகளின் வெளிச்சத்திலேயே இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

இது தொடர்பான கடிதமொன்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக உள்ளூர் நிறுவன ஊழியர்கள் சங்கங்களின் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியச் சம்பளச் சட்டமூலத்தை தோற்கடிப்பதற்காக உழைக்கும் மக்கள் நடத்திய போராட்டத்தின் போது மஹிந்த அரசு தோல்வி கண்டுள்ளதாகவும், இந்தச் உழைக்கும் மக்களின் முன்னால் ஜனாதிபதி தோல்வியடையக்கூடிய இரண்டாவது சந்தர்ப்பம் எதிர்வரும் 21 ஆம் திகதியாகவே இருக்கக் கூடுமெனவும் இங்கு கருத்து வழங்கியிருந்த தேசிய தொழிற்சங்க மையத்தின் தலைவர் கே.டி.லால்காந்த தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த 2005 ஆம் [illegible] செலவினம் 25, 344 ரூபாவில் இருந்து 47, 824 ரூபாவாக அதிகரித்துச் சென்றுள்ளதாகவும், இதன் காரணமாக மாதாந்தச் சம்பளத்தில் வாழ்க்கையைக் கொண்டு செல்ல இயலாத சிரமமான நிலைப்பாடொன்று தலை தூக்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொழிலாளிக்கு இசைவான மக்கள் தலைவரொருவர் எனின், உயர்த்தியுள்ள மின் கட்டணத்தை நீக்கி விடுவதற்கான அறிவித்தலை இந்த மே தினத்தில் தெரிவிக்குமாறும் லால்காந்த தெரிவித்திருந்தார்.

சுதந்திர வர்த்தக வலய பொது ஊழியர்கள் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கச் சம்மேளனம், தேசிய ஊழியர்கள் சங்கம், தபால் தொலைத்தொடர்பு சேவை அதிகாரிகள் சங்கம் என்பவற்றின் தலைவர்கள் மற்றும் செயலாளர்களும் இந்த ஊடகச் சந்திப்பின் போது உரையாற்றினர். (க-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொறொன்ரோவில் ஆர்ப்பாட்டம்

## வலி. வடக்கில் இடம்பெறும் நில அபகரிப்புக்கு எதிராக




ரொறொன்ரோ, மே 3

வலிகாமம் வடக்கில் இடம் பெற்றுவரும் நில அபகரிப்புக்கு எதிரான தாயகத் தமிழர்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்க்குமுகமாக ரொறொன்ரோவில் அமைந்துள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தின் முன்பாக தமிழர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'எங்கள் நிலம் எமக்கு வேண்டும்' என்பதன் அடிப்படையில் தமிழர் பிரதேசங்களில் இலங்கை அரசால் தான்தோன்றித்தனமாக நடைமுறைப்படுத்தப்படும் நில அபகரிப்புக்கு எதிராக மேற்படி ஆர்ப்பாட்டம் கொட்டும் மழையிலும் எழுச்சியாக இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தின்போது நில அபகரிப்பின் கொடூரத்தில் சிக்கியுள்ள வலிகாமம் வடக்கு (தையிட்டியைச் சேர்ந்த) ந.முரளிதரன் தெரிவித்ததாவது:-

இத்தகைய போராட்டங்களின் தேவையை வலியுறுத்திக் கூறி புலத்து மக்களின் எழுச்சி மென்மேலும் எம் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக மேலோங்க வேண்டும்.

இளையோரால் எழுச்சிகரமாக முன்னெடுக்கப்படும் இதுபோன்ற போராட்டங்களில் இனிவரும் காலங்களில் புலத்து மக்கள் பெருந்திரளாக அணி திரண்டு தோள் கொடுக்க வேண்டும்- என்றார்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் தெரிவிக்கையில்,

எங்கள் நிலம் சிறிது சிறிதாகப் பேரினவாதத்துக்கு இரையாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், உரிமைகள் மறுக்கப்பட்டு பேரினவாத ஆக்கிரமிப்பின் மத்தியில் வாழும் எம் தாயக மக்களே!

அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாமல் போராடுகையில் பேச்சுரிமை, எழுத்துரிமை போன்ற ஜனநாயக உரிமைகள் மதிக்கப்படுகின்ற மேற்கு நாடுகளில் வாழும் தமிழர்கள் எம் மக்களுக்காக உரத்த குரலை எழுப்புதல் சாத்தியமானது.

வரலாறு புலத்து தமிழர்களுக்கு வழங்கியுள்ள கடமையாகவும் இதனைக் கூறுதல் பொருத்தமாக அமையும். எனவே இவ்வாறான வேலைத் திட்டங்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாகியுள்ள ஈழத்தமிழ் சமூகத்தில் இருந்து வந்தவர்களாகிய நாம் தட்டிக் கழித்து விட முடியாது.

இவ்வளவு காலமாக எமது உரிமைகளுக்கான போராட்டத்தில் உயிரிழந்த மக்களையும், போராளிகளையும் ஒரு கணம் மனதில் நிறுத்துவோம்.

இன்று இலங்கை அரசு நிகழ்த்தி வரும் தாங்கொணா அடக்குமுறை, அனைத்து ஜனநாயக வழி முறைகளுக் கூடாகவும் மக்கள் போராட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது.

எனவே அனைவரும் ஒன்றிணைந்து போராடுவோம்- என்றனர். (வ)

> இன்று இலங்கை அரசுநிகழ்த்தி வரும் தாங்கொணா அடக்குமுறை, அனைத்து ஜனநாயக வழி முறைகளுக் கூடாகவும் தமிழர்கள் போராட வேண்டிய அவசியம் வலியுறுத்தினர் என்றனர் ஆர்ப்பாட்டக்காரர்கள்.

## சிங்கள மயமாகும் தமிழர் நிலம்

### சீமான் சீற்றம்

இலங்கையில் தமிழர்களின் முழு நிலப்பரப்பும் சிங்கள மயமாக்கப்படுவதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

தூத்துக்குடியில் நாம் தமிழர் கட்சியின் சார்பில் நடைபெற்ற தமிழர் எழுச்சி பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந்த நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், முன்னதாகச் செய்தியாளர்களை சந்தித்தபோது இவ்வாறு தெரிவித்தார்.

ஈழத் தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு கிடைக்க ஈழத்தமிழரிடையே பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் நிலப்பரப்பு முழுவதும் சிங்களமயமாக்கப்படுகிறது. தமிழர்களுக்கு கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்க இந்தியா அனுப்பிய நிதி உதவியைக் கொண்டு சிங்களவர்களுக்கு இலங்கை அரசு கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்கிறது.

மேலும், ஈழத்தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு கிடைக்க பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்-என்றார். (வ)

## போலிக்கடவுச் சீட்டு மூலம் அகதிகளை ஜேர்மனிக்கு அனுப்பிய நபர்கள் கைது

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை போலி கடவுச்சீட்டுடன் ஜேர்மனிக்கு அனுப்பி வந்த செயற்பாடு ஒன்று முடக்கப்பட்டுள்ளதாக பீ.டீ.ஐ. இணையத்தளம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இவ்வாறான இரண்டு பேர் நேற்று முன்தினம் ராமநாதபுரத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் போலியான இந்திய கடவுச் சீட்டுகளைத் தயாரித்து, தமிழகத்தில் உள்ள அகதிகளை ஜேர்மனிக்கு அனுப்பி வந்துள்ளமை தெரியவந்ததைத் தொடர்ந்து கைதாகியுள்ளனர்.

தமிழக விசாரணை பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 11 லட்சம் ரூபா பணமும், 60 இற்கும் அதிகமான போலி கடவுச் சீட்டுகளும் மீட்கப்பட்டுள்ளன. (வ)

## ஈழ அகதிகளுக்காக கண்டன ஆர்ப்பாட்டம்




செங்கல்பட்டு அகதிமுகாமில் ஈழ அகதி சசிகரனை சித்திரவதை செய்து தற்கொலைக்குத் தூண்டிய கியூ பிரிவு பொலிஸாரைக் கண்டித்து மக்கள் கலை இலக்கியக் கழகம் சார்பில் சென்னை பனகல் மாளிகை அருகில் நேற்றுமுன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## ஏமாற்றப்படும் ஈழத்தமிழர்கள்

### உள்துறை இணையமைச்சர் கருத்து



டில்லி, மே 3

ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைப்பதாகக்கூறி, தமிழகத்திலிருக்கும் இலங்கை தமிழர்கள் ஏமாற்றப்படுவதாக, லோக்சபாவில் மத்திய உள்துறை இணைய மைச்சர் ஆர்.பி.என். சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, லோக்சபாவில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் 1100 பேர் இந்திய கடலோர காவற் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை, 57 இந்தியர்கள் மற்றும் 1,163 இலங்கைத் தமிழர்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள் ளனர். அவர்கள் மீது 41 வழக்குகள் பதிவு செய் யப்பட்டுள்ளன.

இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் இருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க பொலிஸ் ஆணையாளர் மற்றும் அதிகாரிகளை அறிவுறுத்துமாறு தமிழக அரசு கேட்டுகொள்ளப்பட்டுள்ளது- என்றார். (வ)

# தமிழக எம்.பிகள் கூண்டோடு பதவி விலகட்டும்

## இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடப்பதை எதிர்த்து என்கிறார் பா.ஜ.க.தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன்

சென்னை, மே.3

இலங்கையில் பொது நலவாய மாநாடு நடைபெறுவதைத் தடுக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழகம் மற்றும் புதுவையைச் சேர்ந்த 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூண்டோடு ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் மாநில தலைவர் பொன். ராதா கிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் மத்திய அரசு புறக்கணித்து வருவது வருத்தம் அளிக்கிறது.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்குத் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. எனினும், இலங்கையில் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக செய்திகள் வருகின்றன.

அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியாபோன்ற நாடுகள் இலங்கையில் மாநாடு நடத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

எனவே தமிழகம், புதுச்சேரியைச் சேர்ந்த 40 மக்களவை உறுப்பினர்களும் பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடைபெறாமல் தடுக்குமாறு வலியுறுத்த வேண்டும்.

இதனை பிரதமர் ஏற்கவில்லை என்றால் 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ராஜினாமாச் செய்ய வேண்டும்-என்றுள்ளது. (வ)

## இலங்கை புகலிட கோரிக்கையாளர் கிறிஸ்மஸ்தீவில் சாவு

இலங்கை புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் ஆஸ்திரேலியாவின் கிறிஸ் மஸ் தீவில் உயிரிழந்ததாக அந்த நாட்டு குடிவரவுத் திணைக்களம் அறிவித்துள் ளது.

நோய் காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில் பாஸ் பேட் ஹில் செயலாக்க பகுதியில் இருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை குறித்த அகதி கிறிஸ்மஸ் தீவுக்கு மாற்றப்பட்டிருந்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோ.தொழிலாளர் சம்பளப் பிரச்சினைக்கு தொடர்ந்தும் விடாது போராடுவோம்

## மே தின நிகழ்வில் மனோ அறிவிப்பு

கொழும்பு,மே 3

''மலையக மக்களின் பிரச்சினைகள் இன்று தேசிய பிரச்சினையாக மாறிவிட்டன. மலையக மக்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை போராடுவோம்'' என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறினார்.

குணசிங்கபுர பிரைஸ் மைதானத்தில் இடம்பெற்ற கூட்டு மே தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மனோ கணேசன் ''மலையகத்தில் ஆறுமுகன் தொண்டமான் மக்களை ஏமாற்றி வருகிறார். மக்கள் இனியும் ஏமாற நாம் விடமாட்டோம்'' என்றார்.



நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறுகையில்;

''இன்று வலி.வடக்கு மக்கள் வேதனையுடன் காணப்படுகின்றனர். அவர்களின் பெருமளவான நிலங்கள் சுவீகரிக்கப்படவுள்ளன. 6, 400 ஏக்கர் காணி சுவீகரிப்பினால் 35,000 க்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இந்த அரசால் மலையக மக்களுக்கும் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அவற்றைத் தீர்ப்பதற்கு அனைவரும் கைகோர்க்க வேண்டும்'' என்றார். (உ-ரி)

# பிரேமதாஸ அரசின் காபன் பிரதியே ராஜபக்ஷ அரசு

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு,மே3

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு, பிரேமதாஸ அரசின் காபன் பிரதி என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அன்று 'கம் உதாவ' இன்று தேசத்தின் மகுடம், அன்று 'ஜனசவிய' இன்று சமுர்த்தி, அன்று 'மகசவிய' இன்று 'மகநெகும' என்று அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் நினைவுதின நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மற்றையவர்களுக்கு உபதேசம் செய்வதற்கு முன் நாம் ஒழுக்கமானவர்களாக இருக்க வேண்டும். நாட்டின் மீது இன்று மனித உரிமை குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அன்று பயணப் பொதியுடன் ஜெனிவா சென்றவர்கள்தான் இன்று இந்த ஆட்சியில் இருக்கின்றனர் என்று அவர் கூறினார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை அர்த்தமற்ற ஒன்றாக மாறிவிட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)


**UNIVERSITY OF JAFFNA, SRILANKA.**

**FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE**

**WALK- IN- INTERVIEW**

Walk in interview for appointment to the **Post of Temporary Lecturer in Commerce** will be held at 10.30 a.m on 07.05.2013 at the Board Room of this University.

Candidates who have minimum qualification of B.Com special degree with class are invited for a walk in Interview **with self prepared applications** for the above post.

| Post | Salary scale |
|---|---|
| Temporary Lecturer | Rs.26,020/= P.M, (fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Interested candidates with the required Qualifications are expected to be present for the interview at time mentioned above with relevant certificates, NIC and self prepared application.

(c/6809)(6.7.11) REGISTRAR, UNIVERSITY OF JAFFNA.



உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111



**தவறிவிட்டது**

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த சிங்கராசா வித்தகன் என்பவரது தேசிய அடையாள அட்டை இலக்கம் (943281009V), மீசாலைச் சந்திக்கும் சங்கத்தானைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொ.பே. 077 805 4854

(35009) (46.6.7)



**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும்**

கடந்த நந்தன வருடம் பங்குனி மாதம் 23 ஆம் நாள் வெள்ளிக் கிழமை (05.04.2013) அபரபக்க தசமி திதியில் இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவர்.

அமரர் **சடையர் மருதப்பு**

(சின்னத்துரை ஆசாரியார்)



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை மறுதினம் (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 5.00 மணியளவில் நெடுந்தீவு மேற்கு, பெரியதுறை தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்று முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

2 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு. குடும்பத்தினர்.

(836972)(6.7.11)



# மரண அறிவித்தல்

## சதாசிவம் இராசதுரை



உடுவில் தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கு, தம்புவத்தையை வசிப்பிடமாகவும் தற்பொழுது உடுவில் தெற்கில் வசித்தவருமாகிய சதாசிவம் இராசதுரை 30.04.2013 செவ்வாய்க்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆச்சிமுத்துவின் அன்புக் கணவரும், தயாநிதி (சுவிஸ்), கருணாநிதி (லண்டன்), காலஞ்சென்ற பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, நல்லையா, அன்னம்மா, சின்னராசா, தம்பித்துரை (ஓய்வு நிலை உத்தியோகத்தர், மக்கள் வங்கி ), பவளராணி, பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெனிதா, விஜிதா, மாயூரன், சகானா, ஜஸ்வினா, சஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஜீவன், பிரதீபன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:


**பிள்ளைகள், மருமக்கள்.**

உடுவில் தெற்கு, மானிப்பாய். (36971) (15.6.7)

மகன்: (லண்டன் 0044 208 5072 125).

மகள்: (சுவிஸ் 0041 613 118 251).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்புளநீர் அகமெல்லாம் பொங்கப் பொங்க
அறமெழுந்துபெருஞ்சேவை ஆற்ற ஆற்றத்
தொண்டுசெய்யப் பல அன்பர் தோன்றத்தோன்ற
தோற்று சுவை சோறாக உண்ண உண்ண
கண்டு வரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப
கடி அமுத சுரபியினாள் ஊட்ட ஊட்ட
கொண்டு பசி தீர்த்தவர்கள் கோடி கோடி
கோடாறு காலமெல்லாம் வாழி வாழி

# நயினாதீவு - ஸ்ரீ நாகபூஷணி

## அமுதசுரபி அன்னதான சபை

(ஆரம்பம் 1960)

**"விஜய வருட அன்னதானப் பெருவிழா"** நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின்திருவருளினால் 1960ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுத சுரபி அன்னதான சபை அமுதசுரபி என்னும் பெயர் தாங்கிய மணி மண்டபத்தின் கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக் கணக்கான அம்பிகை அடியார்களின் பசிப்பிணி தீர்க்கும் தொண்டினைச் செவ்வனே செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 54 ஆவது ஆண்டில் பிரவேசிப்பதில் மன மகிழ் வெய்துகிறோம்.

அம்பிகையின்திருப்பதியிலே நடைபெறும் இத் தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தரும சீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பண்டம் உதவிகளை வழங்கி வருவதுடன் ஆக்கமும் ஊக்கமுந் தந்து அன்னதான சபையின் அரும் பணியைப் பாராட்டியும் வருகின்றனர். 2012 ஆம் ஆண்டு யாழ். மாநகர சபையினர் அம்பிகையின் திருப் பணியைப் போற்றி **"யாழ்விருது"** வழங்கி பாராட்டினார்கள்.

அம்பிகையின் திருவருளினால் பணிக்கப்பெற்ற இப் பெரும் பணியைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைத்துவரும், சபையின் நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும் அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணிசெய்யும் அடியார்களுக்கும் தத்தமது பணிகளைத் திறமையுடன் செய்த, செய்கின்ற சேவையாளர்கள் அனைவருக்கும் அன்னதானத் தொண்டினை நேரடியாகக் கண்டும் கேட்டும் ஆசியுரை வழங்கிவரும் அன்பர்களுக்கும் அனைத்தினும் மேலாக ஆண்டுதோறும் அன்னதானப் பணி சிறக்க பணம், புண்டங்கள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தரும சீலர்கள் அனைவருக்கும் அன்னை ஸ்ரீ நாக பூஷணி அம்பிகையின் திருவருள்கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையின் மனமுவந்த பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அடியார்களே!**

விஜய வருடம் வைகாசித் திங்கள் 26 ஆம் நாள் (09.06.2013) ஞாயிற்றுக்கிழமை அம்பிகையின் உயர் திருவிழா கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி ஆனித்திங்கள் 04 ஆம் நாள் (18.06.2013) செவ்வாய்க்கிழமை திருமஞ்சத்திருவிழாவும், ஆனித்திங்கள் 07 ஆம் நாள் (21.06.2013) வெள்ளிக்கிழமை சப்பரத்திருவிழாவும், ஆனித் திங்கள் 08ஆம் நாள் (22.06.2013) சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், ஆனித்திங்கள் 09 நாள் (23.06.2013) ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் ஆனித்திங்கள் 10 ஆம் நாள் (24.06.2013) திங்கட் கிழமை தெப்பத் திருவிழாவுடன் இனிதே நிறைவு பெறும். இவ்வாண்டு அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்கள் அனைவருக்கும் சிறந்த முறையில் பதினாறு நாள்கள் இரவு, பகல் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானித்துள்ளது. எனவே தருமசீலர்களாகிய தங்களிடம் எம்மால் நியமிக்கப்பட்ட உத்தமத் தொண்டர்கள் வருவார்கள். அவர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம், பண்டங்களை வழங்கி சபையின் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

வங்கி மூலம் பணம் அனுப்ப விரும்பும் அடியார்கள் Commercial Bank, Peoples Park Petha கிளை Amuthasurabi கண.இல. 1247985001 என்ற கணக்கிற்கு அல்லது B.O.C ஊர்காவற்றுறைக் கிளை வேலணை க.கு.இல. 7687836 என்ற கணக்கிற்கோ அனுப்பிவைக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம். அத்துடன் யாழ்.நகரில் திரு.சி.சிவகுமார் வெற்றிலை மார்க்கட் என்ற முகவரியிலும், தேனு களஞ்சியம், நவீன சந்தை, திருநெல்வேலி என்ற முகவரியிலும் பணம், பண்டங்களை வழங்கி எமது பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறியத் தருகின்றோம்.

அம்பிகையின் திருப்பதியிலே அடியார்கள் வசதியாகத் தங்கி நின்று தரிசிப்பதற்காக நவீன வசதிகளுடன் அமைந்த அமுதசுரபி அன்னபூரணி இறை பயணிகள் இல்லமும், மாற்று வலுவுடையோரை ஆற்றுப் படுத்தி அமுதளிக்கும் சிறப்புத் தொண்டர்களைக் கொண்ட அமுத சுரபி விசாலாட்சி மண்டபமும் அமைக்கப்பெற்றுள்ள தென்பதையும் மன மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.

வணக்கம்.

"மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்"

அமுதசுரபி மண்டபம், நயினாதீவு - 02,
தொ.பே. 021 321 3575
பதிவு இல. S.236.

அன்னையின் பணியில்
மதியாபரணம் அம்பிகைபாகன்,
செயலாளர்.

---

# கேள்வி கோரல்கள்

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு**
**துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**யாழ்ப்பாணம்.**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வீதிகள்,**
**புனர் நிர்மாணம் செய்வதற்கான**
**கேள்வி கோரல் அறிவித்தல்**

**பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம்**
**உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்**

1) பின்வரும் புனர் நிர்மாண வேலைகளுக்கான மூடிய கேள்வி கோரல்களை பிரதம பொறியியலாளர், கேள்விச் சபையின் சார்பாக **பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்** பெற்றுக் கொள்வார்.

| வேலை விவரம் | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தகாரர் தரம் ICTAD |
|---|---|---|
| 1. மீள் புனரமைப்பு- தம்பாலை- வளலாய் வீதி, 1.5- 1.7 கி.மீ | 50,000.00 | C 8 |
| 2. மீள் புனரமைப்பு- தம்பாலை- வளலாய் வீதி, 1.7- 1.8 கி.மீ | 25,000.00 | C 8 |
| 3. மீள் புனரமைப்பு- தம்பாலை- வளலாய் வீதி, 1.8- 1.9 கி.மீ | 25,000.00 | C 8 |
| 4. மீள் புனரமைப்பு- தம்பாலை- வளலாய் வீதி, 1.9- 2.10 கி.மீ | 50,000.00 | C 8 |
| 5. மீள் கல்லிட்டு தாரிடல்- குலானை வீதி, "A" (300 M) | 30,000.00 | C 8 |
| 6. மீள் கல்லிட்டு தாரிடல்- குலானை வீதி, "B" (262 M) | 25,000.00 | C 8 |
| 7. மீள் கல்லிட்டு தாரிடல்- குலானை வீதி, "C" (265 M) | 25,000.00 | C 8 |
| 8. மீள் கல்லிட்டு தாரிடல்- குலானை வீதி, "D" (291 M) | 30,000.00 | C 8 |
| 9. மீள் கல்லிட்டு தாரிடல்- குலானை வீதி, "E" (223 M) | 20,000.00 | C 8 |
| 10. மீள் கல்லிட்டு தாரிடல்- குலானை வீதி, "F" (300 M) | 30,000.00 | C 8 |
| 11. மீள் கல்லிட்டு தாரிடல்- குலானை வீதி, "G1 & G2" (85 & 30 M) | 12,000.00 | C 8 |
| 12. மீள் புனரமைப்பு, மீள் கல்லிட்டு தாரிடல் - கந்தசாமி கோயில்- நாச்சிமார் கோயில் வீதி, 1.5- 4.3 கி.மீ | 30,000.00 | C 8 |
| 13. மீள் செப்பனிட்டு தாரிட்டு சிறு கற்படை இடல் -சாவகச்சேரி- புலோலி வீதி, 3.0- 5.0 கி.மீ | 32,450.00 | C 8 |
| 14. மீள் செப்பனிட்டு தாரிட்டு சிறு கற்படை இடல் -சாவகச்சேரி- புலோலி வீதி, 5.0- 7.0 கி.மீ | 32,450.00 | C 8 |
| 15. மீள் செப்பனிட்டு தாரிட்டு சிறு கற்படை இடல் -சாவகச்சேரி- புலோலி வீதி, 10.0-12.33 கி.மீ | 34,992.00 | C 8 |
| 16. மீள் செப்பனிட்டு தாரிட்டு சிறு கற்படை இடல் -சாவகச்சேரி- புலோலி வீதி, 12.33- 14.66 கி.மீ | 35,002.00 | C 8 |
| 17. மீள் செப்பனிட்டு தாரிட்டு சிறு கற்படை இடல் -சாவகச்சேரி- புலோலி வீதி, 14.66- 16.985 கி.மீ | 35,013.00 | C 8 |
| 18. மீள் செப்பனிட்டு தாரிட்டு சிறு கற்படை இடல் -சாவகச்சேரி- புலோலி வீதி, 16.985- 19.31 கி.மீ | 34,996.00 | C 8 |
| 19. மீள் செப்பனிட்டு தாரிட்டு சிறு கற்படை இடல் -தொண்டமானாறு- வல்லை- துன்னாலை வீதி, 3.0- 4.0 கி.மீ | 16,235.00 | C 8 |
| 20. மீள் செப்பனிட்டு தாரிட்டு சிறு கற்படை இடல் - யாழ்ப்பாணம்- பொன்னாலை- பருத்தித்துறை வீதி, 50.50- 52.0 கி.மீ | 33,554.00 | C 8 |
| 21. மீள் செப்பனிட்டு தாரிட்டு சிறு கற்படை இடல் - யாழ்ப்பாணம்- பொன்னாலை- பருத்தித்துறை வீதி, 52.0 -53.50 கி.மீ | 33,554.00 | C 8 |
| 22. மீள் செப்பனிட்டு தாரிட்டு சிறு கற்படை இடல் - யாழ்ப்பாணம்- பொன்னாலை- பருத்தித்துறை வீதி, 53.50 - 55.38 கி.மீ | 40,890.00 | C 8 |
| 23. மீள் செப்பனிட்டு தாரிட்டு சிறு கற்படை இடல் - சாவகச்சேரி- கச்சாய் வீதி- 3.0- 5.80 கி.மீ | 53,858.00 | C 8 |
| 24. மீள் செப்பனிட்டு தாரிட்டு சிறு கற்படை இடல் - கந்தசாமி கோவில்- நாச்சிமார் கோவில் வீதி, 0.0- 1.5 கி.மீ | 40,000.00 | C 8 |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 22.05.2013 அன்று முற்பகல் 10.00 மணியுடன் முடிவடையும். கேள்விப்பத்திரங்கள் 22.05.2013 அன்று காலை 10.30 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை **பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம்,** காரியாலயத்தில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
கேள்விப்பத்திர ஆவணங்கள் 06.05.2013 **தொடக்கம் 20.05.2013 பிற்பகல் 2 மணி** வரை மீள் அளிக்க முடியாத வைப்புத்தொகையான 750/= + பெறுமதி சேர் வரி 12% செலுத்திப் பெற வேண்டும்.

2) தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ரட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் மேற் குறிப்பிட்ட தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03. கேள்வி கோரல் ஆவணங்கள் **பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்** அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.

04. முன் கேள்வி கோரல் கூட்டம் **16.05.2013 அன்று காலை 10 மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாண** அலுவலகத்தில் நடைபெறும்.

05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 60 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாக இருக்கும். (21.07.2013)

06. மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப்பாதுகாப்பு பணத்தொகை அவற்றிற்குரிய பாதுகாப்பு பத்திரம் ஒவ்வொரு கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதுகாப்பு பத்திரம் இல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் **பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண** காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு (22.05.2013 மு.ப 10.00) முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக **பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாண** அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.

கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

09. மேலதிக விவரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

**அலுவலகம்**

**பிரதம பொறியியலாளர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி இலக்கம்.**
**021- 222- 2968.**

**மாகாணப்பணிப்பாளர் (வ)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பிரதம பொறியியலாளர்**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/8814)(10.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைபேசி திருத்தும் பயிற்சிநெறி

கரவெட்டி,மே 3
கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் கையடக்கத் தொலைபேசி திருத்தும் பயிற்சிநெறி நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் ஆரம்பமாகும் என கரவெட்டிப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## பருத்தித்துறை கோட்ட ஆங்கில எழுத்துப் போட்டிகள் நாளை

வடமராட்சி,மே 3
பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான ஆங்கில எழுத்துப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.
காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை வகுப்பு ரீதியாக இந்தப் போட்டிகள் இடம்பெறும். தரம் 3 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களிடையே ஆங்கிலத்தில் பிரதி ஆக்கம், சொல்வதெழுதல், சிருஷ்டி எழுத்து ஆகிய பாடங்களிலேயே இந்தப் போட்டி நடைபெறும் என வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர்.குட்டித்தம்பி தெரிவித்துள்ளார். (ஒ-8)

## நகரின் மூன்று கடைகளில் நள்ளிரவு உடைத்து களவு

### பயப்பீதியில் வர்த்தகர்கள்

யாழ்ப்பாணம், மே3
யாழ்.நகர் பெரிய கடை மின்சார நிலைய வீதியில் மூன்று கடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.
யாழ்.நகரின் மையத்தில் நடந்துள்ள இந்தக் களவு வர்த்தகர்கள் மத்தியில் பெரும் பீதியைக் கிளப்பி உள்ளது.
கடந்த செவ்வாய்க் கிழமை நள்ளிரவு களவு இடம்பெற்றுள்ளதாக கடை உரிமையாளர்கள் புதன்கிழமை பொலிஸில் முறையிட்டுள்ளனர்.
காலையில் கடை திறக்க வந்தபோதே களவு போயுள்ளதைக் கண்டதாக அவர்கள் கூறினர்.
சம்பவ இடத்துக்கு வந்த யாழ்ப்பாணம் பொலிஸாரும், தடவியல் நிபுணர்களும் விசாரணைகளை மேற்கொண்டனர்.
3 வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டன என்றும் ஒரு வர்த்தக நிலையத்தில் மட்டும் 7,000 ரூபா களவாடப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது.
நகர வீதிகளில் பாதுகாப்புத் தரப்பினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிலையிலும் தமது வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டிருப்பது தமக்கு பாதுகாப்புக் குறித்த கவலையை ஏற்படுத்தியுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர். (உ-ரி)

## மெழுகுதிரியுடன் மேதின கூட்டத்துக்கு வந்தார் கிழக்கு மாகாண உறுப்பினர்



அம்பாறை,மே 3
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.இராஜேஸ்வரன் தாம் கலந்து கொண்ட மேதினக் கூட்டத்துக்கு எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தியைக் கையிலேந்தியவாறு வருகை தந்தார்.
அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் மேதினக் கூட்டம் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் கல்முனை வை.எம்.சீ.ஏ.மண்டபத்தில் நடைபெற்றது.
நிகழ்வின் கௌரவ அதிதியான அவர் கையில் எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தியுடன் வருகை தந்தார்.
அப்பொழுது கூட்ட மண்டபமின் விளக்குகள் அணைக்கப்பட்டதுடன், படுமோசமாக உயர்த்தப்பட்டுள்ள மின்கட்டண உயர்வை ஆட்சேபித்தும், கண்டித்தும் தாம் மெழுகுவர்த்தியுடன் வருகை தந்ததாக இராஜேஸ்வரன் தெரிவித்தார்.
அவர் கூட்டத்தில் உரையாற்ற வரும் போதும், பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படும் போதும் குறித்த எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தியை கையில் ஏந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-30)

## முக ஒப்பனை, ஐசிங் கேக் பயிற்சி நெறிகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே3
நல்லூர் பிரதேச சபையால் முக ஒப்பனை மற்றும் ஐசிங் கேக் பயிற்சி நெறிகளில் பயிற்சி பெறுவதற்கென தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கு நாளை சனிக் கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் உப- அலுவலக மண்டபத்தில் பயிற்சிநெறிகள் ஆரம்பமாகின்றன.
தெரிவானவர்களை பயிற்சிகளுக்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-7)

**சுஜித் என்ரபிறைசஸ்**
**டச்சு வீதி, சாவகச்சேரி**

விற்பனைப் பிரதிநிதி தேவை.
மாதாந்தம் ரூபா 35,000/= தொடக்கம்
ரூபா 40,000/= வரை
சம்பாதிக்கலாம்.

தொடர்பு: 021 227 0586
(கி/0275) (45.6)

**Vacancy**

Wanted talented Male / Female personnel over 25 yrs of age to work in a modern multispecialty private hospital as:
* Front office Manager,
* Public Relations Officer,
* Customer Care Officer.

Those interested are requested to send their Bio-Data with photograph to reach the undersigned on or before 11th May 2013

Director
Human resources
Northern Central Hospitals (Pvt) Ltd
342, Palaly Road,
Jaffna.
(கி/8810) (45.6.7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

**கடை வாடகைக்கு**

டிப்போ வீதி, கனகபுரம், கிளிநொச்சியில் 900 சதுர அடி விஸ்தீரணம் உள்ள [illegible] வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 0729188595 (35103) (10,6,7)

**விற்பனைக்கு**

வறுத்த அரிசிமா மொத்தமாகவும், சில்லறையாகவும் மன்னாரில் விற்பனைக்கு உண்டு. மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்

தொடர்பு: 077 830 9650
(36983) (6.7.11)

**கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம்**

தரம் 6-11 வரையான தனி,குழு வகுப்புக்கள் தமிழ், ஆங்கிலமொழி மூலம் அனுபவம் மிக்க ஆசிரியர்களால் தங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.தென்மராட்சிப் பிரதே சத்துக்கு மாத்திரம். மேலதிக விவரங்களைப் பெறுவதற்கு அழையுங்கள்.

தொடர்பு: 071 185 4595
(கி/0272) (45.6)

**கண்ணீர் அஞ்சலி**



எமது கணக்காய்வு நிறுவன உரிமையாளர்
**எம்.இரா ஜநாயகம்**
(பட்டயக்கணக்காளர்)
அவர்களின் துணைவியார்
நரம்பியல் வைத்திய நிபுணர்
**சிவ ரஜினி இராஜநாயகம்**
அவர்களின் அன்புத்தந்தையார்

**செல்வரத்தினம் சிவபாலன்**
(இளைப்பாறிய அதிபர்-உரும்பிராய் இந்துக்கல்லூரி)

அவர்கள் 30.04.2013 அன்று இயற்கையெய்தியமை அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளதுடன், மிகவும் வருந்துகின்றோம். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

140, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

பணியாளர்கள்,
**எம்.இராஜநாயகம் அன் கம்பனி**
**பட்டயக்கணக்காளர்கள்.**
(36976) (10,6,7)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**திருமதி வசந்தாதேவி விமலேஸ்வரன்**
(அதிபர் கிளி/ஸ்கந்தபுரம் இல-01, அ.த.க. பாடசாலை)




தமது அதிபர் சேவையில் 11 வருடங்களைப் பூர்த்தி செய்து 08.08.2012 இல் இருந்து இலங்கை அதிபர்சேவை 2-II இக்கு பதவி உயர்வு பெற்றுள்ள எமது அதிபரைப் பாராட்டி இவர் மேன்மேலும் உயர்வுகளைப் பெற வேண்டும் எனவும், இல்லறத்தில் இன்புற்று விளங்கவும்,தமது சேவையை இப்பாடசாலைக்கு தொடர்ந்து வழங்கவேண்டும் எனவும் உளம்மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
கிளி/ஸ்கந்தபுரம் இல.01,
அ.த.க.பாடசாலை, ஸ்கந்தபுரம்.

**மரண அறிவித்தல்**

**திருமதி நாகநாதி செல்லம்மா**



புங்குடுதீவு, மடத்துவெளி பிள்ளை யார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாக நாதி செல்லம்மா நேற்று (02.05.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - மாரிமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற நாகநாதியின் அன்பு மனைவியும், ராசாத்தி, சீதா, கோணேஸ் (முன்னாள் நேரக்கணிப்பாளர் புங்குடுதீவு - பிரான்ஸ்), வவா, சத்தியா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் செல்வராணி (பிரான்ஸ்), தவசீலன் (அராலி தெற்கு), சிவசுப்பிரமணியம் (திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியும், பிரதீபா, பிரதீபன், பிரதீசன், டினேஷா (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), பிருந்தா (யாழ். இந்து மகளிர் கல்லூரி -10A), விஜயசீலன் (யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி 6E), சாலினி, பிரியா, அபிநயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03.05.2013) வெள்ளிக்கிழமை இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒருமணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

125, ஆடியபாதம் வீதி,
கொக்குவில், திருநெல்வேலி.
(36978) (45.6.7)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயத்தின் கல்விச் சமூக ஒன்று கூடலும் கௌரவிப்பு நிகழ்வும்-2013**

காலம்: 05.05.2013 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: முற்பகல் 10 மணி
இடம்: பாடசாலை பிரதான மண்டபம்

எமது பாடசாலையானது பல இடர்பாடுகளுக்கு மத்தியில் கிளி/ஸ்கந்தபுரம் இல.2 பாடசாலையில் இயங்கியபோது (1996-2000) மகத்தான சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பணியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும், கல்விச் சமூக ஒன்று கூடலும்.

இவ்வுணர்வு பூர்வமான நிகழ்விற்கு கிளி/ கனகபுரம் ம.வியின் அனைத்து பழைய மாணவர்களையும், நலன் விரும்பிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(35104)(6.7.11)

பழைய மாணவர்கள், **கிளி/ கனகபுரம் ம.வி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெய்னா அதிரடி சதம் பஞ்சரானது பஞ்சாப்




ரெய்னாவின் அதிரடிச் சதத்தின் உதவியுடன் பஞ் சாப்பை இலகுவாக வீழ்த் தியது சென்னை சூப்பர் கிங்ஸ் அணி.

ஐ.பி.எல். தொடரின் 45 ஆவது போட்டி நேற்று பிற்பகல் சென்னை சேப்பாக்க மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சென்னை, பஞ்சாப் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

சென்னை சார்பில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக மைக்கல் ஹசியும் ஸஹா வும் களமிறங்கினர்.

சிறப்பாக ஆடிய ஸஹா நான்காவது பந்துப் பரிமாற்றத்தில் 18 ஓட்டங் கஞடன் அவானாவின் பந்தில் மார் ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ஹசியுடன் இணைந்தார் சுரேஷ்ரெய்னா. இரண்டாவது இலக்குக்காக இந்த ஜோடி அரைச்சதம் கடந்த நிலையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த மைக்கல் ஹசி 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.10 போட்டிகளில் ஆடிய ஹசி 485 ஓட்டங் களைப் பெற்று அதி கூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரருக்கான ஒரேஞ் தொப்பியை பெற்றுக் கொண்டார்.

ஹசியை தொடர்ந்து வந்த டோனி 2 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளியேற 13 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 92 ஓட்டங்களுடன் தடுமாறியது சென்னை.

ரெய்னாவுடன் இணைந்தார் மோர்கல். பொறுமையாகவும், நிதானமாகவும் ஆடிக் கொண்டிருந்த ரெய்னா புயலானார். பஞ்சாப்பின் பந்துகள் ரெய்னாவின் துடுப்பில் பட்டு எல்லைக் கோடுகளை நோக்கி நகர்ந்தன. 32 பந்துகளில் அரைச் சதம் கடந்த ரெய்னா 6 சிக்ஸர்கள், 7 நான்கு ஓட்டங் கள் அடங்கலாக 53 பந்துகளில் சதம் கடந்தார். மோர்கல் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஜடேஜா 5 ரெய்னா 100 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர். இறுதியில் 20 பந்துப் பரிமாற் றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 186 ஓட்டங் களைப் பெற்றது.

பந்து வீச்சில் பஞ்சா அணி சார்பில் அவான 2 இலக்குகளையும், சாவால் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

187 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை விரட்டத்தொடங்கியது பஞ்சாப் அணி.

ஆரம்பத்திலே அதிரடியாக ஆடத்தொடங்கிய போதும் இரண்டாவது பந்துப்பரிமாற்றத்தி லேயே முதலாவது இலக்கை இழந்தது. பொம்மேர்ஸ் பாஜ்7 ஓட்டங்களுடன் வெளி யேறினார்.

அடுத்து வந்தார் மார்ஸ். மார்ஸ் அதிரடியாக ஆட்டத்தைத் தொடர மன்டீப் சிங் 15 ஓட்டங் களுடன் சர்மாவின் பந்தில் ரெய்னா விடம்பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். மார்ஸுடன் இணைந்தார் டேவிட் ஹசி அவரும் நிலைக்கவில்லை. 22 ஓட்டங்களுடன் வெளியேறினார். மார்ஸுடன் இணைந்தார் மில்லர். இதுவரை வெற்றிக் கனவுடன் இருந்த சென்னைக்கு இந்த இணை பெரும் சிம்மசொப் பனமாக மாறியது. இருவரும் அதிரடியில் இறங்க மெல்ல மெல்ல சென்னையின் வெற்றி வாய்ப்பு ஆட்டம் காண தொடங்கியது.

இந்த இணையைப் பிரிக்க சென்னை அணி பல வியூகங்களை வகுத்தது. இறுதியில் 19 ஆவது பந்துப் பரிமமாற்றத்தில் மார்ஸ் 73 ஓட்டங்களு டன் பிராவோவின் பந்தில் 'போல்ட்டானார்' அடுத்த பந்தில் குர்கீர்த் சிங்கும் வந்த வேகத்தில் பிரவோவின் பந்தில் ஹசியிடம் பிடிகொடுத்து வெளியேற சென்னையின் வெற்றி உறுதியானது.

20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்கு களை இழந்து 171 ஓட்டங்களை மாத்திரமே பஞ்சாப் அணி பெறமுடிந்தது.

சென்னை சார்பில் பந்து வீச்சில் பிராவோ 3 இலக் குகளையும் , சர்மா 2 இலக்குகளையும், அஸ்வின் ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக அதிரடி சதம் விளாசி வெற்றிக்கு வித்திட்ட ரெய்னா தெரிவானார்.[16]

அதி கூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரருக்கான ஒரேஞ் தொப்பி ஹசி வசமானது.

## புகைப்பட கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 3 யாழ். மாவட்டத்தில் எடுக்கப்பட்ட தெரு வெளி கறுப்பு வெள்ளை புகைப்படங் களின் கண் காட்சி இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். பல் கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது. யாழ். பல்கலைக் கழக ஊடகக் கற்கை கள் அலகு மற்றும் ஊடகவளங்கள் பயி ற்சி மையத்தின் ஏற் பாட்டில் நடைபெற வுள்ள இந்தக் கண் காட்சியைத் தொடர் ந்து பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல் கலைக்கழக கைலா சபதி கலையரங்கில் குறும்பட வெளி யீட்டு நிகழ்வும் இடம் பெறவுள்ளது.
(16-ரி)


## விண்ணக வாழ்வில் 9 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



அன்னை அரவணைப்பில் 20.08.1970
ஆண்டவன் அரவணைப்பில் 03.05.2004

**தில்லைநாதன் கெங்காதரன்**

(உரிமையாளர்
தரன் மரக்காலை - கொக்குவில்)

**பாசமுடன் நீ இருந்த எம் உறவதனை**
**நேசமதில் மகிழ வைத்தாய்.**
**கருணையுடன் தரணியில் நீ இருந்து**
**எமக்காகப் பரணிபாட உழைத்தாய்**
**காலம் உமை கவர்ந்து சென்றாலும் கலையாமல்**
**எமைக் காத்திருக்கின்றாய் காற்றலையாக**
**என்றும் அழிவில்லா உம் நினைவுக்கு**
**சிந்தை மிகு நொந்து சிந்துகின்றோம் கண்ணீர்ப் பூக்களை.**

தரன் மரக்காலை, நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு. (36999)(2.6)
**- குடும்பத்தினர்.**

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் சேர்வைத்திலிங்கம் துரைச்சாமி வீதியில் English Conment க்கு முன்பாக 3 அறைகள், குளியலறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 077 3900669

## தேவை

யாழ். நகரில் இயங்கும் பல்பொருள் வாணிபத்துக்கு கணக்கு எழுதுவதற்கும், பொருள்களை சிட்டைப்படி பொதி செய்வதற்கும் ஆள்கள் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது.

280, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:- 0212222742, 0776280685

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

**செல்வி குழந்தை தங்கமுத்து**
(ஓய்வுபெற்ற ஆசிரியை)



*பேரன் சொன்னசொல் வேதமென நானேற்று*
*பெரியதாய் உந்தனுக்கு மகனாகி திகழ்ந்தேனே*
*மற்றவர் கண்ட சுகம் அனுபவித்தும் அறியேனே*
*மாசிலா அன்புதனை உன்னிடத்தில் வைத்தேனே*
*உற்றவர் உறவினர் பழமர வெளவ்வால் போல்*
*உனைவருத்தி இலாபமுற்று தனித்துமே விட்டனரே*
*கற்றவை மனதிலிருத்தி கடைசிவரை கடமைகளை*
*குறையேதுமின்றி நிறைவேற்றி மனத்திருப்தி கொண்டேனே.*

அன்னாரின் வீட்டுக்கிருத்தி நிகழ்வுகள் இன்று 03.05.2013 வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.100, அம்மன் வீதி, திருநெல்வேலி. பெறாமகன்

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகருக்கு அண்மையில் சிறிய குடும்பம் வசிப்பதற்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0772639893

## மரண அறிவித்தல்



### தில்லையம்பலம் அம்பலவாணர்

யாழ். பிறவுன் வீதியைப் பிறப்பிடமாகவும், நந்தாவில் ஒழுங்கை தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம் பலம் அம்பலவாணர் நேற்று (02.05.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் -நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாளன், கார்த்திகா (ஆசிரியை, யாழ். கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை) மயூரன் (பிரதேச செயலம், உடுவில்), அமுதினி ஆகியோரின் தந்தையும், பானுமதி (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), குண நாதன், சாந்தநாயகி (ஆசிரியை, தாவடி இ.த.க. பாடசாலை) ஆகியோரின் மாமனும், தியாகராஜா, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சண்முகலிங்கம், பரமேஸ்வரி ஆகியயோரின் சகோதரனும், சிவலோகநாதன், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் புனிதவதி, இராசலட்சுமி, காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் மைத்துனரும், சதுர்த்திகன், பிரணவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2013) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியள வில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் ஒழுங்கை, தாவடி,
கொக்குவில். 0212053051
தகவல்: [illegible]

## கணினி திருத்தும் பாடநெறி
## Computer Hardware Repairing

- ★ குறுகிய காலத்தில் 100% தொழில் உத்தரவாதத்துடன் உயர் வருமானம் தரும் சான்றிதழ் பயிற்சிப் பாடநெறி
- ★ உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் உயர் வருமானம் தரும் தொழிற் துறைக்கு இட்டுச்செல்லும்
- ★ கணினி பழுதுபார்ப்புத் துறையில் Diploma பாடநெறி (சர்வதேச தரத்திலான சான்றிதழ்) அனுபவம் வாய்ந்த ஆசிரியரின் வழிகாட்டல்
- ★ பாடநெறி முடிவின்போது எந்த வொரு கணினியையும் 100% பழுதுபார்க்கும் இயலுமை.

Computer booting, Assembling, Troub troubleshooting (wxp, w7, w8, linux)etc.

புதிய பிரிவுகள் உடனடியாக ஆரம்பிக்கப் படவுள்ளதால் பதிவுகளுக்கு முந்துங்கள்

IISEEES NALLUR CAMPUS
762, Point pedro Road, Nallur.
021 2224728/0777444225

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி நிறுவனத்தின் ஆசிரியரான **அ.மயூரன்** அவர்களின் பாசமிகு தந்தை

**தில்லையம்பலம் அம்பலவாணர்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகி
ஆசிரியர்கள், மாணவர்கள்,
**நிரு ரியூசன் சென்ரர்,**
கோண்டாவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கயிறு இழுத்தலில் மின்னொளி முதலிடம்

கைதடி, மே 3
கைதடி வடக்கு நவசனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கைதடி வடக்கு நவசக்தி விளையாட்டுக் கழகம் கைதடிப் பிரதேச ரீதியாக நடத்திய கயிறுழுத்தல் போட்டியில் கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.
இரண்டாம் இடத்தை கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் பெற்றுக்கொண்டது.
மேற்படி தொடரில் கைதடியைச் சேர்ந்த எட்டுக் கழகங்கள் பங்கு கொண்டிருந்தன. பலத்த பலப்பரீட்சையின் பின்னர் இறுதிச் சுற்றுக்கு இவ்விரு அணிகளுமே தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-288)

## கூடைப்பந்து இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம் மே 3
யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக் கிழமை யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ற-23)

## மரதன் ஓட்டம் நாளை

யாழ்ப்பாணம், மே 3
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகத்தினதும் தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தினதும் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடந்தப்படும் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி நாளை சனிக் கிழமை காலை 6 மணிக்கும், சைக்கிள் ஓட்டப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணிக்கும் இடம்பெறவுள்ளது என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-23)

## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், மே 3
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகத்தினதும் தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தினதும் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடந்தப்படும் உதைபந்தாட் டச் சுற்றுத் தொடரில் இன்று வெள்ளிக் கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-
பி.ப 3.30 மணி
குருநகர் பாடும் மீன் வி.க. எதிர் ஜேம்ஸ் வி.க.
பி.ப 4.30 மணி
ஞானகலா வி.க. எதிர் குருநகர் பாடும்மீன் வி.க. 'பி' அணி. (ற-23)

# 'இந்துக்களின் மாபெரும் போர்'

## இன்று கொழும்பு இந்துக் கல்லூரி மைதானத்தில்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



அமர்ந்திருப்பவர்கள்: இடமிருந்துவலமாக:
எஸ்.நிமலன் (உப அதிபர்),திருமதி எஸ்.சுரேந்திரன் (உப.அதிபர்), கே.பகீரதன் (பொறுப்பதிகாரி), வி.வாமணன் (அணித்தலைவர்), வி.கணேசராஜா (அதிபர்), ஜே.சஜீகன் (உப தலைவர்), கே.கே.வாசவன் (அணி முகாமையாளர்),பி.ஜெயரட்ணராஜா (விளையாட்டுப் பொறுப்பதிகாரி), பி.ஞானதேசிகன் (பிரதி அதிபர்)
நிற்பவர்கள்: 1ம் வரிசை: பி.ஜனவத்சசர்மா, ஜே.கல்கோகன், ஆர்.றுக்ஸ்மன், ஏ.கௌரிசங்கர், எஸ்.சாரங்கன்,வி.குகானன்,எம்.சிவஜெனன், ஜி.மதுஷன், என்.நிலோஜன் டிலக்ஷன், ஜே.உதயன்
2ம் வரிசை: ரி.பானுகோபன்,ஆர்.கஜானந்,வி.சிந்துஜன்,எம்.தூவாரகன்

கொழும்பு இந்துக் கல்லூரி



நிற்பவர்கள்: இடமிருந்துவலமாக:
வி.சுதர்ஷன், எஸ்.தினேஷ், என்.கிருஷான், எஸ்.ஹரிகரன், வை.தர்ஷிகாந்த், எஸ்.ஸ்டீபன், ஏ.சுசந்தன், எஸ்.ஹரேந்திரன், என்.எஸ்.ஹஷான் கவின் கௌதம், எஸ்.குமராஷன், எஸ்.மதுஷன்,
அமர்ந்திருப்போர்:
பி.இந்திரஜித் (விக்கெட் காப்பாளர்), ஏ.மானுவல் (பயிற்றுவிப்பாளர்), ஆர்.திவாகரன், ஐ.இராசரத்தினம் (அதிபர்), ஏ.யசோதரன் (அணித்தலைவர்), எப்.கமில்ஸ் (விளையாட்டுப் பொறுப்பதிகாரி), எக்ஸ்.ஜீவிதாசன்,

யாழ்ப்பாணம், மே 3
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பும் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடத்தப்படும் 'இந்துக்களின் மாபெரும் போர்' இன்றும் நாளையும் கொழும்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.
1982ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'இந்துக்களின் மாபெரும் போர்' நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் இடையில் தடைப்பட்டிருந்தது.
இந்த நிலையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'இந்துக்களின் மாபெரும் போர்' துடுப்பாட்டச் சமர் இன்று இரசிகர்களின் ஆதரவுடன் ஆரம்பமாகவுள்ளது.
களமிறங்கும் இரு அணிகளும் பலம்பொருந்திய அணிகளாகக் காணப்படும் நிலையில் 'இந்துக்களின் மாபெரும் போர்' விறுவிறுப்பானதாக அமையும் என்று எதிர்பார்ப்பை இரசிகர்களிடம் ஏற்படுத்தியுள்ளது. (ற)

## ஜொனியன், ஒல்கோட்ஸ் வென்றன

யாழ்ப்பாணம், மே 3
யாழ் .மாவட்ட ஹொக்கிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடந்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான ஹொக்கிச் சுற்றுத் தொடரில் இடம்பெற்ற ஆட்டங்களில் ஜெனியன்ஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் கிறிஸ் கோப்பஸ் விளையாட்டுக் கழக அணி ஆகியவை வெற்றி பெற்றன.
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஒல் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜெனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் ஜெனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. அதனை தொடர்ந்து இடம் பெற்ற மற்றைய ஆட்டத்தில் கிறாஸ்கோப்பஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் கிறாஸ்கோப்பஸ் விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

### தெல்லிப்பழை நாமகள் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டம்:


## ஊரெழு றோயல், யங்கென்றிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், மே 3
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகத்தினதும் தெல்லிப்பளை நாமகள் சனசமுக நிலையத்தினதும் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடந்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து 'ஏஎல்' விளையாட்டுக் கழக அணி மோதியது. அதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 8:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் இளவாலை யங்கொன்றிஸ் விளையாட்டுக் கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ற-23)

# 'நண்பர்களின் சமர்'

## இன்று ஆரம்பம்

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி



கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய அணி



கனகரெட்ணம் மத்திய மகா வித்தியாலய அணிக்கும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்கும் இடையே நடைபெறும் 'நண்பர்களின் சமர்' கிரிக்கெட் ஆட்டம் இன்றும் நாளையும் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஆரம்ப நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலனும், வலயக் கல்விப் பணிப்பாளர் உதயகுமாரும் கலந்து கொள்வர். (ற-23)

### கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத் தொடர்

## வெற்றிக் கிண்ணம் ஜொனியன்ஸ் வசம்

வலி.வடக்கு, மே 3
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்திய கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் தொடரில் கிண்ணத்தைச் சுவீகரித்தது ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம். கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியும் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் கைகொடுக்காத போதும் நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் கடினமான வெற்றி இலக்கை நிர்ணயிக்க முடிந்தது.
நடுவரிசை துடுப்பாட்ட வீரர்களின் நிதானமான ஆட்டத்தால் 39.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி.
ஜொனியன்ஸ் அணி சார்பாக சி.அகிலன் 5 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள் அடங்கலாக 69 ஓட்டங்களையும், ஆர்.சஞ்சயன் 43 ஓட்டங்களையும், டபிள்யூ. ரஜீவன் ரத்தினம் 32 ஓட்டங்களையும், எஸ்.தக்ஷென் 29 ஓட்டங்களையும், ஏ.அன்புஜன் 28 ஓட்டங்களையும், வி.காண்டீபன் 24 ஓட்டங்களையும், ப.லவேந்திரா 17 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 23 ஓட்டங்கள் பெறப்பட்டன.
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி சார்பில் பந்துவீச்சில் ஈ.ஜெயரூபன் 7.4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 4 இலக்குகளையும், வி.தேவவிதுரன் 08பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 4 இலக்குகளையும், என்.தரணிதரன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
275 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற கடின வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பாடத் தொடங்கியது யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் நடுவரிசை வீரர்கள் சிறிது நம்பிக்கை கொடுத்தார்கள். நடுவரிசை துடுப்பாட்ட வீரர்களின் போராட்டம் கைகொடுக்காத நிலையில் 37.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது. பல்கலைக்கழக அணி. 26 ஓட் டங்களால் கிண்ணத்தைத் தன்வசமாக்கியது ஜொனி யன்ஸ் அணி.
எஸ்.அச்சுதன் 5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 54ஓட்டங்களையும், என்.ஜனார்த்தனன் 46 ஓட்டங்களையும், எ.ஜெயந்திரன் 34 ஓட்டங்களையும், எஸ்.தசிதரன் 23 ஓட்டங்களையும், எஸ்.சங்கர் 18 ஓட்டங்களையும், வி.தேவ விதுரன் 15 ஓட்டங்களையும், ஆர்.தசரிதன் 10 ஓட்டங்களையும் பல்கலைக்கழக அணிசார்பாகப் பெற்றனர். உதிரிகளாக 30ஓட்டங்களும் பெறப்பட்டன.
ஜொனியன்ஸ் அணி சார்பில் பந்துவீசிய ப.லவேந்திரா 7.4 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 3 இலக்குகளையும், ஆர்.சஞ்சஜன் 7 பந்துப் பரிமாற் றங்கள் பந்து வீசி 3 இலக்குகளையும், எடக்சன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 2 இலக்குகளையும், பார்ந்தன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
ஆட்டநாயகனாக ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஆர்.சஞ்சயன் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த துடுப்பாட்ட வீரராக சி.அகிலனும், சிறந்த களத்தடுப்பாளராக வி.காண்டீபனும் தெரிவு செய்யப்பட்டனர். பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த என்.தேவவிதுரன் சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவானார். (ற-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரியல் மட்ரிட்டை வீழ்த்தியது போரஷ்யா டார்ட்மென்ட்





சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில் ரியல் மாட்ரிட் அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது போரஷ்யா டார்ட்மண்ட் அணி.

ஜெர்மனியில் உள்ள டார்ட்மண்ட் நகரில் நடைபெற்று வரும் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் அரையிறுதிக்கான முதல் சுற்று ஆட்டத்தில் போரஷ்யா டார்ட்மண்ட் அணி 4-1 என ரியல் மாட்ரிட்டை வீழ்த்தியது.

ஸ்பெயினில் உள்ள மாட்ரிட்டில் நடந்த அரையிறுதிக்கான இரண்டாவது சுற்று ஆட்டத்தில் போரஷ்யா டார்ட்மண்ட், ரியல் மாட்ரிட் அணிகள் மீண்டும் மோதின. போட்டியின் முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் ஏதும் பெறவில்லை. பின் இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட ரியல் மாட்ரிட் அணிக்கு கரீம் பென்ஜீமா (82வது நிமிடம்), செர்ஜீயோ ராமோஸ் (88) ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். இதற்கு டார்ட்மண்ட் அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. ஆட்டமுடிவில் ரியல் மாட்ரிட் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது. (ற)

# அணித்தலைவரே காரணம் குற்றஞ்சாட்டும் அப்ரிடி



சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் தான் நீக்கப்பட்டமைக்கு அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் காரணம் என்று பாகிஸ்தான் சகலதுறை ஆட்டக்காரர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

'மினி உலகக் கிண்ணம்' என்றழைக்கப்படும் சாம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் அடுத்த மாதம் 6ஆம் திகதி முதல் 23ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. 8 அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரில் பாகிஸ்தான் அணியில் இருந்து அதிரடி சகலதுறை வீரரான அப்ரிடி நீக்கப்பட்டார்.

அதனால் அதிர்ச்சிக்குள்ளாகி இருக்கும் அப்ரிடி ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:

''சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான அணியில் இருந்து நான் நீக்கப்பட்டமை, அணித்தலைவர் (மிஸ்பா உல்-ஹக்) எடுத்த முடிவாகும்.

அணித்தலைவர் குறிப்பிட்ட ஒரு வீரரை வேண்டாம் என்று சொல்வதில் ஒன்றும் பெரிய விடயம் கிடையாது. கிரிக்கெட்டை பொறுத்தவரை அணியில் இருப்பதும், நீக்கப்படுவதும் வழக்கமான ஒன்று தான். பல பாகிஸ்தான் வீரர்களை விட நான் ரொம்ப நன்றாக இருக்கிறேன். இன்னும் என்னால் சிறப்பாக விளையாட முடியும்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்காக மேலும் சில ஆண்டுகள் என்னால் பங்கேற்க முடியும் என்று கருதுகிறேன். கடினமாக உழைத்து, விரைவில் அணிக்கு திரும்புவேன்'' என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# தவான் அதிரடி வென்றது ஹைதராபாத்




மும்பை இந்தியன்ஸ் அணியுடனான லீக் ஆட்டத்தில் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. அதிரடியாக விளையாடிய ஷிகார் தவான் ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்கள் விளாசி அசத்தினார்.

ஹைதராபாத், ராஜீவ் காந்தி சர்வதேச ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் நடந்த இந்த ஆட்டத்தில், நாணயச்சுழற்றியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பவீரர்களாக ஸ்மித், சச்சின் களமிறங்கினர். இந்த இணை முதல் இலக்குக்கு இணைப்பாட்டத்தில் 4.2 பந்துப்பரிமாற்றத்தில் 32 ஓட்டங்களைச் சேர்த்தது. சச்சின் 14 ஓட்டங்கள் எடுத்து இஷாந்தின் வேகத்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த தினேஷ் கார்த்திக்கும் ஓட்டமேதும் பெறாது இஷாந்தின் வேகத்தில் கரண் ஷர்மாவிடம் பிடிபட, மும்பை அணி 32 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து தடுமாறியது.

இந்த நிலையில், ஸ்மித், ரோகித் ஷர்மா இணை பொறுப்புடன் ஆடி 42 ஓட்டங்களைச் சேர்த்தது. ரோகித் 22 ஓட்டங்களுடன் அமித் சுழலில் இஷாந்த் வசம் பிடிபட்டார். சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த ஸ்மித் 38 ஓட்டங்கள் எடுத்து (40 பந்துகளில், 3 பவுண்டரி, 2 சிக்ஸர்) மிஷ்ரா சுழலில் எல்.பி.டபுள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

மும்பை இந்தியன்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் 4 இலக்குகள் இழப்புக்கு 129 ஓட்டங்களை எடுத்தது. போலார்ட் 14 ஓட்டங்கள் மற்றும் ராயுடு 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். சன்ரைசர்ஸ் பந்துவீச்சில் இஷாந்த், அமித் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

அடுத்து 130 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சன்ரைசர்ஸ் களமிறங்கியது. அக்ஷத், தவான் இருவரும் துரத்தலை தொடங்கினர். அக்ஷத் 7 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஜான்சனின் வேகத்தில் ஸ்மித் வசம் பிடிபட்டார். அடுத்து தவானுடன் சங்ககார இணைந்தார். இருவரும் 2 ஆவது இணைப்பாட்டத்தில் 37 ஓட்டங்கள் சேர்த்தனர். சங்ககார 21 ஓட்டங்கள் எடுத்து ஹர்பஜனின் சுழலில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து தவான் , விஹாரி இணை பொறுப்புடன் விளையாடியது. தவான் அரை சதம் அடித்து அசத்தினார். இலக்கை நெருங்கிய நிலையில் விஹாரி 25 ஓட்டங்களுடன் குல்கர்ணியின் வேகத்தில் ராயுடு வசம் பிடிபட்டார். சன் ரைசர்ஸ் 18 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 130 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்றது. தவான் 73 ஓட்டங்களுடனும் (55 பந்துகள், 9 பவுண்டரி, 1 சிக்ஸர்), சமி ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இஷாந்த் ஷர்மா ஆட்டநாயகன் விருது பெற்றார். (ற)

# பார்சிலோனாவை வீழ்த்தியது பேயர்ன்



பார்சிலோனா, மே 3

யு.ஈ.எப்.ஏ., சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடரின் இரண்டாவது அரையிறுதிச் சுற்றில் பேயர்ன் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது

பார்சிலோனா அணி மற்றும் பேயர்ன் அணி மோதிக் கொண்ட அரையிறுதி ஆட்டத்தில் 3:0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

பார்சிலோனாவின் நட்சத்திர வீரர் மெஸ்சி விளையாடாதது அந்த அணிக்குப் பின்னடைவாக இருந்தது. அர்ஜுன் ராப்பென் அடித்த ஒரு கோலும், பார்சிலோனாவின் ஜெரார்ட் பிக் எதிரணியினருக்கு சாதகமாக அடித்த ஒரு கோலும், ஆட்ட இறுதியில் தோமஸ் முள்ளர்சின் ஒரு கோலும் பேயர்னின் வெற்றிக்கு உதவின.

எதிர்வரும் 25 ஆம் திகதி வெம்ப்ளியில் நடைபெற இருக்கும் இறுதி ஆட்டத்தில் பேயர்ன் அணி டார்ட்மண்ட் அணியுடன் மோத இருக்கின்றது. (ற)

# நைட் ரைடர்ஸை வீழ்த்தியது டெல்லி டேர்டெவில்ஸ்



கொல்கத்தா நைட் ரைடர்சுடன் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் வென்றது.

ராய்ப்பூர், வீர் நாராயண் சிங் சர்வதேச மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற நைட் ரைடர்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக பிஸ்லா மற்றும் அணித்தலைவர் கம்பீர் ஆகியோர் களமிறங்கினர். ஆரம்பமே நைட் ரைடர்ஸுக்கு அதிர்ச்சியாக இருந்தது. [illegible] யேறினார்.

அவரைத் தொடர்ந்து பிஸ்லா 4 ஓட்டங்ளை எடுத்து உமேஷ் யாதவ் வேகத்தில் பெவிலியன் திரும்பினார். அதிரடியாக விளையாடி நம்பிக்கை கொடுத்த யூசுப் பதான் 20 ஓட்டங்கள் எடுத்து (16 பந்துகளில் 2 பவுண்டரி, 1 சிக்சர்) மார்க்கெல் வேகத்தில் இர்பான் வசம் பிடிபட்டார். மோர்கன் 10, கலிஸ் 12 ஓட்டங்கள் எடுத்து பெவிலியன் நோக்கி அணிவகுப்பு நடத்த, நைட் ரைடர்ஸ் அணி 50 ஓட்டங்களுக்கு 5 முக்கிய விக்கெட்டுகளை இழந்து திணறியது.

[illegible] ஓட்டங் கள் [illegible] வேகத்தில் ஜாதவிடம் பிடிபட்டார்.

கடைசி கட்டத்தில் பாட்டியா, நார்வால் இணை அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவிக்க முயன்றது. நார்வால் 23 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார். நைட் ரைடர்ஸ் 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 136 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டேர்டெவில்ஸ் அணி 17.5 ஓவரில் 3 இலக்குகள் இழப்புக்கு 137 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்றது. டேர்டெவில்ஸ் சார்பாக வோர்னர் 62 ஓட்டங்களையும், சந்த் 37 ஓட்டங்களையும் பெற்றனர். (ற)

## தோல்விக்கு நாமே பொறுப்பு –கம்பீர்

ராய்ப்பூரில் நேற்றுமுன்தினம் நடந்த ஐ.பி.எல். ஆட்டத்தில் டெல்லி டேர்டெவில்ஸ் 137 ஓட்டங்கள் எடுத்து 7 இலக்குகள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வெற்றி கொண்டது.

இந்த வெற்றி குறித்து டெல்லி அணித்தலைவர் ஜெயவர்த்தனா கூறும்போது,

''ஆட்டத்தின் சூழ்நிலையை எங்களுக்கு ஏற்ற வகையில் சாதகமாக்கி கொண்டோம். களத்தடுப்பு மிகவும் சிறப்பாக இருந்தது. ரசிகர்களின் ஆதரவு எங்களை உற்சாகப் படுத்தியது'' என்றார்.

தோல்வி குறித்துக் கருத்துத் தெரிவித்த கொல்கத்தா அணியின் தலைவர் காம்பீர் கூறுகையில்,

''எனது ஆட்டமிழப்பு முட்டாள் தனமானது. தோல்விக்கு நாங்களே முழு பொறுப்பு. துடுப்பாட்டத்திலும் சரி, பந்து வீச்சிலும் சரி நாங்கள் ஒற்றுமையுடன் செயற்படவில்லை.

இனிவரும் ஒவ்வொரு ஆட்டத்திலும் கவனத்துடன் விளையாட வேண்டும். எங்களுக்கு ஒவ்வொரு ஆட்டமும் வாழ்வா? சாவா? என்ற நிலை தான் உள்ளது'' என்று தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி சுவீகரிப்பு சட்டவிரோதம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுத் தேர்தலை கருதியா காணி சுவீகரிக்கப்படுகின்றன?
இயற்கை நீதிச் சட்டத்தின் பிரகாரம் சுவீகரிக்கப்படும் காணியைக் காணி உரிமையாளர்கள் அடையாளம் காட்ட வேண்டும்.
ஒருவரிடமிருந்து குறைந்தளவு காணியையே பொதுத்தேவை கருதி சுவீகரிக்க முடியுமென்று காணி சுவீகரிப்புச் சட்டத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அதிகளவு காணிகள் இருப்பவர்களிடமிருந்து குறைந்த காணிகளையே சுவீகரிக்க முடியும்.
காணி உச்சவரம்புச் சட்டத்தினூடாகப் பெறப்பட்ட காணிகள் இருக்குமாயின் அவற்றையே பொதுத் தேவைக்குப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே இது சட்டவிரோதமான சுவீகரிப்பு.
வலி.வடக்கில் 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணிகளும் வளமான காணிகள். ஒட்டுமொத்த யாழ்ப்பாணத்தின் இதயம். இதைச் சுவீகரிப்பதன் மூலம் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை முடக்கப் பார்க்கிறார்கள்.
விளைச்சல் தரும் நிலங்களை சுவீகரிக்க முடியாதென்று சுவீகரிப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.
நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து எங்களுக்கு நீதி கிடைக்கவில்லையாயின் மாத்திரமே நாம் மனித உரிமைகள் சமவாயத்தின் பிரகாரம் செல்ல முடியும்-என்றார். (த-5)

## சிறிதரன் எம்.பி. விசாரணைக்கு அழைப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவித்து அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்கு நேற்றுக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சென்றுள்ளனர். எனினும் நாடாளுமன்ற உறுப்பினர் வீட்டில் இல்லையென்று தெரிவிக்கப்பட்டதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினரின் கைத்தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளனர்.

தாம் இப்போது விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தொலைபேசியில் கூறியுள்ளனர். எனினும் தனக்கு இன்று (நேற்று) நேரமில்லை அவர் தெரிவித்ததையடுத்து விசாரணைத் திகதியை பின்னர் அறிவிப்பதாக அவர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

இதேவேளை கடந்த மாதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன் படையினர் தொடர்பில் இந்திய ஊடகமொன்றுக்குத் தகவல் வழங்கியமைக்காக விசாரணைக்குட்படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## அஸாத் சாலி கைது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடுகளுக்கமைய அவர் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக்க சிறிவர்தன தெரிவித்தார்.
கொலன்னாவை பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்த போது நேற்று காலை அவர் கைதுசெய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட அசாத் சாலி நான்காம் மாடியில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.
இந்தியாவிலுள்ள பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணல் தொடர்பிலேயே பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
நான்காம் மாடிக்கு சென்ற சட்டத்தரணிகள் சிலர் அவரை பார்வையிட்டுள்ளனர். (த)


Vinoth Curtains
யாழ். மண்ணில் அறிமுகமாகிறது
கேட்டின்ஸ் துறையில் நிபுனத்துவம் பெற்ற எம்மால் கேட்டின்ஸ், மெத்தைவிரிப்பு, றெயிலிங், ரோல்ஸ், குசன் கவர், வேற்றிக்கல் லைன்ஸ், வெனிசன் பிற்றிங், புளோர் காபற் வேலைகள் செய்து கொடுக்கப்படுகிறது.
தொடர்பு- மைக்கல்
0774906323,
0777797532
இல-50/1,நாவலர்வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.
(23933)(9.14)

நியூ நெல்சன் லேணர்ஸ் நடத்தும்
வட மாகாண பொது சேவைக்கு சாரதி சேவையின் III ஆம் வகுப்பு பதவிக்கான ஆள்சேர்ப்பு செய்வதற்கான வழிகாட்டல் கருத்தரங்கு
* இடம்- கலைத்தூது கலையகம், 285, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
* காலம்- இன்று (03.05.2013) வெள்ளிக்கிழமை
* நேரம்- பி.ப 1.00 முதல் 5.00 மணி வரை
* போக்குவரத்து விதி முறைகள்
20 வருட காலமாக மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளராக கடமையாற்றிய திரு. வ. பத்மநாதன்
மற்றும்
* பொதுஅறிவு: வளவாளர்-திரு.த.தவசேகர்
பதிவு செய்யும் இடங்கள்
நியூ நெல்சன் லேணர்ஸ்

| | |
|---|---|
| கண்டி வீதி, யாழ்ப்பாணம்- | 021 222 4527 |
| பருத்தித்துறை வீதி, நெல்லியடி- | 021 492 3115 |
| வல்வெட்டித்துறை- | 021 492 3733 |
| சுன்னாகம் | 021 492 3732 |
| சாவகச்சேரி- | 021 492 3114 |

பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்
(36960)(8.11)

மீண்டும் ஒரு புதிய பிரிவு
A/L 2015
கலை, வர்த்தகம்
ஆரம்பம்: 04.05.2013 காலை 8 மணி
D.C.M. யாழ். நகர்

SUBRA சித்தன்கேணி
அரச, உத்தியோகத்தர் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் O/L சிங்கள, ஆங்கில பாட பரீட்சைக்கு தோற்றுவோருக்கானது.
சிங்கள பாடநெறி
விரிவுரையாளர் T.சாம்சன்
சனி, ஞாயிறு 6.00 7.30 வரை
ஆங்கில பாடநெறி
விரிவுரையாளர் சந்திரமௌலி
செவ்வாய், வியாழன்
6.00 7.30 வரை
புதிய பிரிவு ஆரம்பம்-05.05.2015
ஞாயிறு மாலை 6.00 மணி
O/L day Class ஆரம்பமாகின்றது
தினமும் காலை 7.00 முதல் 11.00 வரை வாராந்தம் பயிற்சிப் பரீட்சைகள் வார இறுதி நாள்களில் கடந்த கால வினாவிடை
யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும், தீவக பகுதி மாணவர்களுக்கும் விசேட சலுகை
2015 A/L கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவு II
ஆரம்பம் 05.05.2013 மாலை 3.00 மணி
தனிப்பாட அனுமதி வழங்கப்படும்
2013 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட பிரிவு
தினமும் மாலை 6.00 7.30 மணி வரை
வெற்றித் தேர்வு, புலமைச்சுடர் பரீட்சைகளுடன்
05.05.2013 மாலை 6.00 மணிக்கு ஆரம்பம்.
நிர்வாகி.
(C/8812)(6.7.11)

யாழ் நகரில்
வர்த்தக நிலையம்
குறைந்த முதலீட்டுடன், குறைந்த வட்டி யுடன், வங்கிக்கடன் வசதியுடன், இடவசதிகள் செய்து தரப்படும்.
SMT Developers (Pvt) Ltd.
0777517019
0777428525
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(36906)(23-6)

THE SCIENCE POINT
கன்னாதிட்டி வீதி - யாழ்நகர்.
BIOLOGY
புதிய பாடத்திட்டத்துக்கு அமைய முதல் முறையாக மதிப்பீடு செய்யப்படும் (2013)
பிரயோக உயிரியல்
ஆரம்பம்: 05.05.2013 (ஞாயிறு)
சனி, ஞாயிறு 9.30 - 11.00 A.m.
மீள் பரீட்சார்த்திகளும் அனுமதிக்கப்படுவர்
சு. பொன்திவாகரன்
இரசாயனவியல் மாணவர் கவனத்துக்கு
தொடர் கருத்தரங்கில் மிகமுக்கியமான "மாற்றீடு செய்வது எப்படி கருத்தரங்கு"
ஆரம்பம்: 04.05. சனி 1.30 - 3.30
சனி, ஞாயிறு 1.30 - 3.30, Mon, FRI 3-5.00
By அன்பு
A/L 2014
INORGANIC
ஆரம்பம்: 04.05. சனி 4 - 6
A/L 2015
ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கும் விசேட பிரிவு
ஆரம்பம்: 05.05. ஞாயிறு 4.30
NEW SCIENCE CENTRE
வெலிங்டன் சந்தி அருகில் யாழ்நகர்.

இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ் றோட், இணுவில்.
(இரு இடத்திலும்)
சனி, ஞாயிறு பிரிவுகள்
A/L 2015
கலை வர்த்தகப் பிரிவுகள்
* இதுவரை அனுமதி பெறாத மாணவர்களுக்கு
* மீண்டும் புதிய பிரிவுகள் நாளை ஆரம்பம்
04.05.2013 சனி
நீங்கள் நன்கு அறிந்த யாழ். மாவட்டத்தில் பிரபல்யம்பெற்ற ஆசிரியர் குழுவினால்..!
* உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
Note: எமது மற்ற நிறுவனமான
BARATHY சித்தன்கேணியிலும்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. அங்கும் பிரபல்யம்பெற்ற ஆசிரியர் குழுவினால்..!
* உங்கள் அனுமதிகளை விரும்பிய இடங்களில் பெற்றுக்கொள்ளவும்.
(சி/8818) (10,8,7)

கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப Degree
உயர்தரப்பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும், சித்தியடையத்தவறியோர் FIT கற்கை நெறி மூலமும் பயில முடியும். 1ம் ஆண்டு பூர்த்தியின் போது கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து Diploma சான்றிதழையும் முடிவில் BIT degree தகைமையும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் Computer Engineering USA Microsoft, Cisco, Oracle, BCS, IEEE நிறுவனங்களின் அங்கத்துவத்தையும் பெற்று சிறந்த தொழில் வாய்ப்பையும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெற முடியும். பல்கலைக்கழக மாணவர்களும் இக் கற்கை நெறியை மேலதிகமாக தொழில் வாய்ப்புக்கருதி பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கி உள்ளது. மேலதிக விபரங்களிற்கு 324, பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள MCS ITCAMPUS ஐ நாடவும். தொலைபேசி 772395895.
சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து விருது பெற்ற நிறுவனம்.

தேவை
உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்பு மேற்பார்வையாளர் தேவை.
20-40 வயதுக்குட்பட்டவர்கள்
ஆண்கள் மட்டும் விரும்பத்தக்கது
மாதாந்தச் சம்பளம்:-
பாதுகாப்பு உத்தியோகத்தர்
15,000 ரூபாவுக்கு மேல்

(C/8819)
ஆர்வமுள்ளவர்கள் தங்களின் சுயவிவரக் கோவையுடன் இன்று (03.05.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிமுதல் மாலை 4.00 மணிவரையும், நாளை (04.05.2013) சனிக்கிழமை மு.ப. 10 மணிமுதல் மாலை 4 மணி வரையும் கீழுள்ள முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.
"உதயன் பணிமனை" 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சி[illegible]நாள் - அன்னச்சோடனைக் காட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.